விழி 08 பார்வை 83 ஜூன் 2012

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...



கொடுங் கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போல் - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ!

- மகாகவி பாரதியார்

www.viluthu.org

விலை: 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1800-1246

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

**AHAVILI**
3, Torrington Avenue, Colombo 07
Tel.: 011 250 6272
E-mail: ahavili.viluthu@gmail.com



உள்ளே......

★ கல்வியும் நவீனமயமாக்கமும் 4

★ சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய சட்ட விழிப்புணர்வு 6

★ மனித ஆளுமையில் சுய கட்டுப்பாட்டின் வகிபாகம் 10

★ கற்றல், கற்பித்தலில் உளவியலின் வரலாறும் ஆய்வு முறைகளும் 16

★ பாடசாலையில் தலைமைத்துவத் திறன்களை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்கள் 20

★ கல்வியும் சமூகமும் 24

★ அறிவியல் வெறுப்பு நோயாளிகளும் சிரேஸ்ட இடைநிலை விஞ்ஞானப் பிரிவுகளைக் கொண்ட சில பாடசாலைகளும் 28

★ வணிக விளம்பரங்களாகும் தகவற் தொழிநுட்பப் பாடத்திட்டங்கள் 34

★ மொழித்திறன் விருத்திச் செயற்பாட்டில் வாசிப்பின் இன்றியமையாமை 36

★ விசேட கல்வி தேவைப்படும் சிறார்களை இனங்காணுதல் 40

★ இடைவிலகக் கூடியவர்களுக்கான தொழில் வழிகாட்டல் 42

*அகவிழியில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1800-1246

அகவிழி

மாத இதழ்

ஆசிரியர் :
V.S. இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர் :
சாந்தி சச்சிதானந்தம்

ஆசிரியர் குழு:
க. சண்முகலிங்கம்
திருமதி பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு :
திரு.து. ராஜேந்திரம்
முன்னாள் முதுநிலை விரிவுரையாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கலாநிதி உ. நவரட்ணம்
முன்னாள் ஓய்வு நிலைப்பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி, கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் இரா.வை. கனகரட்ணம்
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு.தை. தனராஜ்
முதுநிலை விரிவுரையாளர், இலங்கைத்திறந்தபல்கலைக்கழகம்

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கைத் திறந்தபல்கலைக்கழகம்

திரு.வீ. தியாகராஜா
சிரேஷ்ட ஆலோசகர், சமூக விஞ்ஞானக் கற்கைகள் துறை,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

திரு.க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

லெனின் மதிவானம்
பிரதி கல்வி வெளியீட்டு ஆணையாளர், கல்வி அமைச்சு

திரு.கே. சாம்பசிவம்
கல்வி முகாமைத்துவ ஆலோசகர்

திரு.ஜி. போல் அன்ரனி
முன்னாள் பிரதி பரீட்சை ஆணையாளர்

திருமதி. அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர், கொழும்பு கல்வி வலயம்



மக்களின் வாழ்க்கையைக் காக்கவும் வளம்படுத்தவும் எத்தனையோ வாய்ப்புக்கள் இருந்தும் நடைமுறையில் எதையும் செய்வதற்கு அக்கறை காட்டாத நிலையில் சர்வதேச சமூகம் 21ம் நூற்றாண்டை அணுகுகின்றமை வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதிலும் கெடுபிடி யுத்தம், பழங்கதையாகி சன நாயகக் கொள்கைகள் தழைத்தோங்கி வரும் இன்றைய சூழ்நிலையில் மனிதன் தனது கற்பனை வளத்தினால் புதுப்புதுக் கொடுமைகளை பிறர் மீது - குறிப்பாக பெண்கள் மீதும், சிறுவர்கள் மீதும் தயக்கமின்றிப் புரிவது மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது. வயதுவந்தவர்கள் மனித உரிமைகள் மீறப்படுவதைத் தடுக்கும் பொருட்டு ஆவன எதனையும் செய்ய இயலாமல் வாழாவிருப்பது மன்னிக்க முடியாததொன்றாகும். பொருளாதார, சமூக, கலாசார, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பகிரமுடியாதவை, உலகளாவியவை என்பதைச் சர்வதேச மனித உரிமைகள் சாசன-மும் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயமும் ஐயந்திரிபற அங்கீகரிக்கின்றன. எனினும் ஒவ்வொரு பிராந்தியத்திலும் உள்ள அனேகமாக எல்லா நாடுகளும் இவற்றைத் தினந்தோறும் மீறியே வருகின்றன.

உலக சமுதாயம் தனது பிள்ளைச் செல்வங்களுக்கு எதையெல்லாம் ஆசிக்கின்றது என்பதை மிகத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கும் ஒரே ஒரு சர்வதேச மனித உரிமை சட்டமாக சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் விளங்குகின்றது. அதன் 54 உறுப்புரைகளும் தனித்துவமான உரிமைகளின் கோவையாக சமூக, பொருளாதார, கலாசார, குடியியல் மற்றும்அரசியல் உரிமைகள் யாவற்றையும் உள்ளடக்கிய ஒரே சாசனமாக விளங்குகின்றது. சிறுவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் சமூக வாழ்க்கையாலும் தமது ஆற்றலுக்கேற்றவாறு வளர்ச்சி பெறவும் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக தெரிவிக்கவும் உரிமையுடைய தனிப்பிறவிகள் என்பதைச் சமவாயம் ஏற்றுக்கொள்கின்றது. இதற்கும் மேலாக மனித சமுதாயத்தின் உய்வு, ஆரோக்கியம், மேம்பாடு ஆகியவற்றை நெறிப்படுத்தும் முன்மாதிரியாகவும் இச்சமவாயம் திகழ்கிறது. அடுத்த தலைமுறையின் வாழ்க்கை எந்தளவிற்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது என்பதைப் பொறுத்தே ஒரு நாட்டின் எதிர்காலம் அமையும் என்ற உண்மையை அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறைசாற்றுகின்றது.

இவ்வகையான சட்ட மற்றும் சிறுவர் உரிமைகள் விளங்குகின்ற போதும் இன்று உலகளவில் நடப்பது என்ன? குடியுரிமைகள், சுதந்திரங்கள், குடும்பச் சூழல் மற்றும் பராமரிப்பு, அடிப்படைச் சுகாதாரம், சேமநலன், கல்வி, ஓய்வு, கலாசார நடவடிக்கைகள், சிறுவர்களுக்கான விசேட பாதுகாப்பு ஆகியவை தொடர்பான பொதுக் கோட்பாடுகள் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றன என்ற விடயங்களில் பல கேள்விகள் எம்முன் எழுந்து நிற்கின்றன. இது இவ்வாறு இருக்க உலகெங்கும் நடைபெறும் போரின் கொடுமைகள் சிறுவர்களையே பெரிதும் பாதிக்கின்றன. கடந்த தசாப்தங்களில் இலட்சக்கணக்கான சிறுவர்கள் ஆயுதப் போரில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பல இலட்சக்கணக்கானோர் அங்கவீனர்களாயுள்ளனர். அகதிமுகாம்களில் போர்கள் முடிவுறும் நாட்களுக்காக கோடிக்கணக்கான சிறுவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஏராளமான சிறுவர், சிறுமியர் போரினால் மறைமுகமாகப் பாதிப்படைந்துள்ளனர். பாடசாலைகள், சிகிச்சை நிலையங்கள் ஆகியன மூடப்பட்டு அழிந்து போனமை, உணவு உற்பத்தி தடைப்பட்டமை, தடுப்பு மருந்து ஏற்றல் போன்ற அடிப்படைச் சேவைகள் இழக்கப்பட்டமை ஆகியவற்றால் இச்சிறுவர்களின் வளர்ச்சியும் மேம்பாடும் மழுங்கடிக்கப்பட்டுள்ளன. குண்டுகளுக்கும் வேட்டுக்களுக்கும் தப்பிய இலட்சக்கணக்கானோர் இளம்பிள்ளை வாதம் மற்றும் சின்னமுத்து போன்ற பல நோய்களுக்கு பலியாகுகிறார்கள். சாதாரண அன்டிபயோட்டிக் மருந்து கூட கிடைக்காததனால் கண், காது தொடர்பான சாதாரண தொற்று நோய்கள் கூட அவர்களைப் பாதிக்கின்றன. இதனால் கண்பார்வை இழப்பிற்கும் செவிப்புலன் இழப்பிற்கும் வழிவகுக்கின்றன. இவ்வாறு சிறுவர், சிறுமியர் பற்றிய பிரச்சினைகள் சொல்லிலடங்கா.

இத்தகைய பிணக்குகள் காணப்படும் நாடுகளிலும் சமூகங்களிலும் எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள் சிறுவர்களே. ஆனால் மிருகத்தனம் கோரத்தாண்டவம் ஆடும் நாடுகளில் இளமைப் பராயத்தைப் பறிகொடுத்த சிறுவர்களிடமிருந்து எந்த வகையான எதிர்காலத்தை நாம் எதிர்பார்க்க முடியும்? இலங்கையிலும், கடந்த மூன்று தசாப்தங்களில் நடைபெற்ற போர் முடிவிற்கு வந்தாலும் சிறுவர் சிறுமியர் மீதான உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதை அன்றாடம் ஊடகங்கள் மூலம் அறிகிறோம். கட்டுப்பாடும் கண்ணியமும் மிக்க சமூகங்களாகக் கருதப்பட்ட வடகிழக்குப் பகுதிகளில் கூட சிறுவர் சிறுமியர் மீதான பாலியல் வல்லுறவுகள், துஷ்பிரயோகம், என்பன அதிகரித்து வருவதையும் காண்கிறோம். ஏன் இந்த நிலைமை. இந்நிலைமைகளுக்கு யார் காரணம். இதற்கெல்லாம் தீர்வை எங்கே தேடுவது போன்ற பல கேள்விகளை எழுப்பினாலும் நாம் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அடிப்படை நம் கடந்தகால செயற்பாடுகள் என்று கூறுதல் பொருத்தமாயிருக்கும். நம் செயற்பாடுகளுக்கு அடிப்படை நம் சிந்தனைகள்,எண்ணங்கள் மற்றும் உணர்வுகள், உணர்ச்சிகள். ஆகவே இவற்றில் நாம் விழிப்பாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

இன்று சிறுவர் உரிமைகள் தொடர்பாகவும் வீணாகும் வாய்ப்புக்கள் தொடர்பாகவும் பாடசாலைச் சமூகம் மிக விழிப்புடன் இருக்க வேண்டியது அவசிய மாகிறது. பாடசாலைகளுக்குள் நடைபெறும் முறை கேடுகளை கண்டும் காணாமல் இருப்பதும் அல்லது அவற்றிக்கு இசைந்து போவதும் பாடசாலைச் சமூகம் முழுமைக்கும் அபகீர்த்தியையும் வீழ்ச்சியையும் தரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. துரதிஷ்ட வசமாக தற்போது நாட்டில் குடும்பச் சூழலை இழந்த குழந்தைகளின் பிரச்சினைகளுக்கு பரிகாரமென்று எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை. யாவர்க்கும் கல்வி என்று உரத்துக் கோசமிட்டாலும் குடும்பங்களை இழந்த குழந்தைகளின் கல்வி மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது.கல்வி மட்டுமல்ல அவர்களது வாழ்வும் எதிர்காலமும் நமட்பிக்கையற்றதாகவே இருக்கிறது. இவையெல்லாம் எமது சமூகத்தில் இருந்து நீக்கப்படுவதற்கு நாம் என்ன செய்ய முடியும் என்றால், ஒவ்வொரு தனிமனிதனும் தனி மனித மாற்றத்தில் இருந்து சமூக மாற்றத்தை நோக்கி நகர வேண்டும். அதற்கு ஒவ்வொரு கணமும் விழிப்பாக இருப்தோடு அர்ப்பணிப்பும் உழைப்பும், உடலோடும் உள்ளத்தோடும் இணைந்துவிடுமாயின் சிறிதளவேனும் சாத்தியமாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இச்செயற்பாடுகளுக்கும் உழைப்புக்குமான ஓர் கல்விசார் சமூகத்திற்கான சஞ்சிகையாக அகவிழியை வெளியிட்டு வருகிறோம். ஒவ்வொரு ஆக்கங்களும் பல்வேறு கருப்பொருட்களை தாங்கி வருகின்றது. கற்க வேண்டியதும் சமூகத்தின் மீதான பார்வையை செலுத்த வேணடியதும் ஆசிரியர் சமூகத்தின் மிகப் பெரிய கடப்பாடாகும். இதில் இருந்து நீங்கள் விலகமாட்டீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

V.S. இந்திரகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியும் நவீனமயமாக்கமும்

**பேராசிரியர் சோ. சந்திரசேகரம்**

*முன்னாள் கல்விப் பீடாதிபதி, கொழும்பு பல்கலைக்கழகம்*

நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் கல்விச் செயற்பாட்டின் பங்களிப்புக்குப் பெரும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வந்துள்ளது. இதனால் கல்வி, அபிவிருத்திக்கு வேறு வழிகளில் செய்யும் பங்களிப்பு என்னும் விடயம் அதிகமாக ஆராயப்படவில்லை. அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சியை மட்டுமன்றி பல சமூக மேம்பாடுகளையும் உள்ளடக்கும் ஒரு எண்ணக்கருவாகும். வாழ்க்கைத்தரம், நவீனமான உளப்பாங்குகள், விழுமியங்கள், நம்பிக்கைகள், அடிப்படையான மனித தேவைகள் நிறைவு செய்யப்படல் போன்ற அம்சங்கள், அபிவிருத்தியின் சமூக பரிமாணங்களாகும், இவ்வம்சங்களில் மேம்பாடு காணப்படாவிடில், ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் விளைவுகளில் தடைகளும் பாதிப்புகளும் ஏற்படும். இந்நிலையல் கல்வி, இம்முக்கிய அம்சங்களில் ஏற்படுத்தும் பாதிப்பைக் கருத்திற் கொள்ளுமிடத்து, கல்விக்கும் அபிவிருத்திக்குமிடையில் உள்ள தொடர்பு பற்றிய ஒரு விரிவான பார்வையைப் பெறமுடியும்.

கல்வியை அபிவிருத்திக்குப் பயன்படுத்தல் தொடர்பான கொள்கை உருவாக்கமும் திட்டமிடலும், 'நவீனமயமாக்க' அணுமுறையினைப் பின்பற்றுவதாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில் "நவீனமயமாக்கம் என்னும் சிந்தனையில் உட்பொருள், அதன் பயன்பாடு என்பனபற்றி அறிய வேண்டியுள்ளது. ஆயினும் இவ்வெண்ணக்கரு பற்றிய கருத்து வேறுபாடுகள் அதிகம், ஏனெனில், இதன் உட்பொருளைச் சரியாக வரையறுத்துக் கூற முடியாது (imprecise). அத்துடன் நவீனமயம் பல்வகைப் பரிமாணங்களைக் கொண்ட ஒரு எண்ணக்கரு. மேலும், நவீனமயம் பற்றிய சிந்தனையும் செயற்பாடும் மேலைநாட்டுச் சார்புடையது என்ற கருத்தும் உள்ளது." இதனால் பல கருத்து வேறுபாடுகள் எழுந்தாலும், நவீனமயமாக்கம் பற்றி விரிவான முறையில் பல ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

நவீனமய்மாக்கம் பற்றிய ஆய்வுகள்யாவும் இன்க்லெஸ் (inkeles) என்ற அறிஞரைக் கொண்டு எழுந்தனவாகும். அவருடைய வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவாகும். அவருடைய வரையறையின்படி 'நவீன மனிதன்' என்பவன்:


- புதிய அனுபவங்களைப் பெற விரும்பும் திறந்த மனமுடையவன்
- சமூக மாற்றத்தை எதிர்நோக்கும் திடசித்தம் கொண்டவன்
- பல்வகையான கருத்துக்களும் உளப்பாங்குகளும் உண்டு என்பதை நன்கு அறிந்தவன் மற்றவர்கள் சுயமான கருத்துக்களை வெளியிட அனுமதிப் பவன்
- உண்மையான நிகழ்வுகளின் அடிப்படையில் கருத்துக்களை உருவாக்குபவன்
- கடந்தகாலத்தை விடுத்து நிகழ்காலம், எதிர்காலம் பற்றிச் சிந்திப்பவன்
- தான் திறமையாகச் செயற்பட வேண்டும் என்ற உணர்வுள்ளவன்
- நீண்ட காலத்திட்டமிடலில் நம்பிக்கை உள்ளவன்.
- கல்வியைப் பெரிதும் மதிப்பவன்.
- மற்றவர்களின் சுயகௌரவத்தை மதிப்பவன்.
- தொழில் உற்பத்திக்குப் பின்னணியான காரண-காரியத் தொடர்பை உணர்ந்தவன்.

இவ்வறிஞரின் கருத்தின்படி நவீன பிரஜைகளின் நவீன அபிவிருத்தி ஏற்பட முடியாது. மேலும், மக்கள் நவீன பிரஜைகளாக உருவாக வேண்டுமாயின் அவர்கள் நவீன நிறுவனங்களின் செயற்பாட்டில் பங்கேற்க வேண்டும் இந்நிறுவனங்களில் கல்வியும் (பாடசாலைகள்) கைத்தொழிலும் (தொழிற்சாலைகள்) பிரதானமானவை என்பது அவர்கள் கருத்து.

நவீனமயமாக்கத்தை ஏற்படுத்துவதில் பாடாசாலைகள் முக்கிய பங்களிப்பைச் செய்கின்றன என்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆய்வுச் சான்றுகள் உண்டு. உயர்தரமான கல்வித் தேர்ச்சியைப் பெறுவர்கள், மேலும் உயர்கல்வியையும் உயர்தொழில் நாட்டங்களையும் கொண்டவர்களாக இருப்பர்; பாரம்பரியமான நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் அதிகம் விரும்புவதில்லை; புதிய அனுபவங்களையும் பெறும் திறந்த மனம் அவர்களுக்கு உண்டு; குடும்பத் தொடர்புகளும் குறைவாகவே இருக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன.

நவீனமயமாக்கத்தில் கல்வியின் பங்களிப்பு பற்றிய ஆரம்பகால ஆய்வொன்றின்படி (1964) மத்தியகிழக்கு நாடுகளில் இடைநிலைக் கல்வி பயின்றவர்கள், மாறிவரும் சூழ்நிலைகளுக்கிணங்கத் தம்மை மாற்றிக் கொள்ளும் திறமை படைத்தவர்கள்; மெக்சிக்கோ, பிரேசில் முதலிய நாடுகளில் செயப்பபட்ட ஆய்வுகளின்படி கல்விக்கும் நவீனமயமாக்கத்துக்குமிடையே நேரடியான தொடர்பு உண்டு. நவீனமயமாக்கத்தின் மற்றொரு குறிகாட்டியாக அரசியல் ஆர்வமும் விழிப்புணர்வும் கொள்ளப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்கா, ஜெர்மனி,இத்தாலி, மெக்சிகோ முதலிய நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின், உயர்தரமான கல்வித்தேர்ச்சியின் காரணமாக அரசியல் ஆர்வமும் அதிகரிக்கின்றது. ஆர்ஜெண்டினா,சில்லி, இஸ்ரவேல்,இந்தியா ஆகிய நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி கல்வித்தேர்ச்சிக்கும் தனியாளின் நவீனமயமாக்கத்துக்குமிடையே தொடர்புண்டு. பொதுத்தொடர்பு சாதனைங்களை விடப் பாடசாலைகளே நவீனமயமாக்கத்தில் முக்கிய பங்கு கொள்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறைந்த விருத்தியுடைய 49 நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வொன்றின்படி பாடசாலைகள், மேற்கத்தையமயத்தைத் தவிர்த்த முறையில் நவீனமயமாக்கும் ஆற்றலுடையவை.

"கல்வியுடன் தொடர்புபடுத்தப்படும் நவீனமயமாக்கம் பற்றி எழுப்பப்படும் முக்கிய ஐயங்களுள் ஒன்று பாடசாலைக்கல்வி தவிர்க்க முடியாதவகையில் நவீனமயமாக்கத்தை ஏற்படுத்துகின்றதா என்பதாகும் ஆர்மர் (Armer, 1971) என்பாரின் ஆய்வின்படி, சில நிலைமைகளில் கல்விச் செயற்பாடு நவீனமயமாக்கத்தைவிட பாரம்பரிய கலாசாரத்தையும் பழக்கவழக்கங்களையும் வலியுறுத்துவதாய் அமைய முடியும்" பாட எற்பாட்டின் காரணமாக இத்தகைய விளைவு எற்பட முடியும். இஸ்லாமிய சமயப்பாடசாலைகளில் செய்யப்பட்ட ஆய்வுகள் இக்கருத்தை உறுதி செய்தன. வாக்னா (wagner, 1985) என்பாரின் ஆய்வின்படி அந்நிய ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்த மொரொக்கோ, நைஜீரியா, இந்தோனேசியா, போன்ற நாடுகளில் பாடசாலை இவ்வாறான பாரம்பரியமயமாக்கப் பணியில் வெற்றி கண்டன.

நவீனமயமாக்கம் பற்றிய ஆராய்ச்சிகள் பெரும்பாலும் மேலைநாட்டுப் பாடசாலைகள் வழங்குகின்ற பயிற்சி, வாழ்க்கைப் பெறுமானங்கள், உளப்பாங்குகளை ஒத்த வினாக்கொத்துக்களின் அடிப்படையிலானவை என்பது இவ்வாய்வுகள் பற்றிய மற்றொரு கண்டனமாகும். மேலும் பாடசாலைக்கல்வி அனைவரையுமன்றி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே வழங்கப்படுவதால் நவீனமயம் தொடர்பான உளப்பாங்குகளையும் பாடசாலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மூலமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இறுதியாக, பாடசாலை-நவீனமயம் பற்றிய ஆய்வுகள் யாவும், நவீனமயமாக்கம் தவிர்க்க- முடியாதவகையில் அபிவிருத்திக்கே இட்டு செல்லும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் நவீனமயத்தினால் அபிவிருத்திக்கு மாறான எதிர்விளைவிகளும் ஏற்படலாம். ஆய்வாளர்கள் இனங்கண்டுள்ள அத்தகைய சில எதிர்விளைவுகளாவன:

- வளர்முக நாடுகளிலிருந்து சிறப்புத்தேர்ச்சி பெற்ற மூளைசாலிகளின் வெளியேற்றம்
- நவீனமயமாக்கச் செயற்பாட்டினால் சமூக உறவுகளில் ஏற்படும் பாதிப்பு
- பயனள்ள பாரம்பரிய சமூக நிறுவனங்களின் சிதைவு
- பொதுமக்களின் வாழ்க்கை நிலைமைகளுடன் தொடர்பற்ற நவீனமயமாக்கப்பட்ட கற்றோர் குழாமின் தோற்றம்.

கல்வி,எதிர்மறை நவீனமயமாக்கத்தைச் சமூகத்தில் தோற்றுவிக்கும் போது,நாட்டின் சமூக அபிவிருத்தியால் கல்வி எதிர்மறைத் தாக்கத்தை ஏற்பாடுத்தும் எனக் கருத இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய சட்ட விழிப்புணர்வு

**சொ.அமிர்தலிங்கம்**

*ஆளுநரின் செயலாளர், கிழக்கு மாகாணம்*

*திருக்கோணமலை*

1924ம் ஆண்டின் சிறுவர்களின் உரிமைகள் பற்றிய ஜெனிவா பிரகடனம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் அனைத்துலக மனித உரிமைப் பிரகடனமாக உருவாக்கப்பட்டது. 1959ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் சிறுவர் உரிமைப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது ஐக்கிய நாடுகள் சபையினால் 1989 ல் சிறுவர் உரிமைகள் சமவாயம் என உருவாக்கப்பட்டது. இலங்கை அரசாங்கமும் 1991ம் ஆண்டு சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் ஏற்பாடுகளை சிறுவர் உரிமைப் பட்டயமாக உருவாக்கியது. இதன் அடிப்படையில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக சட்ட விழிப்புணர்வுக்காக இக்கட்டுரையை வரைகின்றேன்.

**சிறுவர்கள் எனப்படுவோர் யார்?**

01. இலங்கையின் சிறுவர்களின் உரிமைகள் மீதான சமவாயத்தின் உறுப்புரை 1 இன்படி, 18 வயதுக்குட்பட்ட உட்பட்ட ஒவ்வொரு மனித உயிரும் சிறுவர்கள் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

02. தண்டனைச் சட்டக் கோவையில் பல சட்டங்கள் 8, 10, 12, 14, 16, 18 வயதுக்குட்பட்டவர்களை சிறுவர்கள் எனக் குறிக்கிறது.

03. 1995ம் ஆண்டின் 22ம் தண்டனைச் சட்டக் கோவையில் (திருத்தச்) சட்டத்தின் 308 அ(1) பிரிவு 18 வயதுக்கு கீழ்பட்டவர்களைச் சிறுவர்கள் எனக் குறிப்பிடுகிறது.

04. 1995ம் ஆண்டின் 22ம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையில் (திருத்தச்) சட்டம் பிரிவு 360 (இ)வின் படி 18 வயதுக்குட்பட்டவர்கள் சிறுவர்களாவர்.

05. 1998ம் ஆண்டின் 22ம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையில் (திருத்தக்) சட்டம் பிரிவு 333ன் படி, 18 வயதுக்கு குறைந்தவர்கள் சிறுவர்களாவர்.



06. 1998ம் ஆண்டின் 22ம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையில் (திருத்தச்) சட்டம் பிரிவு 360 (ஆ) வின் படி சிறுவர்கள் எனப்படுபவர்கள் 18 வயதுக்குக் குறைந்தவர்களாவர்.

07. சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் சட்டப்பிரமாணத்தின் படி சிறுவர்கள் என்பது 14 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் இளைஞர்கள் என்பது 14க்கும் 16 வயதுக்குட்பட்டவர் எனவும் கூறுகிறது.

08. தெருச்சுற்றிகள் சட்டப்பிரமாணத்தின் படி 16 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகளைக் குறிக்கிறது.

09. பெண்கள் இளம் ஆண்கள் மற்றும் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்துதல் தொடர்பான சட்டப்படி சிறுவர் என்பது 14 வயதுக்குபட்டவர்களையும், இளைஞர்கள் என்பது 14க்கும 18க்கும் இடைப்பட்டவர்களையும் குறிக்கும்.

மொத்தத்தில் 18 வயதுக்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள் எனக் கணிக்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன?**

ஒரு சிறுவனுக்கு நேரடியாக தீங்கு ஏற்படுத்தும் செயல்களும் அவற்றின் பயனாக அச்சிறுவனின் ஆரோக்கியத்தில் மேம்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தலும் சிறுவர் துஷ்பிரயோகமாகும். சுருங்கக்கூறின் சிறுவர் உழைப்பு, கொடுமைப் படுத்தலுக்கு உள்ளாகுதல், பாலியல் வன்முறைகள், தீங்கினை விளைவித்தல் என்பன இதில் அடங்கும்.

சிறுவர் துஷ் பிரயோகம் என்ற சொற்பிரயோகம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தில் சிறுவர்களின் உடல் அல்லது உள ஆரோக்கியத்துக்கு பாதகாமானவற்றைக் குறிக்கும்.



**பின்வருவன சிறுவர் துஷ்பிரயோகங்களாகும்.**

01. உடல் வாரியான இம்சைகள்
02. பாலியல் வன்முறைகள்
03. போதையூட்டுதல், நஞ்சூட்டுதல்
04. வைத்திய சிகிச்சையை மறுத்தல்
05. ஏமாற்றி வைத்தியம் செய்தல்
06. உள ரீதியான வன்முறைகள்
07. சிறுவரை சட்டவிரோதமாக வேலைக்கு அமர்த்துதல்
08. சிறுவர்களை விற்றல், கடத்துதல்
09. வியாபார நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல், விபச்சாரம்
10. பிள்ளைகளை அநாதரவாக விடுதல்
11. உணவு கொடுக்க மறுத்தல்

**சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சட்டங்களும் தண்டனைகளும்.**

01. 1883ம் ஆண்டு தண்டனைச் சட்டக் கோவையின் 1995 ஆம் ஆண்டின் 22ம் இலக்க குற்றவியல் (திருத்தக்) கோவையும். 1883 தண்டனைச் சட்டக் கோவை சிறுவர்களை இம்சைப் படுத்துவதை கூறுகிறது. 1995 திருத்தம் குற்றங்களுக்கு விதிக்கக்கூடிய தண்டனைகளைக் கூறுகிறது.

02 1841ம அண்டு 4ம் இலக்க தெருவில் அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம். இதன்படி 16 வயதுக்கு கீழுள்ள பெண்பிள்ளைகள் விபச்சாரத்திற்காக வேலைக்கமர்த்தல் அல்லது உடந்தையாக இருத்தல் தொடர்பான நீதிமன்றம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை கூறுகிறது. பெணபிள்ளையை பாதுகாப்பவர் உடலுறவு கொள்வாராயின் அல்லது உற்சாகமளிப்பாராயின் அதற்கான உடனடியாக குற்றத்தீர்ப்பில் 100 ரூ தண்டப்பணம் செலுத்த வேண்டும். 6 மாதகால சிறைத்தண்டனையும் உண்டு. தனித்தும், ஒருமித்தும் தண்டனை விதிக்கப் படலாம்.

03 1939ம் ஆண்டு 48ம் இலக்க பிள்ளைகள் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டம். இந்தச்சட்டமானது பராமரிப்பும் பாதுகாப்புத்தேவைகள் தொடர்பான சட்டமாகும். இச்சட்டம் பராமரிப்பும், பாதுகாப்பும் பற்றிய அறிவினை ஊட்டுகிறது.

04. 1956ம் வருட 47ம் இலக்க பிள்ளைகள் இளம் ஆட்கள் (தீங்கான பிரசுரங்கள்) கட்டளைச் சட்டம். இச்சட்டமானது இளைஞர்கள், சிறுவர்கள் ஆகியோரை வேலைக்கு அமர்த்துவது தொடர்பான சட்டமாகும். இச்சட்டம் 1973ம் ஆண்டின் 20ம் இலக்க சட்டத்தினாலும் 1984ன் 32ம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் ஒழுக்க விதிகள் 25.04.1958 வர்த்தமானி 11302லும், 22.08.1958 வர்த்தமானி 11479லும் அறிவிக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் ஒரு சிறுவனை 14 வயதுக்குக் குறைந்தவராகவும் ஒரு இளைஞனை 14க்கும் 18 வயதுக்கும் குறைந்தவனாகவும் கருதும். இதன் கீழ் ஒழுங்கு விதியானது பொருளாதார ரீதியில் சிறுவர்கள் சுரண்டப்படுவதையும், சட்டவிரோதமாக வேலைக்கு அமர்த்தப்படுவதையும் தடுக்கும் சட்டமாகும். சிறுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு செல்வதை தடுத்து வேலைக்கு அமர்த்தக்கூடாது என சட்டப்பிரிவு 17 கூறுகிறது. 5 தொடக்கம் 14 வரை சிறுவர்களின் பெற்றோர் பள்ளிக்கு கிரமமாக செல்வதற்கேற்ற ஒழுங்கு செய்ய வேண்டும். எனவே இவ்வயதினர்களுக்கு கல்வியறிவூட்டுவது பெற்றோரது பொறுப்பாகும்.

சிறுவர்களை சட்டவிரோதமாக வேலைக்கு அமர்த்தல் சட்டத்தின் 29ம் பிரிவின் பிரகாரம் தொழில் ஆணையாளரின் எழுத்து மூல அனுமதியின்றி வழக்கு தொடர முடியாது


05. 1956ம் வருட 48ம் இலக்க சிறுவர்கள், இளைஞர்கள் (தீங்கான பிரசுரங்கள்) சட்டம் அமுலானது.. இச்சட்டம் சிறுவர் இளைஞர்களுக்கு தீங்கிழைக்கக்கூடிய பிரசுரங்களை கட்டுப்படுத்துகிறது.

06. 1995ம் ஆண்டின் 22ம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையின் (திருத்தச்) சட்டத்தின்

308 அ (1)ம் பிரிவு இன்படி, 18 வயதுக்குக் கீழ்பட்ட எவரையும் தம்முடைய பொறுப்பில் வைத்திருக்கும் எவராவது அவரை தாக்கினால், கொடுமைப்படுத்தினால், புறக்கணித்தால், கைவிட்டால், துன்பத்துக்குள்ளாக்கினால் அது குற்றமாகும்.

308 அ (2ம் பிரிவு)ன் படி சிறுவர்களைக் கொடுமைப்படுத்திக் குற்றம் புரியும் எவரும் குற்றவாளியாகக் கண்டால் 2 வருடம் முதல் 10 வருடம் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும், குற்றப்பணம் அறவிடுவதும், நட்டஈட்டைக் கொடுக்க கட்டளையிடுவது மூலமும் நடவடிக்கை எடுக்கலாம்.

07. தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 310ன் படி எவரேனும் உடல்நோ ஏற்படுத்தினால் அல்லது துன்புறுத்தினால் அவருக்கு எதிராக துன்புறுத்தல் வழக்குத் தாக்கல் செய்யலாம். 311ம் பிரிவுப்படி குற்றங்கள் விளங்கப்பட்டுள்ளது. பிரிவு 312ன் படி வேண்டும் என்று, தெரிந்தும் ஒருவருக்கு துன்பம் விளைவித்தால் மனமொப்பிய துன்பியல் வழக்குக்குரியவராக்கலாம். தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 314ன்படி ஒரு வருட சிறைத்தண்டனை அல்லது 1000 ரூபாவரை தண்டப்பணம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். 315ம் பிரிவின் படி கருவி ஒன்றின் மூலம் சுட்டு, குத்தி, வெட்டி துன்புறுத்தினால் அல்லது மரணம் ஏற்படுத்தினால் குற்றவாளியாகக் கருதப்பட்டு 3 வருடம் நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டாலும் தண்டிக்கலாம். 316ம் பிரிவின் படி கடுங்காயத்தினை விளைவித்தால் 7 வருடச் சிறை அல்லது குற்றப்பணம் என்பன



விதிக்கப்படலாம். கடுங்காயம் விளைவித்தவர் சிறுவராயின் சவுக்கடியும் கொடுக்கலாம். மேலும் தண்டனைச் சட்டக் கோவையின் 317ன் படி எவராவது சுயவிருப்பப்படி கடும் காயம் விளைவித்தால் அல்லது மரணத்தை ஏற்படுத்தினால் அவரை 10 வருடங்களுக்கு நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை விதிக்கலாம் தண்டப்பணமும் அறவிடலாம்.

08. 1995ம் வருட 20ம் இலக்க குற்றவியல் நடைமுறைக்கோவை (திருத்தச்)சட்டம். இதன்மூலம் 1979ம் வருட 15ம் இலக்கக்குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவைச்சட்டம் திருத்தப்பட்டுள்ளது. இத்திருத்தங்கள் 1979ம் ஆண்டு கோவையின் முதலாவது அட்டவணையையும் உள்ளடக்கும்.

09. சிறுவர்கள் கட்டாயமாக பாடசாலை செல்வது தொடர்பான 1997ம் ஆண்டின் 1ம் இலக்க விதி. இதன்படி எல்லா சிறுவர்களும் கல்வி கற்க ஏற்ற நிலையை, அரசாங்கத்தின் தேசிய கொள்கையை விரிவபடுத்தும் பொருட்டு இந்த விதிகள் செய்யப்பட்டுள்ளன.

10. 1997ம் ஆண்டின் 19ம் இலக்க குற்றவியல் நடைமுறைக் கோவை (திருத்தச்) சட்டம். இந்தச் சட்டம் 303ம் பிரிவையும் பிரதான விதியின் முதலாவது அட்டவணையையும் திருத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. 1998ம் ஆண்டின் 28ம் இலக்க குற்றவியல் நடைமுறைக் கோவை (திருத்தச்)சட்டம் பிரதான விதியின் பிரிவு 2 ஐயும், பிரதான விதியின் முதலாம், இரண்டாம் அட்டவணைகளையும் திருத்தி 43m, 451M, 453 m ஆகிய புதிய பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

12. 1998ம் ஆண்டின் 29ம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டம். இந்தச்சட்டம் பிரதான விதிகளை 286 m, 363, 365 m, ஆகியவற்றைத் திருத்தி புதிய குற்றங்கள் தொடர்பாக 288, 288 m ஆகிய புதிய பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளது

13. தண்டனைச் சட்டக் கோவையின் (திருத்தச்)சட்டப் பிரிவு 288m – 1998யின் படி சட்ட விரோதமாக பாலியல் உறவு கொள்ள சிறுவரைக் கூலிக்கு அமர்த்தினால் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் 2 வருடம் முதல் 5 வருடம் வரை சிறைத்தண்டனையும் அபராதமும் செலுத்த வேண்டும்

14. தண்டனைச் சட்டக் கோவையின் (திருத்தச்)சட்டப் பிரிவு 288(1) – 1998யின் படி எவரேனும் சிறுவர்களை பிச்சையெடுக்க ஏவிவிட்டால், அவர் குற்றவாளியாக் காணப்படுமிடத்து 5 வருடத்திற்குக் மேற்படாத சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கலாம்.

15. தண்டனைச் சட்டக் கோவையின் (திருத்தச்)சட்டப் பிரிவு 288M(1) – 1998யின் படி எவரேனும் தெரிந்துகொண்டு தடை செய்யப்பட்ட பொருட்களை (நஞ்சு, அபின், அபாயமருந்துகள்) வியாபாரம் செய்வதற்கு சிறுவரைக் கூலிக்கு அமர்த்தினால் அல்லது தூண்டினால் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் 2 வருடமுதல் 5 வருடம் வரை சிறைத்தண்டனையும் அபராதமும் செலுத்த வேண்டும்.

16. 1998ம் ஆண்டு 22ம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையின் (திருத்தச்)சட்டப் பிரிவு 360M. என்பது சிறுவர் மீது பாலியல் இம்சை இழைக்கும் எவரையும் குற்றவாளியாக் கண்டால் 5 வருடம் முதல் 20 வருடம் வரை சிறைத்தண்டனை விதிக்கலாம். குற்றப் பணம் விதித்தும் தண்டிக்கலாம். பிரிவு 360, - எவரேனும் ஆளை பணத்திற்காக விற்றல், வாங்குதல் போன்றவற்றில் குற்றவாளியாகக் காணப்படும் 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு 5 வருடம் முதல் 10 வருடம் வரையும் சிறைத் தண்டனையும், 18 வயதுக்குக் கூடியவருக்கு ஆகக் குறைந்தது 2 வருடம் முதல் 20 வருடச் சிறைத்தண்டனையும் வழங்கப்படும்.

17. பிரிவு 345 – ஒருவர் இன்னொருவரை சொல்லினால் அல்லது செயலினால் பாலியல் தொந்தரவுக் குட்படுத்தினால் குற்றவாளியாகக் கருதப்பட்டு 5 வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனையும் நட்டஈடும் தண்டனைகளாகும்.

18. 365ம் பிரிவு பாலியல் வன்முறைகள் பற்றி கூறும் போது இதன் பிரகாரம் எவரொருவர் இயற்கைக்கு விரோதமான முறையில் 16 வயதிற்குட்பட்ட ஒருவருடன் பாலியல் வன்முறை

புரிந்தால் 10 வருடங்களுக்குக் குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாதவாறு கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுவதுடன் தண்டப்பணமும், அவ்வாறான பாதிப்படைந்த இளம்பராயத்தினருக்கு ஏற்பட்ட உடல், உள தீங்குக்கு போதுமான நட்டஈடு கொடுக்கப்பட வேண்டுமென கூறுகிறது.

19. 365M – 16 வயதுக்குட்பட்ட அவரது சம்மதத்துடன் பாலியல் இம்சை செய்வதும் கடும் குற்றமாகக் கருதப்படும். இதற்குதண்டனையாக 5 வருடங்களுக்கும் குறையாத 20 வருடங்களுக்கும் மேற்படாத சிறைத் தண்டனையும், குற்றப்பணமும் விதிக்கப்படுவதுடன், ஏற்பட்ட இம்சைக்கு நட்டஈடும் வழங்க வேண்டும்.

20. இளம்பராயத்தினரைப் பொறுத்த வரையில் 1995ம் ஆண்டின் தண்டனைச் சட்ட கோவை 22ம் இலக்க சட்டமூலம் திருத்தப்படமுன் 12 வயதுக்கு உட்பட்ட ஒருவரை அவர் சம்மதத்துடன் பாலியல்வன்முறைக்கு உட்படுத்துவது குற்றமாக இருக்கவில்லை. ஆனால் 1995ம். ஆண்டின் 22ம் இலக்க சட்ட(திருத்த) மூலம் சம்மதம் கொடுக்கப்பட வேண்டிய வயதெல்லை 16 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இலங்கையில் அவதானித்த பெரிய குறையென்னவெனில் பெற்றோர், சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக பொலிசில் முறைப்பட அஞ்சுவதேயாகும். எனவே இனிவருங் காலத்தில் இப்படியாக அஞ்சத்தேவையில்லை. நேரடியாகச் சென்று பொலிசில் முறைப்படுங்கள். நீதிமன்றமானது பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெறும் அநாமதேய மனுக்களைக் கூட பரிசீலிக்கலாம். நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்திலும் முறையிடலாம். சட்டத்தின் முன் நிறுத்துவதால் எதிர்காலத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கலாம். எதிர்கால எஜமான்களான சிறுவர்களின் வாழ்வு மலர நாம் அனைவரும் ஒன்றுபட்டு சட்ட விழிப்புணர்வுடன் செயற்படுவோமாக! சிறுவர்கள் சீரும் சிறப்புடன் வளரட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித ஆளுமையில் சுய கட்டுப்பாட்டின் வகிபாகம்

திரு.அ. சொக்கலிங்கம்

சுய கட்டுப்பாடு என்பது எம்மீது எம்மால் இடப்பட்டு கடைப்பிடிக்கப்படும் ஒரு நடைமுறையாகும். சுய கட்டுப்பாடு எமது பழக்கவழக்கங்களில், உணர்ச்சிகளில் செல்வாக்குச் செலுத்தி அவற்றைச் சரி வர ஒழுங்குபடுத்த ஒத்தாசையாக இருக்கும். எனவே இது மனித ஆளுமைக்கு மிக முக்கியமான ஒரு அம்சமாகும். ஓவ்வொரு நாளும் செய்யும் வேலைகள், கால நிர்ணயம், திட்டங்களில் தொடர் ஈடுபாடு போன்ற கட்டுப்பாடுகளை இது எம்மீது ஏற்படுத்தி எமது சுய கட்டுப்பாட்டுக்கு வழிவகுக்கும். எந்த விடயத்தைச் செய்வதானாலும் சுய கட்டுப்பாட்டுடன் செய்தால் வேலை நிச்சயம் வெற்றியளிக்கும். சிறந்த பயனையும் அதனால் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். எவரும் எந்த வேலையையும் திறமாகச் செய்யவேமுற்படுவர். இப்படிமுற்படும் போது பயம், பீதி, பேராசை, கோபம், அகங்காரம், சந்தேகம் என்பன ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. இப்படியான எதிர்பாராத நிகழ்வுகள் எம்மில் ஏற்படும் போது எமது சுய கட்டுப்பாடு எம்மைச் சரியான வழியில் செல்ல வழிவகுத்துச் செயற்படுத்துகிறது எனலாம். மனம் போன போக்கில் செல்லாது சுய கட்டுப்பாட்டுடன் செயலாற்ற வேண்டும். எனவே ஒரு மனிதன் தன்னகத்தே காணப்படும் சக்திகளை அடக்கியாள முதலில் பழகவேண்டும். நம்மை நாமே ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் புறச் சூழ்நிலையையும் நாம் கட்டுப்படுத்துகின்றோம். "எண்ணுபவர் எண்ணியதை அடையலாம். அவர்கள் மட்டும் மன உறுதி மனக்கட்டுப்பாடு படைத்தவர்களாக இருக்கும் போது" என்று கூறுகின்றார் வள்ளுவர். கட்டுப்பாடு, ஒழுங்கு, பொறுப்புணர்ச்சி என்று பல்வேறு வார்த்தைகளில் கூறப்படும் இந்த குணம் தான் நம்மைப் பதப்படுத்திக் கூர்மையாக வைத்திருக்கிறது. கட்டுப்பாடு என்பது ஒரு ஆக்க சக்தி. நமது மனசக்தியை ஒரு பயன் கருதி திட்டமிட்டு செலவிட்டு பலன் பெறுவதாகும். இலட்சியத்தில் பற்றுக் கொண்டவன் ஒரு கட்டுப்பாட்டுடன் அது பற்றியே சிந்தித்து செயல்படும் போது தான் அதை அடைகிறான். கட்டுப்பாடு இல்லாதவன் ஒரு இலட்சியத்திலிருந்து மற்றொன்றுக்கு தாவி எதையும் சாதிக்காதவனாகிறான். மனித சக்தியை ஒரு நெறியுடன் கட்டுப்பாட்டுடன் செலவு செய்பவன் தான் வாழ்வின் இலட்சியத்தை உணர்கிறான். இலட்சியத்தில் பற்றுக் கொண்டவன் ஒரு கட்டுப்பாட்டுடன் அது பற்றிச் சிந்தித்து செயலாற்றும் போது தான் அதை அடைகிறான். நம்மை நாமே ஒரு கட்டுப்பாட்டுடன் வைத்திருப்பதன் மூலம் புறச்சூழ்நிலையையும் கட்டுப்படுத்துகிறோம்.

மனிதனானவன் தனது மதி நுட்பத்தால் பல்வேறு விந்தைகளை புரிவதற்கு முன், தனது சொந்த மனதினை அடக்கி ஆண்டு வெற்றியடைய வேண்டும். தனக்குள்ளே ஏற்படும் விசைகளை (Forces) அடக்கியாளும் திறன் கொண்டவனாக இருக்கவேண்டும். தனக்குள்ளே ஏற்படும் மன உந்தல்களை அடக்கியாண்டாற்றான் வெளியுலகச் செயல்களில் கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியும். எனவே சுய கட்டுப்பாட்டுப் பயிற்சியினை நாம் பெறவேண்டும். சுயகட்டுப்பாடு இருப்பின் மனக்குழப்பங்கள் ஏற்படமுடியாது. விரும்பிய விரும்பியபடி மனதை அலைய விடாது ஒருநிலைப்படுத்தி தனது செயலாற்றலை ஏற்படுத்த முனையவேண்டும். மன ஒருமைப்பாட்டினை நிலைநிறுத்துவதற்காக ஒரு உண்மையான நிகழ்ச்சியை எடுத்துக் கூறலாம். இந்தியாவின் புகழ்பெற்ற விஞ்ஞான மேதை சி.வி.ராமன் (1888 – 1970) வாழ்ந்து வந்தார். இவரது தந்தை சந்திரசேகர ஐயர் பௌதிகத்திலும் கணிதத்திலும் பேராசிரியராக இருந்தார். ராமன் சிறுவயதில் புத்திசாலியாக இருந்த போதும் எந்தச் செயலிலும் முழு மனதோடு ஈடுபடுவதில்லை. ஒருநாள் இராமனின் தந்தை ஒரு உருப்பெருக்கும் கண்ணாடியை கையில் எடுத்து நடுப்பகல் வேளையிலே சூரியவெளிச்சத்தில் பத்திரிகை ஒன்றை கையில் ஏந்திய வண்ணம் அதன் மீது உருப்பெருக்கும் கண்ணாடியை அங்குமிங்கும் அசைத்தார். சிறிது நேரத்தின் பின் பத்திரிகையின் ஒரு பகுதி மீது நிலையாகப் பிடித்தார். சூரியஒளி கண்ணாடி ஊடாக பத்திரிகையில் குவிந்தது. சிறிது நேரத்தில் பத்திரிகையில் பிடித்த இடம் எரிந்து கருகி துவாரம் ஏற்பட்டது. இது எப்படி ஏற்பட்டது? என ராமன் அறிய விரும்பினான். அதற்குத் தந்தை கூறியதாவது: "நான் பத்திரிகையின் மேல் அங்குமிங்கும் கண்ணாடியை அசைத்த போது குவிந்த சூரியனின் ஒளி ஒரே இடத்தில் நிலைக்கவில்லை. கண்ணாடியை ஒரே இடத்தின் மீது நிலையாகப் பிடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது சூரியனின் சக்தி ஒரே இடத்தில் தொடர்ந்து குவிந்து கொண்டே இருந்தபடியால் அவ்விடத்தில் அதிக வெப்பம் ஏற்பட்டு கருகி துவாரம் உண்டானது." என்றார். எனவே மனதை எங்கும் அலைய விடாமல் ஒருமைப்படுத்தி செயலாற்றினால் எந்த காரியத்திலும் வெற்றியடையலாம் என்பதே இதன் பொருளாகும். இப்படியான மனமொருமித்து சுயகட்டுப்பாட்டுடன் செயலாற்றியதனால் 1922ஆம் ஆண்டு ஒளியின் மூலக்கூற்றுக் கோணல் (Molecular Diffraction of Light) என்ற தனது ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டார். 1924இல் லண்டன் ரோயல் சொசைற்றியில் உறுப்பினராகத் தேர்தெடுக்கப்பட்டார். 1928இல் தனது கதிர்வீசல் விளைவு என்ற முக்கிய நிகழ்வை ராமன் கண்டுபிடித்தார். இதுவே பின்னர் ராமன் நிறத்தோற்றம் இல்லது ராமன் வளைவு (Raman Effect) என்று அழைக்கப்பெற்றது. இதற்காக 1929இல் சேர் பட்டம் பெற்றார். 1930இல் நோபல் பரிசு பெற்றார். இப்படியாக மனமொருமித்து எல்லாச் செயல்களிலும் சுயகட்டப்பாட்டுடன் ஈடுபட்டதனால் பிற்கால விஞ்ஞான வெற்றிகளுக்கெல்லாம் மன ஒருமைப்பாடானது அடிப்படையாக அமைந்தது எனலாம். "நம்மை நாமே நிர்வகித்து, சுயகட்டுப்பாட்டுடன் வாழ்கின்ற தன்மை இருக்கிறதே அதுதான் வாழ்வில் அதிமுக்கியமானது என்பதை வயதேற நான் அதிகம் உணர்ந்து கொண்டேன்" என்கிறார் ரே.கிரேக் எனும் அறிஞர்.

சுய கட்டுப்பாட்டுப் பயிற்சியானது எமக்கு ஏற்படும் மனக்குழப்பங்களை கடந்து செல்லவும் எமது நடத்தையினை உறுதிசெய்கிறது. சுயகட்டுப்பாட்டை ஏற்படுத்தவேண்டிய ஒருவன் அதனைக் கட்டுப்படுத்தும் வலிமையுள்ளவனாக தன்னை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சுயகட்டுப்பாட்டை ஏற்படுத்தவேண்டிய மனிதன் முதலாவதாக தன்னைக் கட்டுப்படுத்தவேண்டும். அல்லது ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும்.. தனது வாழ்வில் ஏற்படுகின்ற அன்பு, ஆசை,கோபம்,வெறுப்பு என்பவற்றை அடக்கி தன்னை ஒழுங்குபடுத்தவேண்டும். தீய எண்ணங்கள் தீய பழக்கங்களை களைய வேண்டும். இரண்டாவதாக தன்னைத் தூய்மையானவனாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தனது மிருக உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக் கூடாது. கோபாவேசங்களுக்கு கட்டுப்பாட்டினை ஏற்படுத்தவேண்டும். எனவே தன்னைத் தூய்மையாக்கிக் கொள்ளல் வேண்டும். தீமையான விளைவுகளை ஏற்படுத்தும் ஆசைகள் எழுவதை நிராகரிக்கவேண்டும். மூன்றாவதாக எது சுயகட்டுப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கின்றதோ அதை விட்டு விலக்கவேண்டும். கோபம் பொல்லாதது. அதைத் தவிர்த்து அன்பை நெஞ்சில் வளர்க்க வேண்டும். ஒரு சில நேரமௌனம் கோபத்தைக் கலைக்கும். ஜேம்ஸ் ஆலன் என்பவர் "வாழ்க்கைக் கலக்கத்துக்கு அப்பால்" என்ற ஆங்கில நூலில் "ஒரு மனிதன் தன்னைத் தானே அடக்கியாள்வதில் வெற்றிகொள்ளும்போது வலிமையைக் கூட்டியும், பயன் தருவிதத்திலும் வெற்றிகாண்கின்றான்" எனக் கூறியுள்ளார். வாழ்வில் கட்டுப்பாட்டை மேற் கொள்பவர்கள் தான் வெற்றி அடைகிறார்கள். மனக்கட்டுப்பாடு நமது பழக்கவழக்கங்களாக மாற வேண்டும். கட்டுப்பாடு என்பது ஒரு ஆக்கசக்தி. நமது மனசக்தியை ஒருபயன் கருத்திட்டமிட்டுச் செலவிட்டுப் பலன் பெறச் செய்யும் ஒரு முயற்சியாகும்.

செய்தொழில்களில் வெற்றி பெற்றோரின் வாழ்க்கை வரலாற்றை நாம் ஆராய்வோமானால் அவர்களின் வெற்றிக்கு சுய கட்டுப்பாடு முக்கியமாக இருந்ததை அவதானிக்கலாம். சுய கட்டுப்பாடு எம்மிடமிருப்பின் நாம் எமது தீய எண்ணங்களை, பழக்கவழக்கங்களை ஒதுக்கி விட்டு, தேவையற்றவற்றை நீக்கி விட்டு, சரியான வழியில் எமது குறிக்கோளை, நோக்கத்தை நிறைவேற்றமுற்படலாம். வாழ்வில் எதிலும் வெற்றியடைய வேண்டுமாயின் சுய கட்டுப்பாட்டை நாம் எம்மிடம் ஏற்படுடத்திக் கொள்ள வேண்டும். நாம் எந்த வேலையைச் செய்யமுற்பட்டாலும் அதில் மனத்துணிவுடன், அர்ப்பணிப்புடன், தொடர் முயற்சியுடன் ஈடுபட வேண்டும். எடுத்த வேலையைச் சரி வரச் செய்வோம் என்ற மனத்திடத்துடன் எமது ஆசாபாசங்களை தவிர்த்து சுய கட்டுப்பாடுடன் செயற்பட வேண்டும். இல்லாவிடின் எந்த வேலையையும் சரி வரச் செய்ய முடியாது போய் விடும். எந்த வேலையையும் நேரத்துடன் எழுந்து செய்யமுற்பட வேண்டும். எமக்கு வேலைக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தினை இம்மியளவும் வீணாகச் செலவிடக் கூடாது. சுய கட்டுப்பாடு என்பது ஒரு பழக்கமாகும். இந்தப் பழக்கத்தை நாம் தொடர்ந்து எம்மில் வளர்க்க வேண்டும். நாணம், பணிவு, தன்னடக்கம் என்பன எம்மில் வளரவேண்டும். (Modesity) சாதனை புரிவது என்பதை மனக் கட்டுப்பாட்டின் மூலம் ஒரு பழக்கமாக்கிவிடலாம்.


நாம் ஒரு வேலையைச் செய்வதற்கும், பொறுப்பேற்பதற்கும், சரி வரத் தீர்மானம் எடுப்பதற்கும், சுய கட்டுப்பாடு மிகவும் அவசியமாகும். நாம் செல்லும் பாதை கரடுமுரடானதாக, இடையூறுகள் விளைவிக்கக் கூடியதாயிருப்பினும், தோல்வியை ஏற்படுத்தமுற்படும் போதும் நாம் விடாமுயற்சியுடன், சுய கட்டுப்பாட்டுடன் செயற்படுவோமாயின் அவற்றைக் கடந்து வெற்றியை ஈட்டலாம். எதற்கும் எம்மால் முடியும் என உறுதியாக உழைக்கவேண்டும். இயலாமையை விடுத்து இயலுமையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். கடின உழைப்பில் ஈடுபட்டு வெற்றி காணவேண்டும். அதிகமாக உழைப்பவன் வெற்றியடைவான். சுய கட்டுப்பாட்டுடன் செயலாற்றி வாழ்வில் வெற்றி பெற்றோரின் வரலாற்றைப் பார்ப்போயின் எமது ஆளுமைக்கு சுய கட்டுப்பாட்டின் அவசியம் புரியும். சுயகட்டுப்பாட்டுடன் வாழ்ந்து தம்மை பல்வேறு துறைகளிலும் அர்ப்பணித்துப் புகழ்கொண்டோர் பலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொருளாதாரத்திலும், அரசியலிலும் ஒரு சுதந்திர மனிதனுடைய கட்டுப்பாடு , ஒரு படை வீரனுடைய கட்டுப்பாட்டைப் போலிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த சுதந்திரம் அழிந்துவிடும்" என்கிறார் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன்.எப்.கென்னடி. "நம்மை நாமே நிர்வகித்து சுய கட்டுப்பாட்டுடன் வாழ்கின்ற தன்மை இருக்கிறதே அது தான் வாழ்வில் அதி முக்கியமானது என்பதை வயதேற ஏற நான் அதிகம் உணர்கிறேன்" என்கிறார் ரே.கிரேன் என்னும் பிரபல அமெரிக்க உணவுவிடுதியாளர். சாதனைகள் எல்லாம் மனக்கட்டுப்பாட்டலிருந்தே பிறந்தவை எனலாம். "அமெரிக்க உருக்காலை மன்னர்" ஆண்ட்ருகார்னகி, "கோடக்" புகைப்படப்புகழ் ஈஸ்ட்மன் மோட்டார் வாகன மன்னன் ஹென்றி.ஃபோர்டு, கோடீஸ்வரர் ராக்பெல்லர், அமெரிக்க அறிவியல் மேதை தோமஸ் அல்வா எடிசன் , "பிளாஸ்டிக் மன்னன் ஒய்.ஸி.வாங் "சோனி நிறவன அகியோ மொரிட்டா, உலகத்திற்கு விருந்தளித்த எம்.எஸ்.ஒபராய், "நிர்மா" புகழ் கர்ஸான் பாய் பட்டேல் , ரிலையன்ஸ் நிறவன புகழ் அம்பானி போன்ற பலர் சுய கட்டுப்பாட்டின் மூலம் உலகப்புகழ் பெற்றவர்கள் தான். அவர்களில் சிலரைப் பற்றி விதந்துரைப்போம்.

**ஜோஜ் வாஷிங்டன் கார்வார் (1864 – 1943)**



இவர் 1864ம் ஆண்டு வைரத்தோப்பு என்னுமிடத்தில் ஒரு அடிமை நிக்ரோவின் மகனாகப் பிறந்தார். இவர் அமெரிக்கா நாட்டைச் சேர்ந்தவர். இவர் படிப்பிலே கூடுதலான நாட்டமுடையவராக, ஈடுபாடுடையவராக இருந்தார். இருப்பினும், அக்காலத்தில் நிக்ரோ மாணவர்களுக்கு அமெரிக்காவில் எந்தப் பாடசாலையிலும் படிக்க முடியாத சூழ் நிலை இருந்தது. ஏனெனில் நிக்ரோவில் இவரது குடும்பம் அடிமைகளாகச் சேவையாற்றியவர்களாவார். இதன் காரணமாக அங்கு அவர் படிக்க முடியாத சூழ் நிலை ஏற்பட்டது. இதனால் படிக்கும் நாட்டத்துடன் கால்நடையாக "நியோசோ" ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு சமையல் வேலைகள் செய்து கொண்டு படித்தார். பின்பு விவசாயக் கல்லூரியிலும் பயின்றார். அதன் பின்னர் வேலை தேடும் படலத்தில் ஈடுபட்டார். டஸ்க்கி என்ற ஊரில் நிக்கிரோக்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையில் ஆசிரியரானார். உலகம் வியக்கத்தக்க பல சாதனைகளை அவர் புரிந்தார். அடிமையாக இருந்த போதும் பாடசாலைகளுக்கு ஏறி இறங்கி படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்ட போதும் தனது சுய கட்டுப்பாட்டுடன் ஒரே பாடசாலையில் சேர்ந்து படித்தார். விவசாய கல்லூரியில் பயின்றார். இன்று உலகம் போற்றும் வியத்தகு ஆராய்ச்சிகளைச் செய்து புகழ் பெற்றார். பி.எஸ்., எம்.எஸ்.டி., பி.எச்.டி. போன்ற பல பட்டங்களைப் பெற்றவர். லண்டன் றோயல் சொசைற்றியின் உறுப்பினராவார். இவ்வளவு பதவிகளைப் பெறுவதற்கு அவரது சுய கட்டுப்பாடும், ஆர்வமுமே காரணமாக அமைந்தன. நிலக் கடலையிலிருந்து காப்பி பவுடர், பால், வெண்ணெய், வார்னிஷ், பெயின்ட் போன்ற பல வகையான பொருட்களைச் செய்து காட்டி உலகப் புகழ் பெற்றார். சர்க்கரை வள்ளிக்கிழங்கிலிருந்து மாவு, அல்கஹோல், வினிதர், ஸிரப் போன்றவற்றை தயாரித்தார். சர்க்கரை வள்ளியைக் கொண்டு 118 பொருட்களும், நிலக்கடலையைக் கொண்டு 300 பொருட்களும் செய்ய முடியும், என்பதை உலகிற்கு உணர்த்தினார். இது அவரது சுய கட்டுப்பாட்டால் ஏற்பட்ட வெற்றியே. பிறப்பால் அடிமையாகப் பிறந்து, பின்பு விடுதலையடைந்து எளிய பொருட்களுடன் நிலக் கடலையிலிருந்து எவரும் எதிர்பாராத எண்ணற்ற பொருட்களை உலகுக்கு அள்ளித்தந்தார். இவற்றிற்கு முழுக்காரணம் சுயகட்டுப்பாட்டுடன் இவர் இயங்கியமையே. 1943ல் இறைபதமடைந்தார். இவரது வெற்றிகளுக்குப் பின்னால் ஆர்வம், சுய கட்டுப்பாடு, விடாமுயற்சி என்பன காணப்பட்டன. இந்த சுய கட்டுப்பாட்டை நாமும் எமது சகல முயற்சிகளிலும் ஈடுபடுத்துவோமாயின் வாழ்வில் வெற்றி பெறலாம். கார்வார் தான் அடிமையாகப் பிறந்தததற்காக மனந்தளரவுமில்லை, பல்வேறு பொருட்களை கண்டுபிடித்தமைக்காக பெருமிதங் கொள்ளவுமில்லை சுய கட்டுப்பாட்டுடன் வாழ்வை நடத்தி பெற்றி பெற்றார். சிருஷ்டத்திறன் மிக்க சிறந்த இராசாயனவாதியாவார்.

**அலெக்சாண்டர் பிளெமிங் (1881 – 1955)**



1881ம் ஆண்டு ஆகஸ்ட் 6ம் தகிதி அலெக்சாண்டர் பிளெமிங் இங்கிலாந்திலுள்ள ஸ்கொட்லான்டில் வாக்பீல்ட் என்ற பண்ணையில் பிறந்தார். தந்தையை சிறு வயதிலேயே இழந்தார். அண்ணன்மாரால் வளர்க்கப்பட்டார். இளமையில் வௌடென்மூர் பள்ளிக்கூடத்தில் படித்தார். பின்பு இல்மார் நாகி கல்விக்கழகத்தில் பயின்றார். பின் இலண்டன் சென்று பொருளாதார சிக்கல் காரணமாக கப்பல் கம்பெனியில் வேலை செய்தார். பின்பு மருத்துவத்துறை மாணவனாகப் புனித மேரிமருத்துவப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். கல்வியிலும், விளையாட்டிலும், நீச்சலிலும் வல்லவராகத்திகழ்ந்தார். மருத்துவத்துறையில் கற்றுத் தேர்ந்தார். பின்பு பிரெஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பொல்வான்நகருக்கு சென்று அங்கு இயற்கைப் பொருளான லைசோசைம் (LYSOZUME) என்ற பொருள் பற்றி ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினார். பென்சிலினின் (PENICILLIN) சிறப்பை உலகிற்குத் தந்தார். பென்சிலின் மருந்துக்கள் உலகப்போரின் போது எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றின. பென்சிலினை அடுத்து ஸ்டரெப்டோமைசின் (STREPTOMYCIN) ஆரோமைசின் (AUREOMYCIN) டெர்ராமைசின் (TERRAMYCIAN) ஆகிய மருந்துக்களைக் கண்டு பிடித்து உயிர்களைப் பாதுகாத்தார். 1945ல் மரணமானார். இவரின் வெற்றிக்கு இவரது சுய கட்டுப்பாடு முக்கியமாக அமைந்தது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போதும் உழைத்துப் படித்து மருத்துவப் பதவியைப் பெற்றார். பின்பு பல மருந்து வகைகளை கண்டு பிடித்தார். வறுமையின் காரணமாக கப்பல் கம்பெனியில் வேலை செய்த இவர் மருத்துவத்துறையில் பிரபல்யம் பெற்று மருத்துவர்களை உருவாக்கியும் மருந்துவகைகளை உலகிற்குத் தந்தும் உதவுவதற்கு இவரது சுயகட்டுப்பாடே காரணம். 1944ம் ஆண்டு சேர் பட்டம் பெற்றார். 1945ல் மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றார்.

**ஜான் லாகி பெயிற்டு (1888 – 1946)**



1888ம் ஆண்டு ஸ்கொதிலாந்திலுள்ள வென்ஸ்பர்க் என்ற இடத்தில் ஜான்லாகி பெயிர்டு பிறந்தார். பெயிர்டு லார்சிபீல்ட் கல்விக்கழகத்திலும், கிளாஸ்கோவிலுள்ள அரச தொழில் நுட்பக்கல்லூரியிலும் பயின்று தேறினார். பின்பு ஒரு கம்பெனியில் சேர்ந்தார். புதியன கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் பூத்தெழுந்தது. முதலில் வியாபாரப் பொருட்களான புது வகைகாலுறை, கண்ணாடிச் சவரக்கத்தி என்பவற்றை அறிமுகப்படுத்தினார். ஆனால் இவற்றால் வெற்றி பெற முடியவில்லை. எனினும் அவர் தனது சுய கட்டுப்பாடு, ஆர்வம் என்பவற்றில் தவறவில்லை. உடல்நலம் குன்றியதனால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு சென்றார். பின்பு உடல் நலம் தேறி தாயகம் வந்தார். ஆரம்பத்தில் வறுமையில் வாடிய அவர் பின்னர் பயன்படுத்தி எறியப்பட்ட தொலைபேசிக்கருவிகள், கண்ணாடிக் குப்பிகள் ஆகிய கருவிகளுடன் கண்டுபிடிப்புக்களில் ஈடுபட்டார். பின்பு கம்பியில்லாத தந்தி வழியாக காணுதல் என்ற கண்டுபிடிப்பை கண்டுபிடித்தார். ஆனால் பலரும் இவரை பைத்தியக்காரன் என்றனர். எனினும் இவர் சுய கட்டுப்பாட்டுடன் செயற்பட்டார். கம்பி வழியாக படம் வருகிறது என்பதை அப்போது ஒருவரும் நம்பவில்லை. பெயிர்டு 1926ம் ஆண்டு இலண்டன் நகரில் அரச கழகத்தில் தொலைக்காட்சிக் கருவியைக் காட்டி அவர்களை ஏற்க வைத்தார். 1927ல் இரவுக்காட்சி என்ற கருவியைக் கண்டுபிடித்தார். இது கண்ணுக்குத் தெரியாத கதிர்கள் இரவில் படம் எடுத்துக் காண்பிக்கும் ஒரு தொலைக்காட்சியாகும். 1939ல் வண்ணத் தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தார். 1946ல் மறைந்தார். பெயிர்டு தொலைக்காட்சி ஆராய்ச்சியில் ஈடுபட்ட போது அமெரிக்காவில் ஜென்கின்ஸ் என்ற ஒருவரும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஆனால் போட்டியில் பெயிர்டு தான் வெற்றி பெற்றார். இதற்கு முக்கிய காரணம் இவரது விடாமுயற்சியும், சுய கட்டுப்பாடுமாகும். "பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஒரு சுதந்திர மனிதனுடைய கட்டுப்பாடு, ஒரு படை வீரருடைய கட்டுப்பாட்டைப் போல் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த சுதந்திரம் அழிந்துவிடும்" என்கிறார் அமெரிக்க முன்னை நாள் ஜனாதிபதி ஜான் கெனடி.

**தனிநாயக அடிகளார் (1913 – 1980)**



தனிநாயக அடிகளார் நெடுந்தீவைச் சேர்ந்த நாகநாதன் கணபதிப்பிள்ளைக்கும் கரம்பனைச் சேர்ந்த சிசில் இராசம்மா வஸ்தியாம்பிள்ளைக்கும் 1913ம்ஆண்டு ஆகஸ்ட் 2ம் நாள் மகனாகப் பிறந்தார். இவருக்கு இளமையில் சூட்டப்பட்ட பெயர் சேவியர் என்பதாகும். தனிநாயக அடிகளார் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் தனது கல்வியைத் தொடங்கினார். மேல்நிலைப்படிப்பு 1923-1930 வரை யாழ் சம் பத்திரிசியார் கல்லூரியில் பயின்றார். ESLC பரீட்சையில் 1928ல் முதல் பிரிவில் சித்திபெற்றார். 1930ல் கேம்பிறிஜ் பரீட்சையில் ஆங்கிலத்திலும், வரலாற்றிலும் திறமையுடன் சித்தியெய்தினார். பின் இலத்தீன் பயின்று மெட்ரிகுலேயுன் தெரிவில் தெரிவானர். சுயகட்டுப்பாட்டுடன் வாழ்ந்து பின்னர் துறவறத்தினை நாடி கொழும்பு பொறளையில் உள்ள புனித பேர்னாட் பெரிய குரு மடத்தில் மெய்யியல் பயின்றார். உலக நாடுகள் பலவற்றிலும் தமிழின் தொன்மையையும், பெருமையையும் எடுத்துக் கூறினார். பல்கலைக்கழகத்தின் இந்தியத் துறையில் பேராசிரியராக, மலேசிய கலைப் பீட பீடாதிபதியாகத் திகழ்ந்தார் தனிநாயகம் அடிகளார். 1964ம் ஆண்டு மலேசியாவில் முதன்முதலாகக் கூடிய அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டைக் கூட்டிய பெருமையும் இவரைச் சார்ந்தது. இந்த மகாநாடு பின்னர் 1968ல் சென்னைநகரிலும், 1970ல் பாரீஸ் நகரிலும், 1974ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலும், 1980ல் மதுரையிலும் தொடர்ந்து நடைபெற்றது. "தமிழ்ச்சால்பு" கூறும் காலாண்டு இதழையும் ஆரம்பித்து தரணியில் தமிழ் தழைக்கப் பாடுபட்டார். இவ்வாறு உலகம் போற்றிய தமிழுக்கு தன் முழு மூச்சையும் கொடுத்த அடிகளார் செப்டெம்பர் 1980ல் தமது 67வது வயதில் உயிர் நீத்தார். இவர் உயிர் பிரிந்தாலும் இன்றும் தமிழ் கூறும் நல்லுலகத்தில் அழியா இடம்பெற்றுள்ளார். இவரது புகழுக்கு சுயகட்டுப்பாடே முக்கிய காரணமாய் அமைந்தது. 'தனிநாயகத்திற்கு ஒரு சபாநாயகம் தேவையில்லை. அவர் ஒரு தனிநாயகம். தனிநாயகம் பேசிற்று என்றால் தமிழ் உலகமே பேசியது என்பது பொருள். தமிழ் உலகின் சின்னம் தனிநாயகம் என்று 1952 இல் யாழ்ப்பாணத்தில் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை செப்பினார். மூதறிஞர் ராஜாஜி கூறும் போது தனிநாயகம் பெயரைக் கேட்கும் போதெல்லாம் நான் எப்போதும் கவரப்பட்டுள்ளேன்." (I am always fascinated by the name of Thaninayagam) என்றார். இவ்வாறு கூய கட்டப்பாட்டின் மூலம் தன்னையும் தமிழையும் வளர்த்தார் தனிநாயகம் அடிகளார்.

சுய கட்டுப்பாட்டின் மூலம் வெற்றி பெற்றோர் பலர். சுய கட்டுப்பாடு எம்மிடம் இருந்தால் மட்டும் போதாது. அதைச் செயலில் இயக்க வேண்டும். அப்போது தான் எமது திறமை புலப்படும். எனவே தொடர்ந்து கற்றதனால் இவர்கள் தொடர்ந்து முன்னேறினர். இன்று உலகில் பெயர் பெற்று விளங்குகின்றனர். ஆற்றல் என்பது எல்லோரிடமும் உண்டு. ஒருவன் தன்னை அறிந்து தன்னில் நம்பிக்கை வைத்து தளராமனத்தோடும். தைரியத்தோடும் செயற்படும் போது உயர்வு என்பது தானாகவே ஏற்படும். இங்கு உயர்வுக்கு சுய கட்டுப்பாடே அச்சாணியாகும். மனித ஆளுமைக்கு சுய கட்டுப்பாடு அவசியமாகும். எமது மனதைக் கூட அலாதியாகத் திரிய விடாது கட்டுப்படுத்த வேண்டும். மனத்திடமும், செயலூக்கமும் எம்மில் நாம் கொண்ட நம்பிக்கையும் சுய கட்டுப்பாட்டை உறுதி செய்யும். தோல்வியிலிருந்து எம்மைக் காப்பாற்றும். வெற்றி இலக்குக்கு சுய கட்டுப்பாடு மிக உறுதுணையாக அமையும். நாம் கட்டுப்பாடாக இல்லாவிட்டால் எந்த வேலையையும் செய்ய முடியாது. எனவே சுய கட்டுப்பாட்டை ஒரு கலையாகவும் கருதலாம். எமது திறமையில் நாம் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். சுய கட்டுப்பாடு ஒரு பழக்கமாதலால் அதை நாம் வளர்த்தெடுக்க வேண்டும். அப்போது தான் சந்தர்ப்பம் வரும் போது நாம் சுய கட்டுப்பாட்டை சரி வரப் பயன்படுத்த முடியும். தோல்வி எம்மைத் தொடர்ந்து தாக்கும் போது சுய கட்டப்பாட்டுடன் செயற்பட்டால் வெற்றியடையலாம். வெற்றியின் உயர் நிலையை அடையவும் சுய கட்டுப்பாடு அவசியம். கோபம், பொறாமை, அச்சம், வெகுளி, பகைமை, சந்தேகம் என்பவற்றை விடுத்து அமைதியாக நாம் முயல்வோமாயின் வெற்றி நிச்சயம். எதற்கும் அஞ்சாது துஞ்சாது நாம் சுய கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். எமது நிறுவன இலக்கை. எமது இலக்கை அடைய சுய கட்டுப்பாடு திறவு கோலாகும். எனவே எமது ஆளுமைக்கு சுய கட்டுப்பாடு அவசியமாகும். பொறுமை, நிதானத்தைக் கடைப்பிடித்து எமது ஆளுமையை விருத்தி செய்யச் சுய கட்டுப்பாட்டை பேணுவோமாக! பொறுமை, நிதானம் என்பன சுயகட்டுப்பாட்டின் விளைவுகளே. "நியாயமாக தனக்கு உரிமையுள்ள அனைத்தையும் தனது சொந்த மன்னை முழுமையாக திறன் பெற்றிருக்கும் ஒருவரால் வசப்படுத்திக் கொள்ள முடியும் என்றார் உருக்காலை மன்னர் அண்ட்ரு கார்னகி. சிந்தனைப் பழக்கத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் சுய கட்டுப்பாட்டை எட்ட முடியும். சுய கட்டுப்பாடு என்பது சிந்தனையின் ஆற்றலோடு மட்டுமே சம்பந்தப்பட்டது. சுயம் சம்பந்தப்பட்ட அனைத்தும் மனதில் தோன்றுகின்றன. சிந்தனை பழக்கவழக்கங்கள் நமது கட்டுப்பாட்டிற்குட்பட்டவை. வாழ்க்கையின் சந்தர்ப்ப சூழ் நிலைகள் அவை.

"நான் சுய கட்டுப்பாடுடையவன்" என நாமே நமக்கு கூறிப் பெருமைப்பட வேண்டும். சுய கட்டுப்பாட்டால் விளையும் நன்மைகளைக் கற்பனை செய்ய வேண்டும். அந்தக் கற்பனைகளின் போது எழும் இனிய உணர்வுகளை அடிக்கடி நினைவில் கொண்டு வருவது நல்லது. கட்டுப்பாட்டின் விளைவாக வெற்றிகள் வரும் போது "அது தான் நான்" என்று பெருமிதப்பட வேண்டும். நமது இலக்கியங்களையும் அவற்றிலுள்ள ஈடுபாட்டையும் நினைவிற் கொள்ள வேண்டும். எதற்கும் தளராத மனம் வேண்டும். ஓரிரு முறை தவறினாலும் மீண்டும் மீண்டும் ஓர் ஒழுங்கிற்கும், கட்டுப்பாட்டிற்கும் வந்து சேர வேண்டும். அதிகம் சிந்திப்பவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடுவது மன உறுதியை வளர்க்கும். நமது எண்ணம் தான் செயலைத் தூண்டுகிறது. ஆகவே நமது கட்டுப்பாட்டை வளர்க்கும் எண்ணங்களை நாம் வரவேற்க வேண்டும். இல்லாவிடின் எண்ணங்களோடு கட்டுப்பாடும் எம்மை விட்டு நீங்கிவிடும். சுய கட்டுப்பாடு மனதில் தான் தொடங்குகிறது. அதை மன உறுதி என்பர். ஒரு நோக்கத்தையும் அதனை அடையும் வழியையும் ஆராய்ந்தால் கட்டுப்பாடு, ஒழுங்கு, நெறி ஆகியவை வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என அறியலாம். இதையே எலிசபெத்ஹெய்க் என்னும் அறிஞர் "விழிப்புணர்வு" என்கிறார். விழிப்புணர்வு எமக்கு வழிகாட்டி எம்மை வாழ்வில் வெற்றி ஈட்டச் செய்யும். ரே.கிராக் என்னும் பிரபல அமெரிக்க உணவு விடுதியாளர் சுமார் 10000 உணவு விடுதிகளை உலகெங்கும் திறந்திருந்தார். அந்த உணவு விடுதிகளின் பெயர் "மெக்டனல்டு" என்பது. அவர் வெற்றியீட்டிய இரகசியமாக மூன்று விதிகளைக் கூறுவார். முதலாவது விதி சாப்பிடும் இடத்தை, கழிவறை உட்பட சுத்தமாக வைத்திருப்பதாகும். இரண்டாவது விதி உணவுப் பொருட்களை சுடச்சுட வழங்குவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது விதி எல்லோரும் வாங்கக் கூடிய நியாயமான விலையில் விற்பதாகும். இப்படியான மூன்று விதிகளைக் கடைப்பிடித்து உணவு விடுதிகளின் வளர்ச்சியினையும் வருமானத்தையும் உச்சத்துக்கு கொண்டு சென்றார். கட்டுப்பாடும் கட்டுப்பாடான நோக்கமும் நாடு தழுவிய நிலையிலிருந்தால் நாடு முன்னேறும். சுய கட்டுப்பாட்டின் மூலம் உடலும் உள்ளமும் சுதந்திரமாக இயங்க முடிகிறது. அதிகாரம் புகழ் விரும்புபவர்களுக்கு சுய கட்டுப்பாடு தேவை. பொருளாதார செல்வ வளங்களை அடையவும் சுய கட்டுப்பாடு உதவுகிறது. திட்டவட்டமான குறிக்கோளை நோக்கி மனதைச் செலுத்த சுய கட்டுப்பாடு தேவை. சுய கட்டுப்பாடே திட்டங்களை சீராக செயற்படுத்த உதவுகிறது. மனதைக் கட்டுப்பாட்டில் வைத்து விரும்பியதை அடைய முடியும். மனச்சாட்சியை ஒத்துழைக்க வைத்து வழிகாட்டச் செய்ய சுய கட்டுப்பாடு தேவை. தலைமைப் பொறுப்புடையவர்களுக்கு இது அத்தியாவசியமாகும். அச்சத்தை அகற்றும், சந்தேகத்தை விரட்டும். முடிவெடுக்க உதவும். தன்னம்பிக்கையை வளர்க்கும். எனவே சுயகட்டுப்பாட்டுடன் செயல்படுவோமா!. உங்களை நீங்களே கட்டுப்படுத்தி ஒழுங்காகச் செயற்பட்டால் வேறு யார் உங்களுக்குத் தடையாக இருக்கப் போகிறார்கள். நீங்கள் தான் உங்களுக்கு எஜமான் என்பதை நினைவுறுத்திக் கொள்ளுங்கள். சுய கட்டுப்பாட்டின் பயன்கள் பல. எமது உடலும் உள்ளமும் சுதந்திரமாக இருக்கும். புகழ் நிலை நாட்ட சுய கட்டுப்பாடு தேவை. அதிகாரத்தை மேம்படுத்தும். பொருளாதார வளமடைய உதவும். குறிக்கோளை நோக்கி உடல் உள செயற்பாடுகளை செய்ய உதவும். திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவும். மனதை கட்டுப்பாட்டுடன் வைத்து விரும்பியதை அடைய உதவும். மனச் சாட்சியை வழிகாட்டி ஒத்துழைக்கச் செய்யும். தலைமையை நிலைநாட்ட உதவும். அச்சத்தையும் பயத்தையும் கவலையையும் அகற்றும். சந்தேகம் இருந்த இடம் தெரியாமல் மறையும். முடிவெடுக்க உதவுகிறது. தன்னம்பிக்கையையும் வளர்க்கிறது. விடாமுயற்சிக்கு உறுதுணையாக இருக்கிறது. உழைப்பிற்கு உந்துசக்தியாக உள்ளது. மன உறுதி உணர்ச்சிகள், மனச்சாட்சி காரண காரியம் பார்த்தல், நினைவாற்றல், கற்பனை வளம் என்று ஆறு காரணங்களுக்கும் சுய கட்டுப்பாட்டை ஏற்படுத்திச் செயற்படுவோமாக.

## புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றோர்களின் பங்களிப்பு

*2011ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சை முடிவடைந்த நிலையில் பல விடயங்கள் மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர்கள் மத்தியிலும் வினாக்களாக எழுந்து நிற்கின்றன. பிள்ளைகளை அதீத அக்கறையுடன் தயார்படுத்தியிருந்த பெற்றோர் சிறிது ஏமாற்றத்துடன் காணப்பட்டனர். அதே போன்று வழமைபோல பல விடயங்களையும் இயல்பாகவே கற்கின்ற மாணவர்களின் முகங்களில் மகிழ்ச்சியையும் காணமுடிந்தது. கற்பித்த ஆசிரியர்களும் எதிர்பார்த்த விதத்தில் வினாத்தாள் அமையாதிருந்ததும் தங்களுடைய உழைப்பிற்கு போதுமான வினாத்தாள் அல்ல என்ற கருத்தையும் முன்வைத்தனர்.*

*எது எவ்வாறாயினும் இவ்வாண்டில் நடந்து முடிந்த பரீட்சை வினாத்தாள் கடந்த ஆண்டுகளைப் போல் அல்லாது தகுதியானதும் 5ம் தர மாணவர்களுக்கான புலமையை வெளிப்படுத்தக் கூடியதுமான ஒரு நேர்த்தியான வினாத்தாள் என்பதே எனது கருத்தாகும். இதில் இருந்து ஒரு உண்மையை பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும் மாணவர்களுக்கு மன உழைச்சலைத் தருகின்ற விதத்திலோ அல்லது அதீதமான வன்முறைக் கற்பித்தலோ அவசியமில்லை என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். பொதுவாக இரு வினாத்தாள்களும் இயல்பான விடயங்களுடன் அமைந்திருந்தது. பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டிருந்ததன்படி [அவதானிப்புகளைத், தொடர்பு காணல், மொழிபெயர்ப்பு, இடைத்தொடர்புகள், எதிர்வு கூறல், தகவல்களின் ஒழுங்கமைப்பு, பிரதியீடு, பிரசினங்களைத் தீர்த்தல், தர்க்கித்தல், காரணகாரியங்களை இனங்காணுதல், அறிவுறுத்தல்களைப் பயன்படுத்துதல், வெளித் தொடர்புகளை இனங்காணல்] எனும் விடயங்களில் கவனம் செலுத்தி முறையான பயிற்சிகள் கொடுக்கப்பட்டாலே போதுமானதாக இருக்கும்.*

*மேற்குறிப்பிட்ட பதினான்கு விடயங்களையும் நன்கு தெரிந்து கொண்டு பயிற்சிகளை வழங்குவதோடு அவற்றுக்கான அறிவுறுத்தல்களைப் ஆசிரியர்களிடமிருந்து பெறுவதோடு அவற்றை தகுந்த முறையில் பயிற்சியளிப்பதற்கும் பெற்றோர் தயாராக இருக்கவேண்டும். இவ்விடயம் தொடர்பில் பெரும்பாலான பெற்றோர் தேர்ச்சியற்றவர்களாக இருந்தாலும் கூட பொருத்தமான பயிற்சி முறைகளை ஓரளவுக்கேனும் தெரிந்து கொண்டு கற்றல் செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல் பொருத்தமானதாக இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்றல், கற்பித்தலில் உளவியலின் வரலாறும் ஆய்வு முறைகளும்

க. கேதீஸ்வரன் B.Ed (Hons)

இன்று கல்வித்துறையுடன் இணைந்துள்ள ஏனைய அறிவியற் துறைகளனைத்தும் தனக்கென தனித்தனியான வரலாற்றினைக் கொண்டுள்ளன. இத் துறைகள் தமது வரலாற்றுப் படிநிலைகளில் ஏனைய துறைகளுடன் இணைந்து வளர்ந்திருந்தாலும் இன்று பெரும் தனித்துறைகளாகக் காணப்படுகின்றன. அந்தவகையில் உளவியற் துறையும் இவ் வளர்ச்சிப்பாதையின் மரபிலிருந்து தடம்புரளவில்லை.

உயவியற் துறையின் வளர்ச்சிப் பாதையின் ஆரம்ப நாட்களை நோக்குவோமாயின் அது தத்துவவியலோடு இணைந்ததாகவே வளர்ச்சியுற்றது. உளவியத்துறைக்கான விதையானது பிளேட்டோவினால் (Plato) விதைக்கப்பட்ட போதிலும் பிளேட்டோவின் சீடரான இன்றைய அறிவியல் உலகில் அனைத்துத் துறைக்கும் அடிப்படையானவராகப் போற்றப்படும் அரிஸ்ரோட்டிலால் (Aristotle) எழுதப்பட்ட "ஆன்மாவின் இயல்புகள்" என்ற நூலினை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது.



Plato
(427 BC - 347 BC)



Aristotle
(384 322 B.C.E)

17ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்திலேயே உளவியற் துறை தனித்துறையாக மாற்றம் பெற்றது, இக் காலகட்டத்திலேயே விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் இடம்பெற ஆரம்பித்தன, இதனை ஆரம்பித்த பெருமை டேக்காட்ஸ்டையே (Descartes) சாரும், இவர் தூண்டி-துலங்கல் (Stimulus-Response) பற்றிய கருத்தை உபயோகித்து உடலுக்கும் உள்ளத்துக்கும் உள்ள தொடர்பினை இவ் உலகுக்குத் தெளிவுபடுத்தினார். ஐம்புலன்களினால் உணரப்படும் தூண்டல்களானது (ஒலி, ஒளி, சுவை, மணம், தொடுகை உணர்வு) புலன் உறுப்புக்களினால் உள் நுகரப்பட்டு நரம்புகளின் (உட்காவுகை) ஊடாக மூளையினைச் சென்றடைகின்றது. இதனை அடுத்து மூளையானது ஒரு வகையான சக்தியை உண்டாக்கி நரம்புகளின் (வெளிக்காவுகை) ஊடாக வேண்டிய தசைகளுக்கு அனுப்பி உடல் பாகங்களை வேண்டியவாறு இயங்கச் செய்கின்றது, என்பதே இவரால் முன்வைக்கப்பட்ட தூண்டி-துலங்கற் கோட்பாடாகும். இன்று இக் கோட்பாடானது பெரும்பான்மையான உளவியலாளர்களினால் ஏற்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. டேகாட்டஸ் இக் கொள்கை தொடர்பான கருத்தினை முன்வைத்த போதிலும் பரிசோதனை முறைகளை முன்வைத்து இக் கோட்பாட்டிற்கு வலுச்சேர்த்தார் வெபர் (Weber).



Max Weber
(1864-1920)



Descartes
(1596 – 1650)

தொடர்ந்து 19ம் நூற்றாண்டின் இறுதியில் வில்கைம் வூண் (Wilhelm Wundt) (பரிசோதனை உளவியலின் தந்தை) உளத்தொழிற்பாடுகள் தொடர்பாக ஆய்வுகளை நடாத்த ஆய்வுகூடம் ஒன்றை நிறுவினார். அவ் ஆய்வு கூடத்திற் பலவகையான உளவியல் சார் ஆய்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு பலவகையான முடிவுகளையும் முன்வைத்தார். அம் முடிவுகள் புலக்காட்சி, உயர் உளத்தொழிற்பாடு, நடத்தை ஆகிய மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து, ஜேர்மனிய உளவியல் அறிஞர்களான கோலர், கொவ்கா, வேதிமர் (Wolfgang Köhler, Kurt Koffka, Max Wertheimer) ஆகியோர், (perception) அகக்காட்சி, (Insight) பிரச்சினை விடுவித்தல், ஆகிய துறைகளில் விரிவான பரிசோதனைகளை நடாத்தினர்.


Wilhelm Wundt
(1832-1920)


Wertheimer
(1880-1943)

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எப்பிங்கோஸ், குல்பே, பியாஜே (Hermann Ebbinghaus, Oswald Külpe, Piaget) ஆகியோர் ஞாபகம், சிந்தனை, கவனம் போன்ற உயர் உளத் தொழிற்பாடுகள் தொடர்பாக அதிகமான ஆய்வுகளை மேற்கொண்டு பலவகையான கருத்துக்களை அல்லது கோட்பாடுகளை முன்வைத்தனர்.


Kurt Koffka
(1886-1941)


Wolfgang Köhler
(1987-1967)

20ம் நூற்றாண்டில் மக்டுகல், தோண்டைக், ஸ்கின்னர் (McDougall, Thorndike, Skinner) ஆகியோர் இயல்பூக்கம், நடத்தை, மீளவலியுறுத்தல் சார்ந்த துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டு பலவகையான கோட்பாடுகளை முன்வைத்தனர்.


Oswald *Külpe*
(1862-1915)


Hermann Ebbinghaus
(1850-1909)

இறுதி நூற்றாண்டில் உளவியலானது தீவிர வளர்ச்சிகண்டதோடு, கல்வித் துறையுடன் இணைந்து விஞ்ஞான ரீதியாகவும் சமூகவியல் ரீதியாகவும் ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகளை முன்வைத்தமை கல்விரீதியான பிரயோகங்களுக்கு அடிப்படையாகவும் அமைந்தது. கல்வி உளவியல் என்று தனித் துறையாகப் பரிணமிப்பதற்கு இவ் ஆய்வு முடிவுகள் அடிப்படையாக அமைந்தது.

பரிசோதனைகள், வழமைக்குப் புறம்பான விளக்கங்கள், கருத்துக்கள் என்பவை உளவியலின் அம்சங்களாக காணப்படுகின்றன. அத்துடன், அதன் கருத்தும் காலத்தோடு விரிவடைந்து வந்துள்ளது. இவ்வாறு இருப்பினும் உளவியல் என்பது விலங்குகளினதும் மனிதர்களினதும் நடத்தைகள் பற்றிய அறிவியல் முறையிலான கற்கை எனக் குறிப்பிடப்படுகின்றது. விலங்குகளின் நிபந்தனைப்படுத்தல் தொடக்கம் மனிதனின் சிக்கலான, விவேகமான நடத்தை வரை இக் கற்கை வியாபித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமே.


*McDougall*
(1871-1938)


Edward Thorndike
(1874 –1949)


B.F. Skinner
(1904-1990)

இங்கு, நடத்தை என்பது இரு நிலைகளில் நோக்கப்படுத்தல் அவசியம். புறவயமாக அவதானிக கப்படக்கூடிய விலங்கின் அல்லது மனிதனின் வெளிப்படையான செயற்பாடுகள் ஒரு வகையாகும். குறித்த விலங்கோ மனிதனோ பெறுகின்ற அனுபவங்கள் இரண்டாவது வகையாகும். இதனைப் புறவயமாக அவதானித்தல் இயலாது. மாறாக, அவதானிக்கப்படும் செயல்களை (நடத்தைகள்) அடிப்படையாகக் கொண்டு அனுமானஞ் செய்யப்படுகின்றது.

எனினும், என்ன விடயம் ஆய்வுக்கு உட்படுகின்றதோ, அதனை விளக்குதலும், எதிர்வு கூறுதலும், கட்டுப்படுத்தலும் உளவியலின் குறிக்கோளாக அமைவது காலத்தின் தேவையாகிவிட்டது.

உளவியற் கருத்துக்கள், கோட்பாடுகள் என்பவற்றை முன்வைக்கும் பொருட்டுப் பல உளவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன, மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. முன்வைக்கப்படும் இத்தகவல்களின் நம்பகத்தன்மையானது பின்பற்றப்படும் ஆய்வு முறைகளிலேயே பெருமளவில் தங்கியுள்ளது. உளவியல் வரலாற்றோடு இணைந்ததாகவே உளவியல் ஆய்வுகள் பல உளவியல் அறிஞர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு, அவை இன்று கல்வித்துறைகளிற் பிரயோகம் செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவ் ஆய்வு முறைகளை ஆசிரியர்கள் தமது மாணவர்கள் தொடர்பான ஆய்வுச் செயற்பாடுகளின் போது எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதனை ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கலாம்.

சம்பவப் பதிவேடு முறை (Anecdotal records): விஞ்ஞான ஆய்வு முறையின் முதற்படியாக இதனைக் கொள்ளலாம். இம் முறையானது, ஆய்வின்போது அவதானிக்கப்படும் பெறுபேறுகளைத் தொகுத்து நோக்கவேண்டிய அவசியம் உணரப்பட்ட போது, அவதானிக்கப்படுபவரின் வாழ்க்கைச் சம்பவங்களைப் பதிவு செய்யும் முறை உளவியலாளரினால் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இம் முறையானது பயிற்சி பெற்றோர்களால் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. வகுப்பறைகளிற் காணப்படும் பிறழ்வான நடத்தையுடைய மாணவர்களின் நடத்தைகளின் வெளிப்பாட்டிற்கான காரணங்களை அறிவதற்கு ஆசிரியர்கள் இவ்வகையான ஆய்வுமுறையினை வகுப்பறைகளில் மேற்கொள்ள முடியும். உதாரணமாக A என்ற மாணவனின் தற்போதைய நடத்தைக்கான காரணங்களை அறிவதற்கு குறித்த மாணவனின் வாழ்க்கையில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்களைப் பதிவு செய்து அதனைத் தொகுத்து நோக்குவதன் மூலம் மாணவர்களின் பிறழ்வான நடத்தைக்கான காரணங்களை அறியலாம். இருப்பினும் இம் முறையில் ஆய்வாளரின் பழைய அனுபவங்களின் செல்வாக்கு, அகவயத்தன்மை என்பனவற்றின் பாதிப்புக்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றமை இம் முறையின் பாதகத் தன்மைகளாகும். இதனால் இம் முறையானது விஞ்ஞான முறையிலான ஆய்வுகளுக்குப் பொருத்தமற்றது எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

அகநோக்கு முறை (Introspection): ஒரு காலத்தில் இம் முறையானது உளவியலாளர்களிடையே ஒரு பிரபலமான முறையாகத் திகழ்ந்தது. நடத்தைகள் பற்றிய அறிவியலே உளவியல் என நாம் வரையறை செய்துவிட்டமையால், இங்கு, நனவுநிலை அனுபவங்களே ஆய்வுப் பொருளாக அமைகின்றன. ஒருவரது நனவுநிலை அனுபவங்கள் அவரது பிரத்தியேக விடயமாக இருக்கின்ற காரணத்தினால், குறித்த நபரினால் மட்டுமே இவை அவதானிக்கப்படலாம். எனவே, இவற்றினை அவதானிப்பதற்குச் சிறப்பான உத்திகள் கையாளப்பட வேண்டும். இத்தகைய அணுகுமுறை அகநோக்கு முறை எனப்படும். இங்கு சுய - உற்றுநோக்கல் இடம்பெறுகின்றது. அதாவது, ஆய்வாளன் தனது நனவு நிலையிலுள்ள சிந்தனை, உணர்வுகள், நோக்கம் ஆகியன சார்ந்த அனுபவங்களை, தானே அறிவியல் முறையில், அதாவது புறவயமான வகையில் ஆராய்கின்றார்.

இம்முறை தொடர்பான அறிவையும் திறனையும் ஆசிரியர்கள் கொண்டிருத்தல் வேண்டும். இதன் மூலம் ஆசிரியர்கள் சுய நடத்தை மாற்றங்கள் தொடர்பாக சிறப்பான முறையில் ஆய்வுசெய்ய முடிகின்றது. அத்தோடு, ஒரே நேரத்தில் பல மாணவர்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டவும் முடிகின்றது. உதாரணமாக A என்ற வகுப்பு மாணவர்கள் அனைவரிடமும் குறித்த ஆசிரியர்கள் “உங்கள் ஒவ்வொருவருக்கும் கோபம் வரும்போது உடலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து எழுதிவருதல் வேண்டும்” எனக் கூறும் பட்சத்தில் அவ் விடயம் தொடர்பாக அனைத்து மாணவர்களினதும் தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இங்கு, உற்றுநோக்குபவரும், உற்று நோக்கப்படுபவரும் ஒரே நபர் என்பதால் இம்முறையில் பல குறைபாடுகள் ஏற்பட இடமுண்டு.

- ஒரு நபர் தனக்குக் கோபம் ஏற்படும் போது தன்னில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கும் பொழுது, அவரது கோபம் குறைவடைவதனால் மாற்றங்களை அவதானிக்க முடியாது போய்விடுகின்றது.
- பிறரின் நடத்தைகளை இம் முறையின் மூலம் அவதானிக்க முடியாது. உதாரணமாக திருடனின் நடத்தைகளை அறியத் திருடனாக மாறவேண்டிய நிலை ஏற்படுகின்றது.
- முடிவுகள் நபருக்கு நபர் வேறுபட வாய்ப்புகள் உண்டு. ஏனெனில் அகவயத்தன்மை அதிகம் காணப்படும்.
- நனவு நிலைத் தொழிற்பாடுகளை ஓரளவு அறியலாம், மாறாக நனவிலி நிலைத் தொழிற்பாடுகளை அறிதல் கடினமானது.

இம் முறையின் தொடக்ககாலப் பயன்பாட்டின் போது, குறித்த ஒரு தூண்டிக்கு ஒருவர் எவ்வகையான அனுபவங்களைப் பெறுகின்றார் என்பதைக் குறித்த நபரே, தனது நனவுநிலை அனுபவங்களைப் பற்றிய புறவயமான அறிக்கை மூலம் உளவியல் ஆய்வாளருக்கு வழங்கும் முறை காணப்பட்டது.

உற்றுநோக்கல் முறை (Observation Method): இம் முறையானது பரவலாகப் பயன்படுத்தப்பட்ட பிரபலமான முறையாகவும் நம்பகரமான தரவுகளை வழங்கும் முறையாகவும் உள்ளது.

ஆய்வாளன், தான் அவதானிக்க வேண்டியவற்றினைப் புறவயமாக அவதானித்துத் தகவல்களைப் பெறுதல் இம் முறையின் சிறப்பு அம்சமாகும். ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற விலங்கிலோ அல்லது மனிதனிலோ காணப்படும் நடத்தைகளை வழுவின்றி உற்றுநோக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டு பல உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. நவீன இலத்திரனியல் யுகத்தில் உற்றுநோக்கல் என்பது இலகுவானதாகவும், மிக நம்பகரமானதாகவும் தென்படினும், உற்றுநோக்கப்படுபவை மேலே குறிப்பிடபட்டவாறு ஓர் உயிரியின் புற நடத்தைகள் மட்டுமே என்பது இங்கு கவனத்துக்குரியது. இன்று வகுப்பறைகளில் ஆசிரியர்கள் அறிந்தோ அறியாமலோ மாணவர்கள் தொடர்பான பண்புகளை அறிவதற்கு இம் முறையினைப் பயன்படுத்துகின்றனர். 1998 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிற் பாடசாலைமட்டத்தில் மாணவர்களின் பண்பு ரீதியான தலைமைத்துவம் ஏற்கும் திறன், குழுச் செயற்பாடுகளில் ஈடுபடல்..... போன்ற பல விடயங்கள் அறியப்படுகின்றன. இவ் ஆய்வுமுறையைப் பின்பற்றுவதன் மூலம் மாணவர்களின் பண்புசார் விருத்தியை இலகுவாக மதிப்பிட முடியும் என்பதுவும் இவ்விடத்திற் குறிப்பிடத்தக்க விடயமே.

பரிசோதனை முறை (Experimental Method): விஞ்ஞானத் துறைக்கு மாத்திரமே உரித்தான இம் முறையானது, பிற்காலத்தில் சமூகவிஞ்ஞானத் துறைகளிலும் பயன்படுத்தப்படலாயிற்று. ஆய்வுகூட முறையை உளவியலிற் பின்பற்றும் போது, ஆய்வாளன் தான் விரும்பிய மாறிகளைக் கட்டுப்படுத்துவதுடன் விரும்பிய ஏனைய மாறிகளின் செயற்பாடுகளை உற்றுநோக்கவோ அளந்தறியவோ முடிகின்றது. சில மாறிகளின் தாக்கங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைகளிலோ அல்லது இனங்காணப்படாத மாறிகளின் செல்வாக்கு ஆய்வுப் பெறுபேற்றில் தாக்கமேற்படுத்தாமையை உறுதிப்படுத்தும் பொருட்டு கட்டுப்படுத்திய பரிசோதனைகள் பெருமளவில் மேற்கொள்ளப்படுகின்றன. தற்காலத்தில் பரிசோதனை முறையானது பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் ஆய்வுகளை மேற்கொள்ளுபவர்கள் ஆய்வு கூடங்களை அமைத்து மிருகங்களிலும் மனிதர்களிலும் ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றனர். இதற்கு எடுத்துக்காடாக வில்கைம் வூண்ட, வீ.எவ்.ஸ்கின்னர், போன்ற பேராசிரியர்களைக் குறிப்பிடலாம்.

தனியாள் வரலாற்று முறை (Case history method): குறிப்பாகப் பிறழ்வான நடத்தையுடையோரினது பிரச்சினைகளை ஆராயும் நோக்கில் உளவியலில் இம்முறை பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. ஆய்வுக்குட்படுவோனின் குடும்ப, சூழற்காரணிகள் உட்பட அவனது உள, உடல் நிலைமைகள் பற்றிய தரவுகள் படிமுறையாகச் சேகரிக்கப்பட்டு, பின்னர் பிள்ளைவழிகாட்டு மருத்துவ நிலையங்களாற் கையாளப்படும். அசிரியர்கள் பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவர்கள் தொடர்பாகவும் விவரங்களை அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் குறித்த மாணவனின் நடத்தைகட்கு அவனது பரம்பரை, சூழல், குடும்பப்பின்னணி, சமூகக் காரணிகள், உடல், உளரீதியான காரணிகள் எவ்வாறு செல்லாக்குச் செலுத்தியுள்ளன என்பதனை அறிய இவ் ஆய்வு முறையினைப் பயன்படுத்தலாம். இவ்வாறு பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு குறித்த மாணவனை ஆற்றுப்படுத்தவும் முடியும்.

விருத்தி முறை (Development Method): பிள்ளைகளின் பல்வேறு வயது மட்டங்களிற் காணப்படும் தொழிற்பாடு, விருத்தி பற்றி அறிய உளவியலாளர்கள் இம் முறையினைப் பெருமளவில் பயன்படுத்துவர். ஒரு விபரத்தை கவனமாக அவதானம் செய்து நியமங்களைப் பெறுதலே இம் முறையாகும். உடல், உள வளர்ச்சி நியமங்கள் போன்றவை ஆய்வின் பொருட்டு அறியப்படுவதற்கு இம் முறை சிறந்தது. இரு பிரதான முறைகளில் இவ்வகை ஆய்வு மேற்கொள்ளப்படலாம். குறித்த விருத்திப் படிநிலையிலுள்ள பல நபர்களை ஒரே நேரத்தில் (சமகாலத்தில்) அவதானிக்கும் குறுக்கு-வெட்டு முறை ஒரு வகையாகும். ஒரு நபரைப் பல்வேறு படிநிலைகளில் (அதாவது பல்வேறு காலப்பகுதிகளில்) அவதானிக்கும் மற்றைய முறை நெடுங்கோட்டு முறை எனப்படும். பின்னைய முறையானது, குறித்த ஓர் இயல்பு பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு மிக நீண்ட காலம் வரை (சில சந்தர்ப்பங்களில் வாழ்க்கைக் காலம் வரை) அவதானிக்க வேண்டிய தேவைவிருப்பதால், நடைமுறைச் சாத்தியம் குன்றியது. இம் முறையினை ஆசிரியர்கள் வகுப்பறைகளிற் பிரயோகம் செயவதன் மூலம் குறித்த ஓர் மாணவன் தொடர்பான பிறப்பு முதல் தற்காலம் வரையிலான விபரங்களை அறிந்து அவ் மாணவனின் விசேட இயல்புகளை அறிக்கையாக்கலாம். அல்லது குறித்த ஓர் வகுப்பு மாணவர்களை ஆய்வு செய்து அவ் மாணவர்களின் அல்லது அவ் வயதுப்பிரிவினரின் பொதுவான உடல், உள இயல்புகளை அறிக்கையாக்க உதவுகின்றது. இம்முறையும் ஆசிரியர்களின் செயற்பாடுகளுக்குப் பெரிதும் உதவுகின்றது. இவை இரண்டையும் விட, ஆய்வுக்குட்படுபவரின் கடந்தகால நிகழ்வுகளை (இயல்புகளை) அவரிடமே கேட்டறிந்தோ, அல்லது வேறு வழிகளிற் பெற்றோ ஆய்வினை நடாத்தவும் முடியும். ஆயினும், இவ்வாறு பெறப்படும் தகவல்களின் நம்பகத்தன்மையை தாழ்வாக இருப்பது இதன் பிரதான குறைபாடாகும்.

இவ்வாறான ஆய்வு முறைகளை ஆசிரியர்கள் ஆய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது பிரயோகம் செய்யும் பட்சத்தில், ஆசிரியன் ஆய்வாளனாக மாறவும், பல வகையான திறன்களை விருத்தியாக்கிக் கொள்ளவும், தகைமைகளை விருத்தியாக்கிக் கொள்ளவும் முடியும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலையில் தலைமைத்துவத் திறன்களை விருத்தி செய்வதற்கான சந்தரப்பங்கள்

**M.M. ஹிர்பஹரான்**

B.A., P.G.D.E. (Merit), D.C.Sc. (Merit) , M.Ed.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். நாளைய சமூகத்தை வழிநடாத்தும் அறிவையும் ஆற்றலையும் கொண்டவர்களாக மாணவர்களை மாற்றுதவதற்கு தேவையான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும், அறிவையும், பயிற்சிகளையும், சந்தர்ப்பங்களையும் வழங்க வேண்டிய கடப்பாடு பாடசாலைகளுக்குண்டு.

தலைமைத்துவம் பற்றி இன்று எல்லோராலும் பேசப்படுகின்றது. ஒரு நிறுவனம் தனது நிறுவனத்திற்கு பணியாட்களை சேர்த்துக்கொள்ளும்போது தலைமைத்துவத் திறன் கொண்டவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கின்றது. காரணம் ஒரு நிறுவனத்தின் வெற்றியானது ஒரு கூட்டு முயற்சியாகும். (Team Work) அந்த கூட்டு முயற்சி வெற்றியடைய தலைவரின் செயற்பாடு மிக முக்கியமானதாகவுள்ளது. அது மாத்திரமல்லாமல் பாடசாலை வாழ்க்கை, விளையாட்டு, குடும்பவாழ்கை, மற்றும் பிரயாணம் போன்ற சந்தர்பங்களை நோக்கும் போதும், மேற்கொள்ளவேண்டிய விடயங்களை நிர்ணயித்து , ஒழுங்குபடுத்தி, அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றத் தேவையான திட்டங்களைத் தீட்டி, அத்திட்டங்களை தம்மோடுள்ள பலரையும் ஆர்வத்தோடு பங்குபற்றச் செய்வதற்கும், குறித்த செயற்பாடுகளின்போது ஏற்படக்கூடிய முரண்பாடுகள், சிக்கல்கள் என்பவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகளை இனங்கண்டு வழிநடாத்தும் பொறுப்பு தலைவரைச் சார்ந்தது.

அந்தவகையில் பாடசாலை வாழ்கையில் மாணவர்களுக்கு தலைமைத்துவத் திறன்களை வளர்ப்பதற்கான சந்தர்பங்களை ஏற்படுத்திக் கொடுத்து பிற்பட்ட சமூக வாழ்கையில் அல்லது தொழில் வாழ்க்கையில் அவர்கள் நுழையும் போது அதற்கான தகைமைத் திறன்களைக் கொண்ட சிறந்த தலைவர்களாக மிளிர வழிகாட்ட வேண்டியது ஒவ்வொரு ஆசியரினதும், அதிபர்களினதும் பொறுப்பாகவுள்ளது. அந்தவகையில் தலைமைத்துவம் தொடர்பான சில அடிப்படை அம்சங்களை நோக்குவோம்.

**தலைமைத்துவம் என்றான் என்ன?**

தலைமைத்துவம் என்பது வற்புறுத்தல் இல்லாத வழிமுறைகளினூடாக மக்களை செயற்பட ஊக்குவிப்பதன் ஊடாக ஒரு திட்டமிட்ட திசையில் நகர்திச் செல்லும் செயன்முறையாகும். அத்திசை நீண்ட குறிக்கோளைக் கொண்டதாகவோ அல்லது குறுகிய கால குறிக்கோளைக் கொண்டதாகவோ அமையலாம். ஒரு குழுவின் தலைவர் என்பவர் ஒரு குறித்த அந்தஸ்து வழங்கப்பட்டு , அதற்கு பொருத்தமான முறையில் செயற்படவேண்டும் என எதிர்பார்கப்படும் அங்கத்தவராவார். அத்தோடு தமது குழுவின் இலக்குகளை அமைப்பதிலும், அவற்றை நிறைவேற்றிக்கொள்வதில் செல்வாக்குச் செலுத்வேண்டிய ஒருவராகவும் இருக்கின்றார். தலைவருக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் இடையில் ஒரு இனம்புரியாத தொர்பு காணப்படும். அது மாத்திரமல்லாமல் தலைவர்கள் உருவாக்கப்படுகின்றார்களே தவிர அவர்கள் பிறப்பதில்லை எனவே ஒரு குழுவின் தலைவர் அவருக்குத் தேவையான அறிவையும், திறன்களையும் , மனப்பாங்கையும் ,சமனிலை ஆளுமையையும் வளர்த்துக்கொள்வதன் மூலம் தமது இலக்குகளை நோக்கி தமது குழுவினரை வழிநடத்துவதில் வெற்றிகொள்வது சாத்தியமாகும்.

இதற்காக மற்றவர்களின் உணர்வுகள் எவ்வாறு உள்ளது? அவர்கள் என்ன சிந்திக்கிறார்கள், மற்றவர்களின் விருப்பு வெறுப்புக்கள் என்ன? அவர்களின் தேவை என்ன? என்பதை அறிந்து செயற்படுவதன் மூலம் தலைவர்கள் தமது இலக்குகளை சாத்தியமாக்கிக் கொள்ளமுடியும்.

**செயற்திறன்மிக்க தலைமைத்துவம் என்றால் என்ன?**

செயற்திறன்மிக்க தலைமைத்துவம் என்பது தூரநோக்கு ஒன்றை (Vision) உருவாக்கி, அதை அடைவதற்கான செயல் நுணுக்கத்தை விருத்தி செய்து, பிறரின் ஒத்துழைப்பைத் திரட்டி, தூரநோக்கை அடைந்து கொள்வதற்கான செயற்பாட்டை ஊக்குவிக்கின்ற ஒரு செயல்முறையாகும். செயற்திறன் மிக்க தலைவரானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிர்காலம்பற்றிய தூர இலக்கை (Vision) உருவாக்குவார்.
- அத்தூர இலக்கை நோக்கி இயக்குவதற்கென அறிவுபூர்வமான செயல் உபாயங்களை (strategies) விருத்தி செய்வார்
- அவ்வாறு இயக்குவதற்கு அவசியமாகின்ற ஒத்துழைப்பையும் இணக்கத்தினையும் குழு முயற்சியை வழங்கக்கூடிய முக்கிமான கூட்டத்தினரின் ஆதரவையும் திரட்டுவார். (Team building and get support from them)
- செயல் உபாயங்களை ( Strategies) அமுல்படுத்தும் விடயத்தில் முக்கி பங்கெடுத்து தொழில்படக்கூடிய ஆட்களை நல்லமுறையில் ஊக்குவிப்பார்.



**தலைமைத்துவத்தின் வகைகள்**

பல்வேறுபட்ட தலைமைத்துவ வகைகள்பற்றி ஆய்வு செய்வதற்காக 1939 ஆம் ஆண்டு கேட்லீவின் என்ற உளவியலாளர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவில் 3 வகையான தலைமைத்துவ வகைகள் வெளியிடப்பட்டன. இந்த ஆய்வானது பாடசாலை சிறுவர்கள் மத்தியிலே மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### 1. ஏகாதிபத்திய தலைமைத்துவம் Authoritarian Leadership (Autocratic)

ஏகாதிபத்திய தன்மைகொண்ட தலைவர்கள் என்ன வேலை, எப்போது , எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்ற தெளிவான எதிர்பார்ப்பை முன்வைக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். தலைவருக்கும் அவரைப் பின்தொடர்கின்றவர்களுக்கும் இடையில் மிகத் தெளிவான வேறுபாடு காணப்படும். இத்தகைய தலைவர்கள் தம்முடன் இணைந்து பணியாற்றுகின்ற ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்களை செவிமடுக்காது சுதந்திரமாக தீர்மானங்களை எடுப்பவர்களாக காணப்படுவர். இத்தகைய தலைமைத்துவத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் புத்தாக்கம் குறைந்தததாகவே காணப்படும் என்பது ஆய்வாரள்களின் முடிவு.

ஒரு குழுவை ஒன்றிணைத்து ஒரு தீர்மானங்களை எடுப்பதற்கு போதிய அவகாசம் இல்லை என்ற சந்தர்ப்பத்திலும், குறிப்பிட்ட ஒரு குழுவிற்கு தலைமைதாங்கும் ஒருவர், அக்குழுவில் தன்னைவிட அறியாதவர் யாருமில்லை என்ற நிலையிலும் இத்தகைய சர்வாதிகாரத் தலைமைத்துவம் மிகச்சிறப்பாக பயனளிக்கும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

### 2. பங்கு கொள்ளும் அல்லது ஜனநாயகவாத தலைமைத்துவம் Participative Leadership (Democratic)

கேட் லீவினால் முன்வைக்கப்பட்ட இவ்வகைத் தலைமைத்துவம் பொதுவாக தாக்கமிக்க ஒன்றாகக் காணப்படுகின்றது. ஜனநாயக வாதத் தலைவர்கள் தமது குழு உறுப்பினர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குகின்றனர். மட்டுமன்றி தாங்களும் அக்குழுவில் ஒருவராகப் பங்குகொள்வதோடு தமது குழுவில் உள்ள ஏனைய ஊழியர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கின்றனர்.

லீவினின் இந்த ஆய்வின்படி , இத்தலைமைத்துவப் பண்பைக்கொண்ட குழுவில் இருந்து மாணவர்கள் முந்திய குழுவைவிட செயற்திறன் குறைந்தவர்களாக காணப்பட்டனர். எனினும் இக் குழுவின் பங்களிப்பு மிக உயர்ந்த தரத்தைக் கொண்டிருந்தது. பங்கு கொள்ளும் அல்லது ஜனநாயகப் பண்பைக்கொண்ட தலைவர்கள் தமது தலைமைத்துவச் செயன்முறையில் ஏனைய உறுப்பினர்களும் பங்கு கொள்ளும்வகையில் ஊக்குவிப்பு வழங்கினாலும் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் இறுதி அதிகாரத்தை தம்மிடம் வைத்துக்கொள்வார்.

### 3. பகிர்ந்தளிக்கும் தலைமைத்துவம் / கட்டுப்பாடற்ற நிலை Deligative (Laissez Faire) Leadership

இத் தலைமைத்துவப் பண்பைக்கொண்ட தலைவர்கள், தமது தலைமைத்துவத்தின் கீழ் உள்ளவர்களுக்கு மிகக்குறைந்தளவு வழிகாட்டல்களை வழங்கக்கூடியவர்களாக அல்லது அறவே வழிகாட்டாதவர்களாக இருப்பர். தீர்மானம் எடுக்கும்போது அதிகாரத்தை தமது குழு உறுப்பினர்களிடம் கொடுத்துவிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு உறுப்பினர்கள் , குறிப்பிட்டவிடயத்தில் துறைசார்ந்தவர்களாக இருக்கும்பட்சத்தில் இவ்வகையான தலைமைத்துவம் தாக்கமுள்ளதாக இருக்கும் எனினும் ஊக்கம் சுறுசுறுப்பு என்பன குறைந்ததாகவே காணப்படும்.

இம் மூன்று வகையான தலைமைத்துவங்களிலும் இரண்டாம் வகையான தலைமைத்துவம் சிறப்பானது எனினும், ஏனைய இருவகையான தலைமைத்துவங்களும் சிற்சில சந்தர்பங்களில் பயனளிக்கத்தக்கன என்பது குறிப்பிடத்தக்கது.



பாடசாலை மாணவர்களுக்கு தலைமைத்துவத் திறன்களின் அவசியம்

பாடசாலை மாணவர்களுக்கு தலைமைத்துவத்திறன்கள் ஏன் அவசியம் என பார்க்கும்போது தொழில் நிறுவனங்கள் தமது ஊழியர்கள் இத்தகைய தலைமைத்துவத்திறன் கொண்ட பட்டதாரிகளாக இருக்கவேண்டும் என எதிர்பார்கின்றது. அதுமாத்திரமல்லாமல் இன்று அரச துறைகளில் வேலைகளை பெற்றுக்கொள்வதென்பது மிகக்கடிமானதாக காணப்படும் அதேவேளை தனியார் துறையைச் சேர்ந்த முகாமையாளர்களிடம் செய்யப்பட்ட ஆய்வில் பின்வரும் ஆளுமைப் பண்புகளையும், திறன்களையும் கொண்ட பட்டதாரிகளையே அவர்கள் எதிர்பர்க்கின்றனர்.

அதாவது தொடர்பாடல் சார்ந்த திறன் , வசீகரமான தோற்றம், நன்நடத்தை, ஆளிடைத் தொடர்புகளைப்பேணல், தலைமைதாங்கும் பண்பு, புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கும் ஆற்றல், தொழில்சார் சிறப்புத் திறன்கள், தன்னார்வம், ஆக்கத்திறன், தன்னடக்கம், தீர்மானங்களை மேற்கொள்ளும் திறன், ஒழுங்கமைக்கும் திறன், கவனம், மதிநுட்பம், விழிப்புணர்வு போன்றவற்றை எதிர்பார்க்கின்றனர்.

அதுமாத்திரமல்லாமல் சமய நிறுவனங்கள், நலன்புரிமன்றங்கள், இளைஞர் கழகங்கள் போன்ற அமைப்புகளில் உள்ளவர்கள்கூட பாடசாலை மாணவர்கள் தலைமைத்துவத் திறன்களையும், பண்புகளையும் பெற்றுக்கொள்ளவேண்டும் அப்போதுதான் அவர்களால் தங்கள் சமூகத்திற்கு உதவி செய்யவும், வழிநாடாத்திச் செல்லவும் முடியும் எனக்கருதுகின்றனர்.

உண்மையில் இன்றைய மாணவர்கள்தான் நாளை எமது சமுதாயத்தை முன்னெடுத்துச் செல்லும் தலைவர்களாக இருக்கப்போகின்றனர். நாளைய சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்லும் பொறுப்பும் கடமையும் இவர்களையே சாரும் என்பதனால் பாடசாலைக் காலங்களிலேயே தலைமைத்துவப் பண்புகளையும், திறன்களையும் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

குறித்த சமூகம், கல்வி கற்ற மேதைகளுக்குப் பின்னால் செல்வதைவிட, கல்வியோடு தலைமைத்துவப் பண்புகளையும் திறன்களையும் கொண்ட ஒருவருக்குப் பின்னால் செல்வதையே விரும்புகின்றது. அதையே பாதுகாப்பு எனவும் கருகின்றது. அந்தவகையில் பார்க்கும்போதும் பாடசாலைக் காலங்களில் தலைமைத்துவப் பண்புகளையும் திறன்களையும் பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

பாடசாலையில் தலைமைத்துவத் திறன்களை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்கள்.

- விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள்.
- மாணவர் மன்றம்
- காலை ஆராதனை நிழ்ச்சிகள்
- பாடசாலைச் சிரமதானங்கள்.
- மாணவர் பாராளுமன்றம்.
- பாடசாலை நிகழ்ச்சிகள்
- கலை விழாக்கள்.
- க.பொ.த. சாதாரண தினம்
- க.பொ.த. உயர்தர தினம்
- சாரணர் பயிற்சி முகம்
- உயர்தரப் பிரிவு ஒன்றியம்
- கல்விச் சுற்றுலா
- களப்பயணம்
- முதலுதவிப்பிரிவு
- இசை வாத்தியப்பிரிவு ( Band)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர் தலைவர் ( Prefect)
- வகுப்புத் தலைவர் (Monitor)
- கலாசாரக் கழகம்
- சுற்றாடல்க் கழகம்
- சுகாதாரக் கழகம்
- சமாதானக் கழகம்
- கிரிக்கட் கழகம்
- காற் பந்தாட்டக் குழு
- வலைப் பந்தாட்டக் குழு
- கூடைப் பந்தாட்டக் குழு
- அணி நடைக் குழு
- விவாதக் கழகம்
- ஆங்கிலக்கழகம்
- தமிழ் மன்றம்
- கண்டுபிடிப்பாளர் கழகம்.
- பட்டிமன்றம்
- கலைவிழாக்கள்
- கல்விக் கண்காட்சி



இதுபோன்ற இன்னும் பல நிகழ்ச்சிகள் மாணவர்களின் தலைமைத்துவத் திறன்களை வளர்க்கும் சந்தர்பங்களாக அமைகின்றன. இவை தவிர ஆசிரியர்கள் திட்டமிட்டு ஏற்பாடு செய்கின்ற விசேட நிகழ்ச்சிகளும் மாணர்களின் தலைமைத்துவத் திறன்களையும் பண்புகளையும் விருத்தி செய்வதற்கான சந்தர்பங்களாக அமைகின்றன.

தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகள்

மணவர்களாயினும் சரி, ஏனையவர்களாயினும் சரி ஒருவர் சிறந்த தலைவராக மாறுவதற்கு அதற்கே உரிய பண்புகளை தன்னகத்தே கொண்டிருப்பது அவசியமாகும். அந்தவகையில் ஒருதலைவரிடம் காணப்பட வேண்டிய பண்புகளை பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

- உண்மைத் தன்மை / நம்பகத் தன்மை. (Intergrity)
- தூர நோக்கான சிந்தனை (Visionary Thinking)
- தொடர்பாடற் திறன். (Communication Skill)
- ஏனையவர்களுடன் சுமுகமான உறவு (Relationship)
- செல்வாக்குச் செலுத்தும் தன்மை ( Persuation / influence)
- நெகிழ்வுத் தன்மை (Adaptability)
- குழுவாக சேர்ந்து வேலை செய்யும் பண்பு (Team Work)
- பயிற்சி அளித்தலும் விருத்தி செய்தலும் (Training and Development)
- தீர்மானிக்கும் ஆற்றல் (Decision Making)
- திட்டமிடல் ( Planning)
- கலந்துரையாடல் (Discussion)
- பொறுமையும் சகிப்புத் தன்மையும்
- தான் தொடங்காற்றல்
- முன்மாதிரியாக செயற்படல்
- மற்றவர்களை மதிக்கும் மனங்பாங்கை கொண்டிருத்தல்

இவை தவிர இன்னும் பல பண்புகள் சிறந்த தலைவரிடம் காணப்படுகின்றன.

எனவே இவ்வாறான பண்புகளையும் திறன்களையும் மாணவர்கள் பாடசாலைக் காலங்களில் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்பங்களையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதனூடாகவும். சிறந்த தலைவர்களின் வரலாறுகளைப் படிப்தற்கான வழிப்படுத்தல்களை மேற்கொண்டு அதனைப் படிப்பதனூடாகவும் சிறந்த தலைமைத்துவப் பண்புகளை அறிந்து, தமது பாடசாலை வாழ்கைக் காலத்திலேயே அவற்றை செயற்படுத்துவதற்கான சந்தர்பங்களை ஏற்படுத்திக்கொடுப்பதனூடாக அவர்கள் நல்ல அனுபவங்களைப் பெற்று சமூகத்தின் சிறந்த தலைவர்களாக மாற்றுவதற்கு முயற்சிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியும் சமூகமும்

ஆக்கம்: பேராசிரியர் டெனிசன்
தமிழில்: A.A. அசீஸ் (R.N)

ஏனைய சமூக அமைப்புகளுடன் ஒப்பிடும்போது கல்வியை நவீன சமூகத்தின் மிகச்சிறப்பு வாய்ந்ததொரு அமைப்பாகக் கொள்ள முடியும். கல்விக்கும் சமூகத்திற்குமிடையே காணப்படும் தொடர்பு யாது என்பன விரிவான முறையில் விளக்கும் சமூக விஞ்ஞானத்தின் துணைப் பாடமான 'கல்வியின் சமூகவியல்' (Sociology or education) குறிப்பிட முடியும். கடந்த அரை நூற்றாண்டினுள் கல்வியின் சமூகவியல் மிக விரைவாக தனது தனிப்பண்புகளை உருவாக்கி கொள்வதன் மூலம் விருத்தியுற்றிருப்பதைக் காண முடிகின்றது. இத்துணைப்பாடத்தின் மூலம் கல்வி மற்றும் ஏனைய அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுடன் உள்ள தொடர்பு அதாவது கல்வியும் பொருண்மிய முறையும், கல்வியும் சமூக நிரலாக்கமும் (stratification) போன்ற கருப்பொருட்கள் விஷேடமாக கவனத்தை ஈர்ப்பதைக் காண முடிகிறது.

மானிட சமூகத்தின் தொடக்கம் முதல் கல்வி ஒரு வகைச் செயன்முறையாக காணப்பட்டது போல் தென்படுகின்றது. முறைசார் அல்லாத முறைசாராக் கல்வி மூலம் உலகின் பல்வேறு சமூகங்களுக்குரிய ஜன வர்க்கத்தினர் அறிவுத் தொகுதிகளைப் பெற்ற வண்ணம் சமூக நிலைப்புக்கு வழிகோலுகின்றனர். விஷேடமாக தொன்மைக்கால கல்வி, சமயம், அறநெறி மற்றும் மறைநிலை விஞ்ஞானத்தை கருப்பொருளாகக் கொண்டு தொழிற்பட்டுள்ளமை தென்படுகின்றது. மத்திய கால ஐரோப்பிய சமூகத்தில் அதே போல் கீழைத்தேய நாடுகளிலும் அக்காலப்பகுதியில் பரவியிருந்தது. மத அனுஷ்டான நிலையம் சார் கல்வி முறையாகும். இலங்கையில் தொன்மையான கல்வி முறை புத்த தர்மத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் மதகுருமாரின் (பிக்குமார்) செயற்பணியும் பிரதானமாகக் காணப்பட்ட பல்வேறு கீழைத்தேய மொழிகளைக் கற்பித்தல், உள்நாட்டு வைத்தியம், சோதிடம் கற்றல் என்பன அக்கால கல்வியில் காணப்பட்ட வேறுபட்டுத் தென்படும் அம்சங்களாகும். குணநல அபிவிருத்தி கல்வி மூலம் வழங்கப்படுதல் கவனிக்கப்பட வேண்டிய பிரதான அம்சமாகும்.

நவீன சமூகத்தில் முறையான ஒழுங்கமைப்பாக கல்வி தொழிற்படுவதை காண முடிகிறது. பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகங்கள் என்பன முறையான ஒழுங்கமைப்புகளுக்கு உதாரணங்களாகும். முழுநேர ஊழியர்கள், அதாவது போதகர்கள், ஆசான்கள், விரிவுரையாளர்கள் இந்நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுவர்.

அதே போல் பொருண்மிய அபிவிருத்திக்கு மற்றும் சமூக அபிவிருத்திக்கு தேவையான பல்வேறு விடயங்கள் காணப்படுவதும் நவீன கல்வி முறையில் காணப்படும் விஷேட இயல்புகளாகும். கல்வியைப் பற்றி கதைக்கும் போது அதனுள் ஆயிரமாயிரம் குறிக்கோள்கள் இருப்பது தெளிவாகின்றது. பிரதானமாக இரு பாகங்களாக பிரிக்கப்படும். அதாவது கல்வி நுகர்வாக தொழிற்படல் மற்றையது முதலீடாக தொழிற்படல். இங்கு கல்வி நுகர்வாக நோக்கப்படும்போது அது காட்டி நிற்பது எமக்கு தேவையான பண்டங்களை உற்பத்தி செய்து கொள்வதாகும். நுகர்வு எனும் கருத்தில் நோக்கும்போது அது பல குறிக்கோள்களைக் கொண்டிருப்பது தெளிவாகின்றது. தனியாளின் குணநல மேம்பாடு, அறநெறி விழுமியங்கள் பற்றிய தெளிவை வழங்கல். நற்பிரஜைகளை உருவாக்கல் என்பன அவற்றுள் அடங்கும். கல்வி முன்னேறிய சமூகத்தின் ஆபரணமாக அமைவது அதன்படியாகும். ஆளுமையிலும் அது செல்வாக்குச் செலுத்துவதுடன் சமூக ரீதியாக, பண்பாட்டு ரீதியாக ஏற்படும் அதன் பங்களிப்பு சமூக சேவையாக கல்வியின் பெறுமதி வெளிப்படுவில் நுகர்வாக தொழிற்படும் யாதால.

தற்கால கருத்தின்படி கல்வி ஒரு மனித உரிமையாகும். வறிய-. செல்வந்த பேதமின்றி, குலபேதமின்றி, பால்வேறுபாடின்றி, அனைவருக்கும் உரிமையை வழங்குவதில் உலக நாடுகள் அனைத்தும் முயற்சிப்பது தெளிவாகின்றது. அதிகமானோருக்கு எழுத்தறிவு அற்ற கல்வி பரவலடையாத சமூகத்தில் குறிப்பிட்டதொரு கட்டம் வரை கல்வி நுகர்வாக முதலிடம் எடுப்பது தவிர்க்க முடியாதது. சமூக நிலைப்புக்கு அது அத்தியாவசியமாகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். அறநெறி விருத்தியை மனிதனில் பிறப்பிக்கும் கல்வி சமூகத் தொழிற்பாடொன்றை நிறைவேற்றுவதாக சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கல்வியை முதலீடாக கணிப்பது கைத்தொழிற் புரட்சியின் மூலம் வெளிப்பட்ட குறிக்கோளாகக் கொள்ள முடியும். இங்கு மனித வளம் பொருண்மியத்திற்கு ஏற்றாற் போல் விருத்தி செய்து கொள்ளும் தொழிற்பாடு கல்வியின் மூலம் நிகழ்கின்றது. கல்வியின் அடிப்படைத் தொழிற்பாடாக அமைய வேண்டியது முதலீடாக அமைந்து நாட்டின் உன்னத நிலைக்கு துணை செய்தலாகும். இந்நிலையில் கல்வியைப் பெறும் நபரின் உற்பத்தி ஆற்றலை பெருக்குதல் அதன் நோக்கமாகும். நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் சமாந்தரமாக ஆளின் அறிவு, மனப்பாங்கு, திறமைகள் என்பவற்றை உயர் மட்டத்திற்கு இட்டுச் செல்லல் அதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

அறிவு, காரணம், கற்பித்தல் எனும் அடிப்படையுடன் மற்றும் மிகவும் முறைப்படியாக வளர்ச்சியடைந்தது. ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பின்னர் ஏற்பட்ட கல்வி நிறுவனங்கள், அமைப்புகள் உருவாகிய பின்னராகும். அதுவரை காணப்பட்ட கல்வி மரதகவியுடையதாயினும், பின்னர் மாற்றமுறும் கல்விமுறை உருவாக்கப்பட்டது. மேற்கூறிய தொழில்நுட்ப, கைத்தொழில் நவீனமயப்படுத்தலுடனாகும். லௌகிக வாழ்க்கையின் நிலைப்புக்கு வேண்டிய அறநெறி விழுமியங்கள் மத்தியில் கொண்ட விடயத் தொடரினால் வழங்கப்பட்ட கல்வியும் கூட சமூகத்தில் அனைத்து வகுப்பினருக்கும் ஒரே மாதிரி பயனடைய முடியாமல் போனதாகக் கூற முடியும். எனினும் சோசலிய கோட்பாடுகள் மூலதத்துவங்கள் மற்றும் சமாந்தரத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட நவீன கல்வி முறையின் மூலம் சமூகத்தின் அனைத்து தரப்பினருக்குமான நபர்களுக்கும் அறிவைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு அரிதல்ல குறிப்பிட வேண்டியதாகும். தனியே அறிவிற்காக அல்ல அறிவைப் பயன்படுத்தி மூளைசாலிகள், விஞ்ஞானிகளை உருவாக்கும் திட்டத்தை மையமாகக் கொண்ட நவீன கல்வி முறை வளர்ந்த நாடுகளிலும், வளரும் நாடுகளிலும் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு கைகொடுப்பதாகக் கூறுவது விரயமன்று.

நவீன சமூகத்தில் கல்வியின் செய்பணியைப் பற்றி முதலில் கவனம் செலுத்திய சமூகவியலாளர் எமில் டுர்கைம் ஆவார். கல்வி சமூகக் காரணியாக அமையும் விதத்தை விளக்கிய அவர் பிள்ளை சமூகமயப்படுத்தலிலும் அதன் மூலம் இடம்பெறும் பங்களிப்பையும் சுட்டிக் காட்டினார். நபருக்கும் சமூகத்திற்குமிடையே தொடர்பு அதிகரிப்பது கல்வியாகும். போட்டிமிகு லௌகீக சமூகத்தில் விழுமியக்கல்வி தனிப்பட்ட மட்டத்திற்கு சென்றிருப்பதாக டுர்கைம் எடுத்துக் காட்டினார். அமெரிக்க சமூகவியலாளரின் டொல்கம் பார்சன் கூறும் பிரகாரம் கல்வி சமூகத் தொழிற்பாடொன்றாகும். சமூகத்தின் அடிப்படைப் பெறுமானங்கள், சட்டதிட்டங்களை புகட்டுவது கல்வி மூலமாகும். பிள்ளைகளை பெரும் சமூகத்திற்கு ஒப்படைக்கும் நற்பணி, வெற்றியளித்தல் பற்றிய பெறுமானங்களை பிறப்பாக்கம் செய்வது பாடசாலை மூலமாகும். நபரின் ஆற்றல்களுக்கேற்ப தொழில்மய பணிகளுக்கு பயிற்சியை வழங்குவது பாடசாலை மூலமாக இடம்பெறுவதாக பாஸன் மேலும் தெரிவிக்கிறார்.

தற்காலத்தில் நாட்டின் தேசிய வருமானத்தில் அதிக பெறுமானத்தை செலவிடுவது கல்வி மேம்பாடு கருதியாகும். இன்று வளர்ந்த நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் இந்நிலை ஒரே மாதிரியானது. எனினும் மூன்றாம் உலக நாடுகளில் கல்விக்கென பாரிய செலவினங்களை மேற்கொள்ள முடியாதிருப்பது அந்நாடுகளில் காலம் பிந்திக் காலம் ஏற்படும் சமூக மற்றும் அரசியல் இடர்பாடுகள் காரணமாகவாகும்.

மேற்குறிப்பிட்டவாறு கல்வியை முதலீடாக முன்னேற்றுவது தற்கால சமூகங்களில் பிரதான இயல்பாகக் காணப்படுகின்றது. அது முதலீடாகும்போது, அதற்கு இடப்படும் வளங்கள், அதாவது பௌதிக மற்றும் மானிட வளங்கள் வீண்விரயமின்றி உயர் அளவில் உபயோகப்படுத்துவது இன்றி அமையாதது. வளம் விரயமாதல் நிகழாதிருத்தல் வேண்டும் மாணாக்கர் பரீட்சைகளில் சித்தி பெறத் தவறின், ஒரே தரத்தில் மீண்டும் மீண்டும் படிப்பார்களாயின், பாடத்திட்ட கலைத்திட்டம் அறிமுகம் செய்யும் முறை பொருந்தாமலிருப்பின் அல்லது காலங்கடந்ததாக காணப்படின் கல்வியானது பின்னடைவை சந்திக்கும். அதற்குக் காரணம் அதன் மூலம் வளம் விரயமாதலாகும்.

அறிவை மாத்திரம் பெற்றுக்கொள்வது கல்வியின் நோக்கமல்ல. மனித வாழ்க்கை, பரிச்சயம், தோற்றம் பார்வையைப் பிறப்பிப்பது அதன் மூலமாகும். கல்வியின் மூலம் மிகவும் அனுகூலம் நிறைந்த சமூகமொன்றை உருவாக்க முடியுமென நம்பப்படுகின்றது. மனிதனை பொருளாதார மனிதனாக மட்டுமல்ல ஆழமான மனித விழுமியங்களைக் கொண்ட பரிபூரணமான நபர்களை வெளியாக்குவது அதன் மூலம் எதிர்பார்க்கப்படும்.

கல்வியின் மூலம் மனித ஆளுமையில் எட்டு வித விருத்தியை ஏற்படுத்தல் வேண்டும். அதாவது 1) உடல் விருத்தி 2) இயக்க விருத்தி motor development 3) உள மேம்பாடு 4) சமூக மேம்பாடு 5) மனவெழுச்சி மேம்பாடு 6) குணநல மேம்பாடு 7) அழகியல் மேம்பாடு 8) மொழித்திறன் மேம்பாடு அதற்கருத்தாக சமூக மேம்பாட்டிற்கு நுண்மதி மேம்பாடு, பொருண்மிய மேம்பாடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு மேம்பாடு, சமய மேம்பாடு கல்வி மூலம் பெற்றுக் கொள்ளலாம். அபிவிருத்தியின் அனைத்து பிரிவுகளிலும் முதலிடம் பெறுவது மனிதனாகும். அரிஸ்டோடில் ஒரு முறை விதந்துரைத்ததன் பிரகாரம், சமூகத்திற்கு பெறுமதி சேர்ப்பது மனிதனல்ல, பெறுமதியான மனிதனாவான். இந்நிலை உருவாவது கல்வி மூலமாகும்.

இவை அனைத்தையும் சுருங்கக் கூறின் கல்வியின் முன்மாதிரியாக அமைவது, பொறுப்புடன் கூடிய, விழுமியங்களுடனான, நன்மனப்பாங்குகளைக் கொண்ட ஆளுமை மேம்படுத்தலாகும். இதற்கப்பால் பிள்ளைகள் நெறிபிறழ்வது குடும்பப் பின்னணி, சமூகக் குழுக்களில் பெற்றோர்- ஆசிரியரிடையே காணப்படும் ஒரு சில குறைபாடுகள் காரணமாகவாகும்.

தற்கால சமூகத்தில் கல்வியைப் போன்று கல்வி அமைப்புகளும் முறையான இயக்கமாக தொழிற்படுகின்றது. குடும்பம் எனும் அலகிலிருந்து சமூகத்தின் அங்கத்தவராக பங்கு வகிக்க முயலும். பிள்ளைக்கு பாடசாலை மூலம் கிடைக்கும் கல்வியினால் அவனின் ஆற்றல்கள், நன்மதியை மேம்படுத்த இடம் கிடைக்கும். கைத்தொழில், தொழில்நுட்ப புரட்சியின் விளைவாக பாரியளவில் அறிவு மற்றும் தகவல்கள் ஊடகங்கள் மூலம் பரவலடைவதன் காரணமாகவும் வேறு சமூக பண்பாட்டுக் காரணங்கள் காரணமாகவும் பாடசாலையை நடுநிலையாகக் கொண்ட கல்வி வினைத்திறனுடன் பங்களிப்பு வழங்கும்.

தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு முறையான கல்வியை பகிர்ந்தளிக்கும் உத்தியோகபூர்வ நிறுவனம் பாடசாலையாகும். சமூக மேம்பாட்டிற்கு தேவையான பயன்மிகு வாழ்க்கையை வாழத் தேவையான நடவடிக்கைகளை தொகுக்கும் தொழில் சரியான முறையில் செய்யும் நிறுவனமாகவும் பாடசாலையைக் கருத முடியும். மாணாக்கரின் திறமை, ஆற்றல்களை பழக்கி – பயிற்சியளித்தல் பாடசாலை அதிபர் அடங்கலாக ஆசிரிய குலாம், மாணவ – மாணவிகளை உள்ளடக்கும் நிறுவனமாக பிள்ளையின் வளர்ந்தகால சமூக வாழ்க்கையை சிறந்த பின்னணியை உருவாக்குவது பாடசாலை மூலமாகும். இந்நிலைமைகளால் மாணவர்களின் ஆற்றல்களை விரைவாக அடைய முடியாத பிள்ளைகள் பின்வாங்கும், நெறி பிறழ்வும் மற்றும் பாடசாலையை விட்டும் விரண்டோடிய குழுவில் அடங்குவர். இதனால் தற்காலக் கல்வி பற்றிய சமூகவியலாளர்கள் பொதுவாக முடிவு செய்திருப்பது பாடசாலை நடுத்தர வகுப்பை முகவராக்கும் நிறுவனமாக ஆகும். இதனால் பாடசாலைக்கு பல்வேறு சமூக, பொருளாதார வகுப்புகளிலிருந்து வருகை தரும் பிள்ளைகளின் மனப்பாங்கு, விழுமியங்கள், தேவைகளிடையே மற்றும் பாடசாலைப் பண்பாடு என்பவற்றிடையே ஏற்படும் முரண்பாடு காரணமாக பாடசாலையை விட்டு விலகுவதற்கும் வாய்ப்பிருப்பதைச் சொல்லியாக வேண்டும்.

அமெரிக்காவில் நீக்ரோ இனப் பிள்ளைகள் ஆரம்ப வகுப்புகளிலேயே பாடசாலையை விட்டும் விலகுவதற்கு அவர்களால் நடுத்தர வகுப்பின் பண்புகளுடன் கூடிய பாடசாலையுடன் தழுவ முடியாமையே காரணம் என ஒரு சில சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அப்படியாயின் தாழ்நில வகுப்பு சமூகங்களிலிருந்து வருகை தரும் பிள்ளைகளின் தேவைகள், விருப்புகள் யாவையென தேடியறிதல் முக்கியமானது.

கல்வி மற்றும் சமூக வகுப்புகளிடையே நேரடித் தொடர்பு காணப்படுவதாகக் கூறமுடியும். உயர் சமூக வகுப்பு மாணவர்களின் கற்றல் திறமை தாழ் வகுப்பு மாணவர்களின் கற்கும் திறமையை விட அதிகம் என அறியப்பட்டுள்ளது. தாழ்நிலை வகுப்புகளில் காணப்படும் பொருளாதார வறுமை, சமூக அசமநிலை என்பன கல்வியில் தடையாய் உள்ளன. விஷேடமாக பணிபுரியும் சமூக வகுப்புகளிலிருந்து வருகை தரும் மாணவருக்கு மிகவும் பிரதிகூலமான நிலைமை ஏற்படுவதால் அவர்களின் உயர் கற்கும் திறமையை எதிர்பார்க்க முடியாது. ஏனைய கல்வியில் சமனான நிலையை ஏற்படுத்த அரசின் மூலம் குறிப்பிட்ட படிமுறைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

1944இல் இங்கிலாந்தில் அனுமதிக்கப்பட்ட இரண்டாம் நிலைகல்விச் சட்டம் காரணமாக பணிபுரியும் வகுப்பு மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்பு கிடைத்ததன் மூலம் குறிப்பிட்டளவு தாழ்நிலை வகுப்புகளிலிருந்தும் மேல்நிலை வகுப்புகளிலிருந்தும் பிரசங்கம் பெறக்கூடிய சமூக அசைவு ஏற்பட்டது. விஷேடமாக கல்வி பொருளாதார மேம்பாட்டில் இணைந்ததன் விளைவாக நிரல் மற்றும் நிரை ரீதியான சமூக அசைவு அநேகமான நாடுகளில் நிகழ்ந்திருப்பதாக தர்க்கம் புரிய முடியும். நாட்டுப் புறங்களில் மக்கள் கல்வி நடவடிக்கைகளை நகர்ப்புறத்தை நோக்கி படையெடுப்பதற்கு வாய்ப்பு கிட்டியதால் அவர்களால் உயர் சமூக, பொருளாதார நிரலாக்கத்திற்கு உட்பட சந்தர்ப்பம் கிடைத்தது.

கல்வி மிகவும் சோசலிசமாகும் போது இந்நிலை ஏற்படுவது பொதுவான நிலையிலிருந்து வேறுபட்டதல்ல. விடுதலை சோசலிச வாதத்தின் கீழ் அனைத்து சமூக வகுப்புகளுக்குரிய பெற்றோரின் சிறாருக்கு பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இன்று பொதுவான பண்பாக உள்ளது. ஆள்அசைவு மட்டுமல்ல குடி, சமூக அசைவிற்கு இதனால் வழிபிறந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்த நாடுகளில் மட்டுமல்ல வளரும் நாடுகளிலும் கல்விப் பரவலுக்கும் சமூக மாற்றத்திற்குமிடையே தீவிரமான வேறுபாடு தென்படுகின்றது. விஷேடமாக இந்தியாவில் குல முறை, வகுப்பு முறையாக பெயர்ச்சியடைய அது காரணமாயுள்ளது. எனினும் அது முழு இந்தியாவிற்கும் பொதுவானதல்ல, மாநிலங்களில் காணப்படும் இயல்பாகும். ஆக்கிரமிப்புக்குட்பட்ட நாடுகளில் மக்கள் தனது உரிமைகளை வென்றெடுக்க மேற்கொண்ட போராட்டங்களில் கல்வி விஷேடமான மீள வலியுறுத்தலாக அமைந்ததைக் காணலாம் தான். மேற்கு நாடுகளிலிருந்து பெற்றுக் கொண்ட கல்வி மூலம் தனது தேசத்தின் மக்களை ஏகாதிபத்திய பிடியிலிருந்து விடுவிப்பதற்கு இந்நாடுகளின் தேசவகுப்பினர் முயற்சித்தமையும் கூற வேண்டும். இலங்கையின் தேசிய மூளைசாலிகள் வெளிநாடுகளில் கல்வி கற்று எமது நாட்டவரை அறியப்படுத்த மேற்கொண்ட பணி மறக்க முடியாதது. கல்வி இங்கு சமூகத்தின் தேவையாக கருத முடியும்.

கல்வி மற்றும் சமூக ஆற்றல் இடையேயும் தொடர்புண்டு. விஷேடமாக அரசியலில் கல்வி செய்யும் பணி மிக முக்கியமானது. மனித உரிமைக்காக கல்வியின் மூலம் வழங்கப்படும் பங்களிப்பும் மறக்க முடியாதது. பல்வேறு சமூக இயக்கங்களை பணியில் இறக்க கல்வியால் செழுமை பெற்றவர்கள் இடம்பெறல் வேண்டும். இதன்படி தற்கால வாழ்வின் அனைத்து தொழிற்பாடுகளுக்கும் கல்வியானது இன்றியமையாதது.

## பாடசாலைகளில் கலைக்கல்வியின் முக்கியத்துவம்

குழந்தைகள் இளம் பருவத்திலிருந்தே தங்களுடைய அன்றாட வாழ்வில் பல நிகழ்ச்சிகளைக் காண்கிறார்கள். அந்நிகழ்ச்சிகள் காட்சிகளாக அவர்கள் மனதில் பதிந்து விடுகின்றன. அக்காட்சிகளை வாய்ப்புக் கிடைக்கும் பொழுது வரைதல், உருவங்கள் அமைத்தல், போன்றவற்றின் வாயிலாக வெளிப்படுத்த முயலுகின்றனர். அவற்றின் மூலம் அவர்களுடைய கற்பனைத்திறன், கலையார்வம், அழகுணர்வு ஆகியவை வெளிப்படுகின்றன. இத்தகைய கலையார்வத்தைத் தக்க முறையில் வளர்க்க வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவது பாடசாலையின் பொறுப்பாக அமைகிறது. ஆகையால் தேசியக் கல்விக் கொள்கையில் கலைக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நம்முடைய மாணவர்களைச் சரியான முறையில் கலைச் செயல்களில் ஈடுபடுத்தி அவர்களுக்குள் புதைந்து கிடக்கும் கலையாற்றலை வெளிக் கொணர்தலே ஆசிரியர்களின் கடமையாகும்.

**கலைக் கல்வியின் இன்றியமையாமை**

கூத்து, பொம்மலாட்டம், பாவைக் கூத்து, பொய்க்கால் குதிரை, கரகம், காவடி போன்ற நமது பண்டைக் காலக் கலைகளைப் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை மாணாக்கர்களிடையே ஏற்படுத்த வேண்டும். அதே நேரம் ஓவியம், நடனம், நாடகம், சங்கீதம், இசை போன்ற கலைகளையும் உட்படுத்தி தற்காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாணவர்களுடைய கலையுணர்வைத் தூண்டி, மனநிறைவையும் மனமகிழ்ச்சியையும் அடையச் செய்தல் இன்றியமையாததாகும்.

**கலைக் கல்வியின் நோக்கம்**

மாணவர்கள் கட்டுப்பாடற்ற சூழ்நிலையில் முழு உரிமையுடன் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்தும் திறனைப் பெருக்குதலோடு தாமே கற்கும் பழக்கத்தையும் பெற வேண்டும் என்பதே முக்கிய நோக்கமாகும். மேலும்,

- புலன்களைப் பயன்படுத்தி, கண்டுணரும் ஆற்றலை வளர்த்தல்
- கலைச் செயல்களின் வாயிலாகப் படைப்பாற்றலை வெளிப்படுத்தத் தூண்டுதல்
- கூடி வாழ்தலின் மேன்மையை உணரச் செய்தல்

ஆகியனவும் கலைக் கல்வியின் நோக்கங்களாகக் கருதப்படுவதால் கலைக் கல்வியைப் பாடத்திட்டத்தில் இணைத்தல் இன்றியமையாததாகிறது.

எனவே மேற்குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கலைக்கல்வி முறைகள் நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் முறையாக செயற்படுத்தப்படுவதில்லை என கூறப்படுகிறது. காரணம், இதற்கான போதிய ஆசிரியர்கள் இல்லாமல் இருப்பதும் அதற்கான வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது. இது சம்மந்தமாக பிள்ளைகளின் கலைக்கல்வியில் ஆர்வமுடைய பெற்றோர் சம்மந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளுவதன் மூலம் முறையாக செயற்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியல் வெறுப்பு நோயாளிகளும் சிரேஸ்ட இடைநிலை விஞ்ஞானப் பிரிவுகளைக் கொண்ட சில பாடசாலைகளும்

செ. ரூபசிங்கம்
BSc. Dip in Ed M. Ed.

நீர்வெறுப்பு நோய் சாதாரண பொது மக்களாலும் அறியப்பட்ட ஒன்றாகும். Rabies வகை வைரசுக்கள் நோய்க் காரணிகளான போதும் இவை காவப்படுவது செல்லப் பிராணிகளாலாகும். குறிப்பாக நாய்களி னாலாகும். வைரசுக்கள் காவிகளது உமிழ்நீர்ச் சுரப்பிகளில் பெருகி அங்கிருந்து மூளையைத் தொற்றி பாதிப்பை உண்டு பண்ணுபவை. அறிகுறிகளுள் பிரதானமானது நீர்வெறுப்பு நிலைமையும், மிகையானளவு உமிழ்நீர்ப் பெருக்கும், ஒழுங்கற்ற கட்டுப்படுத்த முடியாத தசைச் சுருக்கமும் இறுதியாக மரணமும் சம்பவிப்பதாக இருக்கும்.

இவ்வாறே சமூகநியமங்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் விலகலாக நடப்பவர்களை சமூக நோயாளிகளாக அடையாளப்படுத்தும் போக்கு குறிப்பாக முதலாம் உலகப்போரைத் தொடர்ந்து பெரிதும் வளரச்சியடைந்ததாக பேராசிரியர் சபா ஜெயராசா அவரக்கள் அடையாளப்படுத்துகின்றார். இந்நாய்கான அடிப்படைக்காரணிகளாக சமூகமயமாக்கலில் நிகழும் தவறுகளும் குறைபாடுகளும் அமைவதாக இனங்காணப்பட்டுள்ளது.

பெயரளவில் நீர் வெறுப்பு நோயை ஒத்ததாயினும் அறிவியல் வெறுப்பு நோய் என இங்கு பெயரிடப்படுவது சமூகவெறுப்பு நோயை ஒத்த உளவியல் ரீதியிலான பாதிப்பாகும். அறிவியலுக்கும் அறிவியல் சார்ந்த நபர்களுக்கும் எதிரானதாகும். அறிவியல் தமிழை முத்தமிழோடு சேர்த்து நான்காவது தமிழாக வரித்துக் கொண்ட தமிழ் பேசும் தமிழர்கள் அடங்கலாக கடந்த 3 நூற்றாண்டுகளாக அறிவியல் மற்றும் அதன் விளைவுகளை முழுமையாக வாழ்க்கையில் அனுபவிக்கும் நாகரீகமிக்க உலகமக்கள் அனைவரிடமும் இத்தகைய ஒருமனநிலையினை எதிர்வுகூறுவது என்பது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும்.

இது வரையில் தனித்துவமானதாக அடையாளப் படுத்தப்படாத போதும் காரணமற்ற வகையில் ஒருவருக்கோ அன்றி அவரது அல்லது அவரைச் சார்ந்தவர்களுக்கு எதிராக அவரது அறிவியல் துறைசாரந்த நிபுணத்துவம் அல்லது கல்வி அடிப்படைகள் காரணமாக வெளிப்படுத்தப்படும் சகலவிதமான நியாயப்படுத்தப்பட முடியாத எதிர்ப்புச் செயற்பாடுகளையும் தனியொரு நோயாகவோ அல்லது கூட்டு நோயாகவோ அடையாளப்படுத்தக் கூடியதாக இருப்பின் அதனை Science phobia அல்லது Science phobic syndrome எனப் பெயரிடக் கூடிய தாயிருக்கும். இது பாரம்பரியமானதாய் அமைய மாட்டாதது. வாழ்க்கைக் காலத்தில் பெறப்படதாய் அமையலாம். குறிப்பாக தாழ்வுச்சிக்கல், காழ்ப்புணர்ச்சி, பொறாமை, ஆற்றாமை, அறியாமை போன்ற ஆளுமைக் குலைவுகளது, நடத்தைப் பிறழ்வுகளது ஒருங்கமைந்த கூட்டு விளைவாக அமையலாம். சமநிலையற்றை ஆளுமை வெளிப்பாடாக இருக்கலாம்.



இலங்கையில் 1972 ஆம் ஆண்டு கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து அது காறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிஷ்ட இடைநிலையின் ஆரம்பத்திலேயே விஞ்ஞானம், கலை என்ற துறைசார்ந்த பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல் என்ற பாடங்களாகக் கற்பிக்கப்பட்டு வந்த போக்கு மாற்றங்கண்டு இவை அனைத்தும் ஒன்றிணைக்கப் பெற்று விஞ்ஞானம் என்ற பாடம் உருவாக்கப்பட்டது. இவ்வாறே கலைத்துறை சார்ந்த பாடங்கள் சமூகக்கல்வியாக மாற்றங் கண்டன. இதன்மூலம் அனைவருக்கும் விஞ்ஞானம் என்ற நிலை உருவாக்கப்பட்டது.

இலங்கையில் பொதுக் கல்வித் திட்டத்தின்கீழ் சிரேஸ்ட இடைநிலைப்பிரிவில் விஞ்ஞானத் துறைகளைக் கொண்ட பாடசாலைகள் 1AB என்ற தரத்தின்கீழ் வகைப்படுத்தப்படுபவை. அதாவது இவை கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் உயிரியல் கணிதப் பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகளாகும். அத்துடன் இப்பாடசாலைகள் பெரும்பாலும் மாணவர்கள் தங்கியிருந்து கற்பதற்கான விடுதி வசதிகளையும் கொண்டவையாய் அமைவன. பெரும்பாலும் கடந்த நூற்றாண்டின் இறுதிவரை இத்தகைய பாடசாலைகளின் பொருட்டு விஞ்ஞானப் பட்டதாரிகளே அதிபர் சேவைத் தகுதிகளுடன் பதவியில் இருந்துள்ளனர். ஒருசில பாடசாலைகளில் விஞ்ஞானத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் கூட அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் பதவி வகித்தனர். ஆனால் சமகால நிலைமைகள் உலகமயமாக்கல் மற்றும் கல்வித் தராதரங்களில் உண்டான வீழ்ச்சி என்பன காரணமாக முற்றிலும் மாற்றங் கண்டுள்ளன. அனேகமான பாடசாலைகளில் விஞ்ஞானத்துறை சார்ந்த பட்டதாரிகளோ அல்லது பயிற்றப்பட்டவர்களோ அதிபர்களாக இல்லை. மற்றும் நிர்வாக ரீதியிலான பொறுப்புக் கூறக்கூடிய பதவிகளில் இல்லை.

இத்தகைய பின்னணியிலேயே அறிவியல் வெறுப்பு நோய் தொடர்பான விடயம் தலையெடுக்கச் செய்கின்றது.பாடசாலை ஒருசமூகநிறுவனமாதலால் அங்கு சமூகப் பெயர்வின் பொருட்டான நேர்முகமான நோக்கங்களும் குறிக்கோள்களுமே பணிக்கூற்றுக்களதும் தொலைநோக்குகளதும் அடிப்படைகளாக அமைவது வழமையானதாகும். கொள்கையளவில் இப்படியிருக்க நடைமுறையிலோ குறிப்பாக கடந்த 3 தசாப்த காலமாக முறைசாராக் கல்வி நிறுவனங்களது வளர்ச்சியுடன் மேற்படி பணிக்கூற்றுகளும் தொலைநோக்குத் தொடர்பான பிரகடனங்களும் வெறுமனே ஏட்டளவிலான விடயங்களானவையாகவே மாற்றங் கண்டுள்ளன. இத்தகைய பிரதிபலிப்புகளுள் ஒன்றே இக்கட்டுரையில் கையாளுவதற்காகக் கொள்ளப்பட்ட அறிவியல் வெறுப்பு நோயாகும்.

சமூக நிறுவனம் என்ற அடிப்படையில் துறைசார்ந்த வேறுபாடுகளுக்கப்பால் சமூகவிருத்தியின் பொருட்டான அடிப்படைகள் அனைத்தும் பாடசாலைகளில் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஆனால் மறுதலையாக மேற்படி வேறுபாடுகளை கூர்மையடையச் செய்யும் விதமாகவே பல்வேறுவிதமான சம்பவங்களும் நடைபெற்று வருகின்றமையே இக்கட்டுரையில் அறிவியல் வெறுப்பாகக் கொள்ளப்படுகின்றது. சம்பவங்கள் மற்றும் சம்பவத் திரட்டுக்கள் போன்றவை விடயவகைக் கற்கைளாக எடுத்தாளப்படுவதன் மூலம் இக்கட்டுரை தொடர்கின்றது.

01. ஆரம்பத்தில் சிரேஸ்ட இடைநிலைக் கல்வித்துறையில் விஞ்ஞானப் பிரிவுகள் தொண்டு அடிப்படையில் ஆசிரியர்களாக கடமை மேற்கொண்டவர்களுடனேயே ஆரம்பிக்கப்பட்ட போதும் பின்னர் அரச நியமனம் பெற்றவர்களும் படிப்படியாக சேர்ந்து ஆளணி பூரணத்துவம் எய்தும் நிலையை எய்தியது. பட்டதாரிகளில் லாதவர்களும் இலங்கை அரச ஆசிரியர் நியமனங்களில் முன்னுரிமை வழங்கப்பட முடியாத பல்கலைக் கழகங்களது பட்டங்களைக் கொண்டிருந்த வர்களும்கூட ஆளணியை அமைப்பதில் பங்காளராயிருந்தனர். இது அவர்களது சமூகநோக்கிலான அர்ப்பணிப்புக் கொண்ட சேவைமனப்பாங்கு காரணமானது.

எவ்வாறாயினும் அறிவியல் வெறுப்பு நோயினது தாக்கங்கள் ஆரம்ப முதலே தொடர்ச்சியாகப் பிரதிபலித்த வண்ணமிருந்தன. அவ்வப்போது ஆசிரியர் ஒருவர் தனிப்பட்ட முறையில் சம்பாதித்துக் கொண்ட தொகை ..... இலட்சம் .......ஆயிரம் ......ரூபாய்.... சதம் எனத் தெளிவாகக் கணக்கெடுக்கப்பட்டு எதிர்ப்பிரசாரங்களின் பொருட்டு பயன்படுத்தப்பட லாயிற்று. சிலர் பாடசாலைக்கு சமூகமளித்தமை கடமையேற்றுக் கொண்ட நாளாக மட்டும் அமைந்தது. சிலர் கடமையிலிருந்த நாட்கள் சில மாதங்களும் சிலர் சிலவாரங்களும் சிலர் சில நாட்களும் மட்டுமாக இருந்தன. உளரீதியிலான தகைப்புக்களுக்கப்பால் உடல் ரீதியாக தாக்கப்படச் செய்தவர்களும் கூட உண்டு. சிலர் தனித்தும் கூட்டாகவும் இடமாற்றம் பெற்று பாடசாலை புனிதப்படுத்தப் படுவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டதுமுண்டு. எவ்வாறாயினும் அறிவியல் வெறுப்பு நோய் அதன் காரணிகள் என்பனவே இவற்றிற்கான பிரதான அடிப்படை களாயின.

02. 2005. 02. 18. அன்று உயர்தர மதியபோசன நாள். ஆவணியில் உயர்தரப் பரீட்சையான போதும் முறைசாராத ஒழுங்கமைப்புக்களுடன் மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவி மாணவனது கல்வி..... ஒப்பந்தம் (?) பண்ணப்படும் கொடுமை அரங்கேறும். குறித்த மாணவன் அறிவியலில் அதுவும் உயிரியலில் எதிர்காலத்தில் முதன்மை நிலையினைத் தக்க வைக்கவுள்ளவன் என்பது குறிப்பிடத்தக்கது.

06. துறைசார்ந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் அவளினுடைய (உதவிக் கல்விப்பணிப்பாளர் - அறிவியல்) பிள்ளைகளுக்கு கற்பிக்கக் கூடாது எந்தவிதமான உதவியும் செய்யக் கூடாது என்ற எச்சரிக்கை. அச்சுறுத்தல் மிரட்டல். ஹிட்லரின் பாணியில்.... தளபதி கொயபல்ஸ் இன்தத்துவப் பிரச்சாரங்கள் அத்தனை அறிவியல் ஆசிரியர்கள் மாணவர்கள் சமூக ஆர்வலர்கள் அனைவருக்கும் எதிராக .... அவை பயனளித்தனவா என்பது வேறுவிடயம். அவை பயனுடைத்தானவையாயிருந திருப்பின் இக்கட்டுரை கருக்கொண்டிராது.

இடையினில் முன்னருமிரு தடவைகளைப் போல மீண்டும் 3 வருடகால இடைவெளி. ஆசிரியரும் மாணவரும் நிம்மதியாக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு............காலம் பொற்காலமாகும். அதியுச்சப் பெறுபேறுகள். அடைவுகள்....கல்வியிலும் கல்வி சார்ந்ததல்லாத சகல செயற்பாடுகளிலும்.

07. பரஸ்பரம் கைதிகளாகிக் கொண்டமை காரணமாக அறிவியல் துறையினுள்.... அதிகார வெறித்தணிவின் பொருட்டு...வடிகால் தேடுபவருக்கான வழிகளை திறந்து விடுவதற்கான பாரிய முன்னெடுப்புக்கள்...... கடமையை மீண்டும் பொறுப்பேற்பதற்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டுவிடும். முதல்நாளிலேயே மரண வீடொன்றுக்கு ஆசிரியரும் மாணவருமாகச் சென்றவர்களுள் ஒரேயொரு மாணவன் அவருக்கு மட்டும் காணாமல் போயிருப்பான் (?) ஆய்வுகூடத் தினருக்கு ஒருநீதி எங்களுக்கு ஒருநீதி என்பராம்..... பரஸ்பர கைதிகளாயினோர்..

08. மீண்டும் பண்பிலும் படிப்பிலும் மிளிர்பவர்கள்.... அறிவியல் மாணவர்கள் வந்ததும் வராததுமாக ஓட ஓட விரட்டப் பட்டு விரட்டி விடப்பட்டு ....இரசிப்பர்.... பரிகசிப்பர்...... இத்தனைக்கும் இவர்கள் செய்த குற்றங்களோ வென்றால்..... அவர்கள் அறிவியல்துறையை தெரிவு செய்திருந்தமை தவிர வேறெதுமன்று.

09. இடையினில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தை மூடிய கதவினுள் சத்தம் கேட்காமலிருப்பதற்காக மேற்கொள்ளப்படும். ஆனால் கதவைத் திறந்து வெளிப்படும் போதே பேச்சுவார்த்தைக் கழைக்கப் பட்டவனுக்கு அந்த நாடகம் புரிந்து போய்..... பயனிழந்து விடும். ஏனெனில் அழைக்கப் பட்டவன் அறிவியல் ஆசிரியன். குறித்த ஒவ்வாமை நோயினது அறிகுறிகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்களுடன் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டவன். முன்னர் அறிவியல் ஆசிரியையினை வைத்து கதவைத் தாளிட்ட தகவலும் தெரிந்தே வந்திருந்தவன்.

10. ஒருநாள் காலை கற்பிதம் பண்ணப்பட்டதும் தோன்றலின் பழைய விவகாரத்தை திரிபுபடுத்திக் கொள்வதற்காகவும் கொயபல்ஸ் இன் பாணியில் வக்கிரங்கள் அத்தனையும் ஒன்றாக கலை கொண்டு அன்று அவரைப் பற்றி துர்ச் சிந்தனை ஆற்றுகை பண்ணப்படும். இத்தனைக்கும் அவர் ஒரு சாதாரண ஆசிரியர். பல நூல்களது ஆசிரியர். யுனெஸ்கோ ஆதரவு பெற்ற தேசிய விஞ்ஞான மன்றத்து இரண்டு தேசிய விருதுகளை வென்றெடுத்த ஒரே ஒரு சிறுபான்மைச் சமூகத்தவர். அறிவியல் துறையினை இழுத்து மூடினாலும் தனிநபர(ர்களஅ)து தேவைகளைத் திருப்தி செய்வதற்காக சமூக நிறுவனம் ஒருசில சுயநலமி களால்....கபளீகரம் பண்ணப்படும்.

11. யுத்தம் காரணமாக தற்காலிக இணைப்புப் பெற்று கடமையே கண்ணாயிருந்து உச்சப் பெறுபேறுகளுக்கு ஆதாரமாக இருந்தவர் - அவரது முன்னிலையில் வகுப்பறையினுள் புகுந்து மாணவர் தாக்கப்பட்டமை... மற்றும் சகபாடியினால் தகாத வார்த்தைகளால் தூற்றப்பட்டமை...... தாக்க எத்தனிக்கப்பட்டமை...... போன்ற தொடர் நிகழ்வுகளால் முதலில் இடமாற்றம் பெற்றுச் செல்வார். இடையில் இவர் எங்கு தங்குவது என்பது பற்றி முதல்வரின் மனைவியும் வேறொரு பாடசாலை ஆசிரியையுமானவர் விசாரித்தார் என்பது பிறிதொரு விடயம். அதாவது குறித்த பாடசாலையில் கற்பிப்பவர்கள் வேறுபாடசாலையில் கற்கும் மாணவரது வீட்டில் தங்குதலாகாது.

12. மீண்டும் மதிய போசன விருந்து நாள்களாகாத போதும் மூக்கோடு மூக்கு ........ தாக்கம்....மறுதாக்கம் இத்தனைக் கிடையிலும் பரஸ்பர கைதித் தன்மை காரணமான தொடர் நிகழ்வுகள்....பலதடவைகள் மாணவரும் மாணவியர் என்ற வேறுபாடில்லாது தாக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு மயங்கிச் சரிந்து கூட்டாக வரிசைவரிசையாகவும் தனித்தனியாகவும் தனியார் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டு அரச வைத்தியசாலை களில் அனுமதிக்கப்பட்டு சட்டமருத்துவ நிபுணர்கள்... காவல் துறையினர்.... நீதிமன்றம்....மாணவர்களது குற்றங்களோ இவர்களை கையும் மெய்யுமாக.....மற்றும் பெறுமதியான புகைப்படக்கருவிகள் கைத்தொலை பேசிகள் முதலானவற்றை சாட்டுக்கள் கூறி அபரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்றபோது அனுமதிக்க மறுத்தமை போன்றவை மட்டுமே. வகுப்பறையில் ஆசிரியர் நின்றிருக்க மாணவர் அமர்ந்திருப்பது வழமையானது. காவல்துறை அலுவலகத்தில் மாணவர் அமர்ந்திருக்க ஆசிரியர்கள் வரிசையாக நின்றிருந்தமை ஒன்றே போதும் இங்கு எடுத்தாளப்பட்ட விடயத்தை மதிப்பிட்டுக் கொள்வதற்கு.



13. மீண்டும் ஒரு அறிவியல் துறைசார்ந்த ஆசிரியர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட வேண்டியவராக அறிவிக்கப்பட்ட நிலையில் இடையினில் முன்னர் காவல்துறைக்கு செல்வதற்காக ஆலோசனை வழங்கிய வேற்று வலயப் பணிப்பாளரது உதவியுடன் தொண்டராசிரியர் தேடும் படலம் .......இத்தனைக்கும் தொண்டராசிரியரை யாழ்ப்பாணத்தில் தேடிச் சலிக்க, இடமாற்றம் செய்யப்பட வேண்டியவராக குறிப்பிடப்பட்டவர் இருக்கும் பொழுது ஏன் இன்னொரு ஆசிரியர் என்ற வினளாவிற்கு விடையளிக்க முடியாமல் திணறி.... பாவம் ......உயிரியல் கணிதத்துறை களிடையில் அசமத்துவ நிலையினை உருவாக்கிக் கொண்டு அரையும் குறையுமானவர்களை முன்னிலைப்படுத்துவதற்கான பொறிமுறையை தொலைபேசியினூடாக நிதானிக்க முடியாமல் மறுமுனையில்...... தொண்டர் ஆசிரியர்களுக்கு சம்பளம் கேட்டு www. sjc. 87 scholalarship org கு கடிதத்தை எழுதி அதனை மொழிமாற்றம் செய்வதற்காக உடனடியாக இடமாற்றம் செய்யப்பட வேண்டியவரையே நாடி .........குறித்த நிறுவனத்தினரை சம்பந்தப்பட்டவருடன் தொடர்புறச் செய்து......... இருக்கின்ற ஆசிரியரைப் புறந்தள்ளவும் தொண்டராசிரியரைத் தேடவும் அதிகார மளித்தவர்....... அநாமதேயமாகி ..............

14. இதற்கிடையில் அந்தப் பாடசாலைத் தவணைக்கான முதல்நாள்... மதியம் அறிவியல் வெறுப்பு நோயச்சிக்கல் மண்டையிலை போட்டாச்சு திகதி குறிச்சாச்சு மாண்புடைய மாணவரை யெல்லாம் போட்டுத் தள்ளியவர் களுக்கு சாதியினைக் குறித்து அடையாளப்படுத் தப்பட்டவனை போட்டுத் தள்ளுவது ஒன்றும் பெரிய காரியமல்லவே......எவ்வாறாயினும் குறித்த ஆசிரியர் போட்டுத்தள்ளப்பட்டிருப்பினும் இக்கட்டுரை ஏதோவொருவிதத்தில் வெளியாகியிருக்கும். வாசகர்களுக்கு உருவாகக் கூடிய மேற்படி உண்மைச் சமபவங்களது யதார்த்தத்தினை விளக்குவதற்காக விலங்கு நடத்தை தொடர்பான உதாரணத்தை முன்வைக்க வேண்டிமை தவிர்க்க முடியாததாகி யுள்ளது.

சேவலும் பெட்டைநாயும் சேவல்கள் பொதுவாக ஒரு சந்தர்ப்பத்தில் பல கோழிகளை தமது இனவிருத்திக் காலத்தில் கூடுவதும் அதுபோலவே பெண்நாய்கள் பல ஆண்நாய்களுடன் கூடுவதும் அவற்றினுடைய இயல்பான நடத்தைக் கோலங்களாகும். சேவலும் பெட்டை நாயும் இனவிருத்தியின் பொருட்டு சேரமாட்டாதபோதும் ஆயினும் அறிவியல் வெறுப்பு நோய்காரணமாக ஒன்று சேரக்கூடியவையே. எனவே இத்தகைய இரண்டு பிராணிகள் அல்லது மிருகங்கள் அல்லது இவற்றை ஒத்தவர்கள் சேர்ந்து ஒரு நிறுவனத்துக்கு பொறுப்பாயிருக்கும் பட்சத்தில் மேற்படி விடயவகைக் கற்கைகள் ஆச்சரிய மானவையாக அமைய வேண்டிய தேவையில்லை.

அத்துடன் இங்கே அறிவியல் வெறுப்பு அறிகுறிகளது தோற்றப்பாட்டுக்கு நோய்முதல்களை நடுநிலை பிறழாது முன்வைக்க வேண்டியமை காரணமாக அவையும் வரிசைப்படுத்தப்படுகின்றன.

01. தாய்மையின் பொறுப்புணர்வை, தனது மகவுகளை இனங்காண் திறனை வெளிப்படுத்துவதற்காக சில இலக்கிய வாதிகள் பலரைப் புணரும் பரத்தை கூட கருக்கொள்ளும் பட்சத்தில் அந்தக்கரு எந்த வாடிக்கையாளனுக்கு உருவாகியது என்பதை அறிந்திருப்பாளாம் என்பதுண்டு. இங்கு பொறுப்புணர்வுக்கு அதன் தீட்சண்யத்துக்கு மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி உதாரணம் கைக்கொள்ளப்படுவதாக இருப்பின் நடைமுறை ஆசிரியத்துவ வாழ்விலும் தன்னுடைய மாணவர்க்கு தானே பொறுப்பு என்றதற்காக மட்டும் காவல்துறை வரை சென்ற பொறுப்புணர்வும் இரக்கவுணர்வும் பிரதான காரணிகளாக அமையலாம். இவற்றுள் சில உணர்வுகள் பாரம்பரியமானவை. யுத்தம் என்று சென்ற பின்னரும் இரக்கவுணர்வை துடைத்தெறியாமையால் விளைந்தவற்றுக்கு சிலவேளை இத்தகைய தலைமுறையுரிமையியல்பு காரணமான தாயமைலாம். நேரந்தவறாமைப் பண்புகளாலுண்டான முரண்பாடுகட்கு ஆறுமுகநாவலர் யாருக்காக விவிலியத்தை தமிழில் மொழிமாற்றம் செய்து கொடுத்தாரோ அவரால் ஸ்தாபிக்கப்பெற்ற பாடசாலையில் பயின்ற குற்றம் காரணமாக அமையலாம்.



02. குறித்த நோய்க்கு சமகாலத்தில் சில கல்வி சார்நிறுவனங்களில் உயர்குழாத்தினரது தெரிவு செய்யப்பட்ட ஒருவரையோ அல்லது இரண்டொருவரையோ அல்லது சிலரையோ முதன்மைப்படுத்திக் கொள்ளும் போக்கும் அதற்காக சகலவளங்களையும் திட்டமிட்டு பயன்படுத்துவதும் திறனிழக்கப் பண்ணுவதும் கூட அடிப்படையாக அமைவதுண்டு. இதற்கு அரசினது பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையும் கூட காரணமானதாகும். எவ்வாறாயினும் இதற்கு மறுதலையாக திறந்த நிறைபோட்டி நிலைபேணப்பட்டு கல்வித் துறைசாரந்த முதல்வர்கள் அதிகாரிகளது வாரிசுகள் தமது இலக்குகளை எய்தியிருந்த கால்நூற்றாண்டு கடந்த வரலாறு உண்டு என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

03. அறிவியல் வெறுப்பு நோய் பற்றியல்லாது சமகாலக் கல்விச் சமூகத்தினை அரித்துக் கொண்டிருக்கும் முறைசாராரக் கல்விச் செல்நெறிகள் தொடர்பாக இத்தகைய கட்டுரைகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. வெளியீட்டு வைபவத்திலேயே புலமைசார் புத்திஜீவிகளால் பாராட்டுப் பெற்றமை மட்டுமன்றி அக்கட்டுரைகள் காரணமாக அச்சஞ்சிகைகள் மறுபிரசுரத்துக் குள்ளாகியுமுள்ளன.

04 ஒருபுறம் அதிகார வரிசையினது அனைத்து மட்டங்களுக்கும்........மேலே குறிப்பிட்ட நோய் பற்றிய காரண காரியத் தொடர்புகளனைத்தும் வெளிச்சம னவையே............ஆனால் ஒவ்வொருவரும்........ பந்தை மற்றவரிடம் மாற்றிவிட்டு....

**இறுதியாக**

அறிவியல் துறையினது ஆரம்பமே தத்துவங்களிலிருந்து தான் முகிழக்கிறது. தத்துவங்கள் பலாயிரக்காண மனித குலவரலாற்று தழுவலை கொண்டவை. அறிவியலோ சிலநூறு வருடகால வரலாற்றையே கொண்டது. ஒட்டு மொத்தமாக இன்று உலகளாவிய வியாபகத் தன்மையை பிரயோக பயன்பாட்டினைக் கொண்ட அறிவியல் துறையினது பெயரால் Science phobia அல்லது Science phobic syndrome என்ற சொற்களை உருவாக்கி அவற்றை நிலைபேறடையச் செய்வதென்பது நடைமுறைச் சாத்திய மற்ற விடயம். இக்கட்டுரையாளன் பன்நூற்றுக் கணக்கான சொற்களை தமிழில் - அறிவியல் துறையில் உருவாக்கி அர்ப்பணிப்புச் செய்தவன். என்ன தான் சொற்களை உருவாக்கி விட்டாலும் அவற்றினது சமூகப் பயன்பாட்டையும் பிரயோகத் திறனையும் நிலைபேறடைதற் பாங்கையும் தீர்மானிப்பது துறைசார்ந்த பயன்கொள் மக்களே. கல்விச் சமூகத்தினரே. எனவே இக்கட்டுரையில் கையாளப்பட்ட இரண்டு பதங்களது நிலைபேறடைதல் களையும் இக்கட்டுரையாளன் விரும்பவில்லை. ஆனால் சம்பந்தப் பட்டவர்கள் சுயவிமர்சனங்களின் மூலம் தம்மைத் திருத்திக் கொண்டு இயல்பான சமூகமயமாக்கல் போக்குகளுள் சங்கமிக்கும் பட்சத்தில் மேற்படி பதங்களும் பொருளிழந்து போகும்.

சிங்கள மொழியில் கல்வியியல் என்பதைக் குறிப்பிடுவதற்காக அறிவியல் (vidhya) என்ற பதத்தையே பயன்படுத்துகின்றனர். எனவே மேற்படி பதத்தினது சமூகப் பயனிழப்பிற்கு இட்டுச் செல்ல வேண்டிய தேவை ஒருவகையில் அறிவியல் சமூகத்துக்கப்பால் முழுக்கல்விச் சமூத்தினருக்கும் உரித்தான சமூகப் பொறுப்பாகும் என்பது கட்டுரையாளனது எதிர்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வணிக விளம்பரங்களாகும் தகவற் தொழிநுட்பப் பாடத்திட்டங்கள்

மு. மயூரன்

எமது நாட்டின் இலவசக்கல்விப் பாட நூல்களில் வணிக விளம்பரங்கள் இருப்பதில்லை. அது பொதுவாக எமக்குத் தெரியும். பாடநூல்களில் வணிக விளம்பரங்கள் வருவதை எம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. அப்படி வருமிடத்து அதை ஏற்றுக்கொள்ளவும் நாம் ஆயத்தமாயிருக்க மாட்டோம். அதிகாரத்திலிருக்கும் அரசினுடைய பிரசாரக்கருவியாக, பேரினவாதப் பிரசாரக்கருவியாக, உலகவங்கியினுடைய பிரசாரக் கருவியாகவெல்லாம் பாடநூல்கள் இயங்குவதை நாம் ஓரளவுக்கு அறிந்திருக்கிறொமெனினும் ஒரு தனியார் வணிக நிறுவனத்தின் பிரசாரக்கருவியாகப் பாடநூல்கள் இருக்கும் என்பதை நாம் பெரும்பாலும் ஏற்பதற்கில்லை.

ஆனால், உலக அளவில் மென்பொருள் வணிகத்தில் ஈடுபட்டிருக்கும் பென்னம்பெரிய பன்னாட்டு நிறுவனமொன்று அரசாங்கத்துடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு எமது பாடத்திட்டத்தைத் தமது வணிக விளம்பரமாக்கி வைத்திருப்பதை நாம் கண்டுகொள்ளவில்லை.

தகவற் தொழிநுட்ப உலகின் அரசியற்போக்குகள், அங்கு நிலவும் வணிக ஏகபோகம் தொடர்பான போதிய விழிப்புணர்வு இல்லாதிருப்பதும் தகவற்தொழிநுட்பக் கல்வி என்ற பெயரில் இவ்வரசியற் போக்குக்களைக் கண்டுகொள்ளாதிருக்கும் மனநிலை எம்முள் வளர்க்கப்பட்டிருப்பதும் இதற்கான காரணங்களிற் சிலவாகின்றன.

ஒரு காலத்தில் தேயிலை, கோதுமை மா, மண்ணெய், பெற்றோல், சிகரெட் போன்றவை எம் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, எம் நாட்டின் வாழ்க்கை முறையில் அதற்கு முன் இருந்திராத அந்நுகர்வுப்பண்டங்களை மக்களுக்குப் பழக்குமுகமாக இலவசமாகவே அவை வீதிக்கு வீதி வழங்கப்பட்டன. அப்பண்டங்களுக்கு மக்கள் மெல்ல மெல்லப் பழகி அடிமையானதன் பிற்பாடு அவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டு நல்ல இலாபம் சம்பாதிக்கப்பட்டது.

இதேபோன்றதொரு உத்தியே தகவற் தொழிநுட்பப் பாடத்திட்டத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

Microsoft நிறுவனத்தினுடைய வணிகப்பண்டங்களை மட்டுமே மாணவர்கள் கணினியைக் கற்பதற்கான ஒரே ஒரு தெரிவாக எமது கல்வி முறை விட்டுவைத்திருக்கிறது. Word Processing கற்பதற்குப்பதிலாக எமது மாணவர்கள் MS Word இனையே கற்கிறார்கள். இந்த நிலை வெறும் Word processing என்ற அடிப்படை நிலையில் இருந்து மென்பொருள் நிரலாக்கம், வலையமைப்பு முகாமைத்துவம் வரை இருக்கிறது.

தகவற்தொழிநுட்ப உலகின் மாற்று அரசியல் பேசும் சிறு சிறு குழுக்களின் அழுத்தம் காரணமாக ஒப்புக்கு மாற்று மென்பொருட்கள் பற்றிய ஒருசில சிறு தலைப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அவை எந்த வகையிலும் ஆஉைசழளழகவ நிறுவனத்துக்கான விளம்பரத்தைப் பாதிக்காத வகையில் பார்த்துக்கொள்ளப்படுகிறது.

Microsoft ஒரு பென்னம்பெரிய நிறுவனம் இவ்வாறு பாடப்புத்தகங்களில் கற்பித்தெல்லாம் அவர்கள் இலாபம் பார்க்கவேண்டிய தேவை இல்லை என்ற எண்ணம் சிலருக்கு ஏற்படக்கூடும்.

இலங்கை அரசாங்கத்துடன் இதுவரை பல்வேறு ஒப்பந்தங்களை அந்நிறுவனம் செய்துகொண்டுள்ளது. குறிப்பாக இலங்கையின் கல்வித்துறையில் அந்நிறுவனத்தின் மென்பொருட்களைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான சலுகைகளுடன் கூடிய ஒப்பந்தங்களைக்கூட செய்துகொண்டுள்ளது (செய்தி: island.lk/2005/08/12/business2.html)

இலவசமாகவும் சலுகை அடிப்படையிலும் தானே வழங்குகிறார்கள் மூன்றாமுலக நாடுகளின் வறிய பாடசாலைகளுக்கு இதுவொரு வரப்பிரசாதமன்றொ என்று நினைக்கத்தோன்றுவதும் உண்மைதான். இந்த இலவசங்களும் சலுகைகளும் எவ்வளவு தூரம் அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டு நிறுவனத்தின் இலாபத்தைப் பெருக்குகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தமது விற்பனைப்பொருட்களைத்தவிர வேறு மென்பொருட்களை மாணவர்கள் கற்காமலிருப்பதை உறுதிப் படுத்திக்கொள்வதன்மூலம், தமது உற்பத்திப்பொருட்களுக்கு அடிமையான, தம்மில் தங்கியிருக்கக்கூடிய ஒரு தலைமுறையினையே அந்நிறுவனம் உருவாக்கிவிட முடியும். இது ஏறத்தாழ தேநீருக்கும் சிகரெட்டுக்கும் கோதுமை மாவுக்கும் அடிமையான ஒரு தலைமுறையை உருவாக்கியதற்குச் சமமானது.

மூன்றாமுலக நாடுகளின் மத்திய, மாநில அரசுகளுக்கு பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்தியும் கூட இவ்வாறான ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன.

உலகில் பெரும்பாலானவர்கள் பயன்படுத்தும் சிறப்பான மென்பொருட்கள் அவர்கள் உற்பத்தி செய்தவை தாம். எதிர்காலத்தில் மாணவர்கள் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறும்போது அம்மென்பொருட்கள்தாம் இருக்கப்போகின்றன அப்படியான சூழலில் குறித்த மென்பொருட்களைக் கற்பிப்பதுதானே சரியான தெரிவாக இருக்கமுடியும் என்றும் கேட்கப்படுகிறது.

இது ஒரு மாயத்தோற்றமாகும். கணினியில் நாம் செய்யும் பணிகளுக்குப் பயன்படுத்தும் எல்லா மென்பொருட்களும் அடிப்படையில் ஒரே பணியைத்தான் செய்கின்றன. சிறு சிறு வேறுபாடுகளே இருக்கிறது. உண்மையில் எந்தவொரு மென்பொருளைப் பயன்படுத்தியும் குறித்த பணியைச் செய்துமுடிக்கக்கூடிய வல்லமை உடையவர்களாக மாணவர்களை உருவாக்குவதே சிறந்த கல்வித்திட்டமொன்றின் கடமையாகும்.

மென்பொருள் நிறுவனங்கள் பல மென்பொருட்களை உற்பத்தி செய்கின்றன. அவை எல்லாமே இலாப நோக்கம் கொண்டவை தாம். அப்படி இருக்க ஒரு நிறுவனத்தை மட்டும் பாடத்திட்டத்தில் முனைப்புறுத்துவது தவன்ற அடிப்படையிலும், அது நேர்மையான வணிகத்துக்கு மாறானதென்ற அடிப்படையிலும் இப்பிரச்சினையை நான் இங்கே எழுப்பவில்லை. இந்த விடயம் அவ்வளவு மேலோட்டமானதுமல்ல.

மென்பொருட் தொழிற்துறையிலும் தகவற்தொழிநுட்ப உலகிலும் வளர்ந்து வருகிற ஓர் அரசியற்போக்கானது எதிர்கால மானுட இருப்புக்கும் சுதந்திரத்திற்கும் வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்குமே அச்சுறுத்தலாக அமையக்கூடியது. மென்பொருட்கள் மனித வாழ்வின் எல்லா மூலைகளையும் இப்போது ஆக்கிரமித்திருப்பதால், அதனூடாக மனிதரைக் கண்காணிப்பதும் கட்டுப்படுத்துவதும் வெவ்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதும் இயலுமாகிறது.

உலகை ஆளும் மாபெரும் நிறுவனங்களும் அவற்றின் கைகளாக இயங்கும் அரசுகளும் மக்களிடமிருந்து அதிகாரங்களை மேலும் மேலும் பறித்துத் தமது அதிகாரத்தை மேன்மேலும் பெருக்கிக்கொள்வதற்கு இப்புதிய கண்காணிப்பு மார்க்கமும் தகவற்தொழிநுட்பமும் உதவி வருகின்றன.

ஆள்வோருக்குச் சேவகம் செய்யக்கூடிய தன்மைகொண்ட Microsoft போன்ற பன்னாட்டு வணிக நிறுவனங்களின் கையில் உலகின் ஒட்டுமொத்தத் தகவற்தொழிநுட்ப அசைவியக்கத்தையே உள்வாங்கிக்கொள்வதென்பது மேற்சொன்ன அடிப்படையில் அதிகாரமிக்க ஆள்வோருக்குச் சாதகமானது. இந்த நிகழ்ச்சிநிரலுக்குப் பாதகமாக அமையக்கூடிய, இந்த நிகழ்ச்சி நிரலைக் கேள்விக்குட்படுத்தக்கூடிய, சவால் விடுக்கக்கூடிய சில குழுக்களும் இயக்கங்களும் தகவற்தொழிநுட்ப உலகில் காணப்படுகின்றன.

அவற்றுள் கவனிக்கத்தகுந்ததொரு இயக்கம், கட்டற்ற மென்பொருள் இயக்கமாகும். வணிக ரீதியான கட்டுக்கள், கண்காணிப்புப் பொறிமுறைகள், மனித உரிமைகளை மதிக்காது மனித சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய தன்மை கொண்ட மென்பொருட்களுக்கும் தொழிநுட்பங்களுக்கும் மாற்றான மென்பொருட்களையும் தொழிநுட்பங்களையும் உருவாக்கிக்கொண்டிருக்கும் பெரும் திறந்த கூட்டுழைப்பான கட்டற்ற மென்பொருள் இயக்கம் பெரும் பன்னாட்டு மென்பொருள் நிறுவனங்களுகே சவால் விடும் அளவுக்கு இன்று வளர்ச்சி கண்டுள்ளது.

இக்கட்டற்ற மென்பொருள் இயக்கத்தையும் கட்டற்ற மென்பொருட்களையும் பரவாது தடுப்பதும் நாடுகளின் கல்வித்திட்டங்களில் ஆஉைசழளழகவ தலையிடுவதன் முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

கல்வித்திட்டத்தினையும் பாடநூல்களையும் புனிதப் படைப்புக்களாகக்கருதி, கேள்விக்குட்படுத்தாமல் விடுவது பாரதூரமான விளைவுகளை உருவாக்கக்கூடியது. குறிப்பாக, தகவற்தொழிநுட்பப் பாடத்திட்டமானது அபாயம் மிக்க விளைவுகளை உருவாக்கக்கூடிய வண்ணம் தனியொரு நிறுவனத்தின் பிரசாரக்கருவியாகப் பயன்படுத்தப்படுவதை நாம் கேள்விக்குட்படுத்தவேண்டியுள்ளது. மனித குலத்துக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் நன்மை தரக்கூடிய கட்டற்ற மென்பொருட்களையே பாடசாலைகளும் கல்வித்திட்டமும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்யவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உரிய அழுத்தங்களையும் நாம் பிரயோகிக்கவேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொழித்திறன் விருத்திச் செயற்பாட்டில் வாசிப்பின் இன்றியமையாமை

எஸ். எல். மன்சூர் (கல்விமாணி)
*ஆசிரிய ஆலோசகர்*

மொழியில் வாசிப்பு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. மொழியின் ஆரம்பம் சைகையாகும். பின்னர் எழுத்துருவம் பெற்ற காலகட்டத்திலிருந்து வாசிப்பும் முக்கியத்துவம் பெறலாயின. எமது நாட்டு பாடசாலையின் கலைத்திட்டத்தில் 1997ஆம் ஆண்டிற்குப்பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விச்சீர்திருத்தங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் தேசிய குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக சில அடிப்படையான தேர்ச்சிகளை மையப்படுத்தியவாறு பாடசாலைக் கலைத்திட்டத்தில் மொழித்திறன்களை அதிகரிப்பதற்குரிய வழிவகைகள் பல வகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதன்படி பார்க்கின்றபோது முதலாவதாக "தொடர்பாடல் தேர்ச்சிகள் மூலமாக எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்ப தகைமை ஆகிய நான்குவகை துணைத் தொகுதிகளாக வகுக்கப்பட்டு அதில் கவனமாக செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரக்கூடியவாறு கருத்துப்பரிமாற்றம்" ஆகியவற்றை இத்தொடர்பாடல் தேர்ச்சியின் ஊடாக முக்கியத்துவம் பெற்றுள்ளதையும் அவதானிக்கலாம். எனவேதான் கல்வித்துறையில் குறிப்பாக ஆரம்பக்கல்வி புலத்தில் வாசிப்பின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் முகமாக "மௌனமாகவாசித்தல், உரத்து வாசித்தல்" என்கிற சொற்கள் கற்றல் - கற்பித்தலில் மொழிப்பாடத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்குவதையும் காணலாம்.

மேலும், எழுத்துக்களைக் காணும் நிலையே வாசித்தலின் ஆரம்பமாகும். கண்ணால் காணுவதை மூளையானது அறிந்து பொருளுணரும்போது வாசித்தல் அங்கே நிகழ்கின்றது. இங்கு இரு உளவியல் செயல்களான "மூளை கண்ணுக்குச் சொல்லுதல், கண் மூளைக்குச் சொல்லுதல்" என்பன நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது வரிவடிவத்திலுள்ள சொற்களை ஒலிவடிவமாக மாற்றி உச்சரித்தல், உறுப்புக்களும் சொற்களை நோக்குகின்ற கண்ணும் ஒத்துழைக்கின்றபோது அங்கே வாசித்தல் நடைபெறுகின்றது.

எனவே இவைகள் நடைபெறுவதற்கு உள்ளம், கண், காது, மூக்கு, நா, குரல் ஆகிய உறுப்புக்கள் அனைத்தும் ஒத்துழைக்கின்றபோதுதான் அங்கே வாசிப்பு என்னும் திறன் ஆரம்பமாகின்றது. எழுத்துக் குறியீடுகள், ஒலிக் குறியீடுகளாக மாற்றப்படுகின்றன. என்னதான் வாசிப்பு நாவிலிருந்து வெளியாகினாலும் பொருளுணர்தலோடு இணைந்த வாசிப்பே வாசித்தலாகும். எழுத்துக்களாலான சொற்கள், சொற்களாலான வாக்கியங்கள் மொழிக்கூறுகளாகின்றன. இவ்வாறு முக்கியத்துவம் பெற்றுள்ள வாசிப்பானது ஒரு பிள்ளையில் ஆரம்ப சிறுபராயத்திலிருந்து உருவாக வேண்டும். இன்றைய நவீன உலகில் வாசிப்புத்திறன் அருகி வருகின்றது. இதன்காரணமாக பொது அறிவுத்திறனானது மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது என்றும் இந்நிலையானது பிள்ளையின் வாசிப்புத்திறனில் ஏற்பட்டுள்ள பின்னடைவைக் காட்டுகின்றன என்கிற குற்றச்சாட்டும் கல்வியலாளர்களிடையே உண்டு. ஏனெனில் இன்றைய நவீன யுகத்தில் தொடர்பாடலின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றமையினால் கணனித் தொடர்புகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானொலி போன்ற ஊடகங்களின் செயற்பாடுகள் இன்று நூல்களையும், பத்திரிகைகளையும் வாசிப்பதிலிருந்து தவிர்த்து வருவதுடன், அவை வாசிப்புக்குப் போட்டியாக வலம் வருகின்ற ஊக்கிகளாகவும் காணப்படுகின்றன.

பாடசாலைகளில் வாசிப்பினை மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலைகள் தோறும் நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரசும் பல இலட்சங்களை ஒதுக்கி நூல்களையும், நூலகர்களையும் வழங்கியிருந்தும், பல பாடசாலைகளின் நூலகங்களைப் பார்க்கின்றபோது நூல்கள் புழுதி படாது பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவைகள் மாணவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. கிழிந்து போய்விடும் என்பது ஒருபுறம், நூலகத்திற்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் வேறுபாடங்கள் கற்பிப்பது, மாணவர்கள் நூல்கள் கேட்டால் இல்லை என்று கூறுவது, நூலகப்பாடவேளைகளில் வேறு வேலைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவது, அதிபர்கள் இவற்றுக்கு முக்கியத்துவம் வழங்காமை, பொருத்தமற்ற இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகங்கள் அமைந்துள்ளமை போன்ற பல்வேறு தடைகள் மாணவர்களின் வாசிப்புமீதான செல்வாக்கை உடைத்தெறிந்து விடுவதால் வாசிப்பின் ஊடாக காணப்படும் மொழியியல் மீதான பற்றை குறைக்கும் செயலாகவும் இவைகள் காணப்படுகின்றன.

எந்தவொரு பாடத்தையும் வகுப்பறையில் கற்பதற்கு வழிவகுப்பது மொழிப்பாடமாகும். மொழியில் கருத்தூன்றி வாசித்தல் மிகவும் முக்கியமாகும். மொழிப்பாடம் விளங்காதபோது ஏனைய பாடங்களைக் கற்பதும் கஷ்டமான காரியமாகிவிடும். பாடசாலையில் தரம் ஒன்றில் இணைகின்ற ஒரு சிறுபிள்ளை வீட்டில் பேசிய மொழியையே பேசும். அங்கே பலகுறைபாடுகள் தென்படும். அதனை நிவர்த்திக்கும் வகையில் மொழியின் அழகினை ஒருங்கே மாணவர்களிடம் பேசிக் காட்டவேண்டும். தெருவில், வீட்டில், உறவினர்களோடு பேசுகின்ற மொழியானது பேச்சு மொழியாகும். வாசிக்கின்றபோது இம்மொழி திருத்தமாக காணப்படும். இதனை எழுத்துமொழி என்று இதனைக் கூறுவர். இதனையே பாலாம்பாள் - (1960) பின்வருமாறு கூறுகின்றார். "இலக்கணப் பிழையில்லாமல் ஆசிரியர்களும் ஏனையோர்களும் பேசுவார்களாயின் அவர்களது பேச்சைப் பிள்ளைகளும் பின்பற்றி, இலக்கணப் பிழையின்றிப் பேசப் பழகுவார்கள். நல்ல இலக்கியங்களையும் பிழையற்ற வாசகப் புத்தகங்களையும் படிக்கச் செய்வதால் திருத்தப் பேச்சு உணர்ச்சியை இளமையில் இருந்தே உண்டாக்கலாம். அதனால் பிழைபட்ட பேச்சுக்கள் பின்னர் காதில் விழும்போது இயற்கையாகவே அருவருப்புத் தோன்றும்" எனக் கூறுகின்றார்.

எனவேதான் பேச்சு மொழியிலிருந்து எழுத்து மொழிக்கு மாணவர்களை அழைத்துச் செல்கின்ற ஒரு செயற்பாடு ஆசிரியர்களிடம் காணப்படவேண்டும். இன்று பாடசாலைகளில் மொழிப்பாடத்தில் பின்னடைவுக்கு உள்ளாகின்ற மாணவர்கள் பலர் உள்ளனர். இவர்களை ஏனைய பாட ஆசிரியர்களும் வாசிக்கத் தெரியாதவர்களின் பட்டியலில் இட்டுச் செல்வதால் அம்மாணவன் அவமானப்பட்டு இறுதியில் கல்விக்கு வேட்டு வைக்கின்ற நிலைக்குள்ளாக்கப்படுகின்றான். ஆதலால்தான் ஆசிரியர்கள் மொழிப் பாடத்தில் ஆரம்ப வகுப்புக்களிலிருந்தே மாணவனுக்கு ஆசிரியர் குறிப்பாக மொழிப்பாடத்தினை நன்கு விளங்கக்கூடிவாறு கற்பதில் வழிகாட்டப்படல் வேண்டும். ஆசிரியர் பாடத்திற்கான விடயக்கூறுகளை தெளிவாக புரிந்து கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது பொருத்தமானவாறு ஒன்றிணைந்து செயற்படுத்தல் அவசியமாகும். மொழிரீதியாக ஆரம்பப்பிரிவு வகுப்புக்களில் எதிர்பார்க்கப்படுகின்ற தேர்ச்சிகளில் பின்வரும் விடயங்கள் வாசிப்பில் முக்கியத்துவம் பெற்றுள்ளதாக கருதப்படுகிறது.

அதாவது கவிதை, பாடல், கதைகேட்டும் வாசித்தறிதல், பிழையின்றி உச்சரித்து உரத்துவாசித்தல், செவிமடுத்தல். பேச்சு, வாசிப்பு, எழுத்து சம்பந்தமான நற்பழக்கங்கள் பற்றியமை, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து வாசித்தல், வாசித்தபின் கிரகித்து வெளிப்படுத்துதல், சொற்களஞ்சிய விருத்திக்காக வாசித்தல், இரசனையுடன் வாசித்தல் இவ்வாறாக "தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான" வகுப்பு மாணவர்களின் நலன் கருதியதாக இவ்வகையான தேர்ச்சிகள் வாசிப்பினை முன்னிலைப்படுத்துவற்காக ஆசிரியர்களால் முன்கொண்டு செல்ல வேண்டுமென கல்விப்புலத்தினால் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவதில் பல ஆசிரியர்கள் காணப்பட்டாலும் சில ஆசிரியர்கள் இதில் அதிக கவனம் கொள்ளவதில் அசிரத்தையாகவே உள்ளனர். இதற்கு முக்கிய காரணமாக அமைவது சிறந்த வாசிப்பு இன்மை என்றே கூறலாம். ஒரு பாடசாலைக்குச்சென்ற வேளை அங்குள்ள ஆசிரியர் ஒருவரிடம் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் உள்ள ஒரு விடயத்தைப் பற்றிக் கேட்டபோது அந்த விடயம் தனக்குத் தெரியாது என்று கூறினார். உடனே ஆ.அ. வழிகாட்டி நூலின் இத்தப்பக்கத்தில் எடுத்துபார்க்கும்படி கூறி பார்க்கவைத்தபோது மீண்டும் அந்த ஆசிரியர் கூறிய விடயம் "தான் இதனை வாசிக்கவே இல்லை" என்றார். இப்படித்தான் எங்களது ஆசிரியர்களது பலரின் பரிதாப நிலை காணப்படுகிறது. அவ்வாறென்றால் மொழியின் மீதான பற்றை, வாசிப்பின்மீதான பற்றை எவ்வாறு மேம்படுத்துவது?

நமது நாட்டில் தமிழ் மொழியானது நீண்டகாலமாகவே பாலர் முதல் பல்கலைக்கழகம் வரை போதிக்கப்பட்டு வருவதுடன் சகல பாடங்களும் தாய்மொழியிலேயேதான் கற்பிக்கப்பட்டும் வருகின்றன. இருப்பினும் மொழிப் பாடத்தில் ஒரு தெகை மாணவர்கள் பரீட்சைகளின்போது வெளிப்படுத்துகின்ற அடைவுமட்டமானது பூச்சியமட்டத்தில் காணப்படுவது கவலை அளிப்பனவாகவே உள்ளது. காரணங்கள் பல கூறப்பட்டாலும் ஆரம்ப வகுப்புகளின் போது கற்பித்தல் முறையிலுள்ள குறைபாடுகளும், நவீனத்துவமிக்கதான தொழில்நுட்ப ரீதியிலான கற்றல் - கற்பித்தலை விடுத்து, காலத்திற்குதவாத பாரம்பரிய கற்றலை மேற்கொள்வதன் பயனாக வாசிப்பு, எழுத்து போன்ற திறன்களில் இருள் சூழ்ந்த தன்மையே இன்றும் தொடர்வதாக மொழி ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**வாசிப்பில் மூலம் கிடைக்கும் பலாபலன்கள்**

ஆகவே, வாசிப்பில் கூடுதலான பலாபலன்களை பெறவேண்டுமானால் பின்வரும் நடவடிக்கைகளிலும் ஆசிரியர்கள் ஆர்வம் செலுத்துதல் அவசியமாகும். கீழ்பிரிவு மாணவர்களுக்கு கதைகூறல், பாடுதல், நடித்தல், பாவனைசெய்தல், செய்துகாட்டுதல், வாசித்தல், பேசுதல், உரையாடுதல், பரிமாறுதல், எழுதுதல், வரைதல், விளக்கங்கள் கூறுதல் போன்றவற்றை உள்ளடக்கியதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளிலும், விளையாட்டுக்களிலும் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் மொழித்திறனை மேம்படுத்துவதற்கு ஆசிரியர் உதவலாம். இங்கு கற்றலின் ஊடாக மொழி பயன்படுகிறது. எனவே வாசிப்பு என்பது எழுத்தில் உள்ளவற்றை கண்களால் பார்த்து, வாயால் உச்சரித்து பொருளை உணர்ந்துவது என்பதாகும். வாசித்தல் மூலமாக சொற்களை காணுதல், உச்சரித்தல், பொருள் உணர்தல் ஆகிய மூன்று கூறுகள் உள்ளடங்குவதுடன், வாசித்தல் மாணவர்களிடையே பல்வேறு திறன்களையும் விருத்தி செய்யவும் உதவுகிறது எனலாம்.

பாடசாலைகளில் நடைபெறும் பல்வேறு புறக்கீர்த்தி நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் வாசிப்புத் திறனை அதிகரிக்கச் செய்யலாம். அதாவது காலை ஆராதனையின்போது நற்சிந்தனைகள் வாசித்தல், செய்திகள் வாசித்தல், மாணவர் மன்றங்களில் மாணவர்களை பேசவும், வாசிக்கவும் ஊக்குவித்தல். இவ்வாறு அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்குகின்றபோது இந்த மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல பேச்சாளர்களாகவும், அறிவிப்பாளர்களாகவும், சமுதாயத்தை வழிநடாத்துகின்ற மொழி வல்லமையுடையவர்களாகவும் அமைவதற்கான அடித்தளமாகவே இவ்வாசிப்புத்துறை ஒரு உந்து சக்தியாக அமைந்துவிடுகிறது என்றால் அது மிகையாகாது. அத்துடன் வருடந்தோறும் நடைபெறுகின்ற மொழித்தின விழாக்களை பாடசாலைகள் மட்டத்தில் அனைத்து மாணவர்களும் பங்குபற்றக்கூடியவாறாக நிகழ்வுகளை ஒழுங்கு செய்து மொழியின் மகத்துவத்தை அடைவதற்கு இவைகள் பாலமாக அமைகின்றன. இதற்கு வீடும், வீட்டுச்சூழலும் உதவி நல்குதல் வேண்டும்.

**வாசிப்பில் நூலகங்களின் பங்களிப்பு**

கால்.:.போர் எனும் அறிஞர் "நல்ல நண்பர்களைத் தேர்தெடுத்ததற்குப் பிறகு அடுத்து நாம் தேர்ந்தெடுக்க வேண்டியது நல்ல புத்தகங்களைத்தான்" எனக் கூறுகின்றார். இதன் மூலம் நாம் உணர்ந்து கொள்வது நூல்களின் மகத்துவத்தையாகும். சிறந்த நூல்கள் சிறப்பான கல்வியை வழங்குவதற்கு உதவிடுகின்றன. இது எதன் மூலம் சாத்தியப்படுகிறது என்றால் வாசிப்பு மூலமேயாகும். நூலகங்கள் என்றபேரில் பட்டிதொட்டியெங்கும் அமைக்கப்படுகின்றன. ஆனால் வாசிப்பதற்கு ஓரிருவரைத் தவிர வாசிப்பதற்கு மக்கள் வருவதும் குறைவாகவே காணப்படுகின்ற நிலையில், "வீட்டுக்கொரு பத்திரிகை" வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். குறிப்பாக இந்த விடயத்தில் பல ஆசிரியர்கள் வாசிப்பில்கூட மந்தமாகவே காணப்படுகின்றனர். பத்திரிகை வாசிப்பது, நல்ல நூல்களை வாசிப்பது, ஆசிரியர்களுக்கென்று வருகின்ற நூல்களையாவது வாசிப்பது என்றால் அதுவும் இல்லை. ஆசிரியர்கள் தேடல் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. எத்தனைவீதமான ஆசிரியர்கள், அதிபர்கள் பத்திரிகை வாங்குகின்றார்கள், அல்லது நூலகத்திற்குச் சென்று தினசரிப் பத்திரிகை ஒன்றையாவது வாசிக்கின்றார்களா? என்றால் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களாகவே காணப்படுகின்றனர். இது கவலைதரும் விடயமாகும். எனவேதான் தினசரிப் பத்திரிகைகள், ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தலுடன் தொடர்புபட்ட வாராந்த, மாதாந்த இதழ்களை வாசிப்பதன் ஊடாக நாட்டு நடப்புக்களையும், உலக விவகாரங்களையும், கற்றலிலுள்ள நவீன விடயங்களையும் அறிந்து கொள்ளவதற்கும் வாசிப்பு பழக்கமானது ஆசிரியர்களிடத்திலும், பின்னர் அவர்கள் மாணவர்களிடத்திலும் ஊக்குவிக்கும் செயற்பாட்டை மேம்படுத்துதல் அவசியமாகும்.

சிறந்த வாசிப்பினை மேற்கொள்வதற்கு துணையாக நிற்பவை நூலங்களாகும். சில பாடசாலைகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்க்கின்றபோது அதனுள் இருந்து வாசிப்பதற்கு அருவருப்பாகவே இருக்கும். நூலகங்களின் சுற்றாடல் அமைதி நிறைந்த இடமாக காணப்படுதல் முக்கியமாகும். ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது ஒரு நூலகம் திறக்கப்படுகின்றபோது என்கிற தத்துவங்கள் நூலகத்தின் முக்கியத்துவத்தை பறைசாற்றி நிற்கின்றன. நூலகங்களில் பலதரப்பட்ட நூல்கள் காணப்படும். ஆரம்ப வகுப்புப் பிள்ளை தொடக்கம் உயர்கல்வி கற்கும் மாணவர்கள் வரை அங்கு நிறையவே நூல்கள் காணப்படும். இதனைப் பயன்படுத்துவதற்கு சிறுபராயத்திலிருந்து நூலகங்களுடனான உறவை பேணிபாதுகாத்துவருதல் சிறந்தது. பல்கலைக்கழங்கள், கல்விக்கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், தொழில் நுட்பக் கல்லூரிகள் மட்டுமன்றி தொழில் செய்கின்ற எந்தவொரு இடத்திலும் நூலகங்கள் காணப்படுகின்றன. இவை அந்தந்த மக்களின் அறிவுத்தாகத்தை கற்றுக் கொள்வதற்கான ஒரு பொழுது போக்காகவும் நூலகங்கள் துணைகின்றன.

எனவே, கற்றல் - கற்பித்தலுடன் தொடர்புடைய அதிபர்கள், ஆசிரியர்கள் வாசிப்பின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, உணர்த்தப்படுகின்றபோது அது மாணவர்களின் கற்றல் மேம்பாட்டுக்கும் வழிசமைக்கும். தரமான கல்வியை வழங்குவதற்கு தரமான நூல்களை வாசிப்பதன் மூலம் தரமிக்க அறிவினை பெறலாம். அது மாத்திரமன்றி நூல்களை நேசிக்கும் ஒரு சிந்தனையாளனாக சிறுபராயத்திலிருந்து ஊக்குவிக்கும் கருவியாகவும் பயன்படுகின்றது. இதன் மூலம் தலைசிறந்த வாண்மையாளர்களாக மிளிர்வதற்கு நூல்கள் முதன்நிலை வகிக்கின்றன.

**ஆசிரியர் வாண்மை விருத்திக்கு விருந்து படைக்கும் "அகவிழி"**

அதன் காரணமாகத்தான் இன்று ஆசிரியர்களை மையப்படுத்தி மாதந்தோறும் எம்மை நேக்கி வருகின்ற அகவிழி மாத இதழைக் கூறலாம். உண்மையில் இலங்கையில் ஆசிரியர்களை வாசிக்கத் தூண்டவும், கற்றல் கற்பித்தலுடன் தொடர்புபட்ட புதுப்புது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை உள்ளடக்கிய ஆசானாக எம்முன் காட்சியளிக்கும் அகவிழியை இன்று எத்தனையோ பாடசாலைகளின் நூலகங்களிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் காணப்படுகின்றன. இருப்பினும் ஒருசில பாடசாலைகள் இதனைக் கண்டு கொள்ளாதது ஆசிரியர் சமுதாயம் தொடர்கற்றலின்பால் கவனம் செலுத்தவில்லை என்பதைத்தான் கூறுவேண்டியுள்ளது. அதற்கான காரணமாக கூறுவது வாசிக்க நேரமில்லை என்பதாகும். இவ்வாறு கூறும் ஆசிரியர்கள் எப்படி மாணவர்களின் கற்றலைத் தூண்டப்போகின்றார்கள். அறிவுப்பிரவாகம் பெருக்கெடுத்து செல்கின்ற காலகட்டத்தில் பிரம்பும் வெண்கட்டியும் கொண்டு கற்பிக்கின்ற ஆசிரியர்களும் எம்மத்தியில் இருக்கின்றார்கள் என்றால் நாம் எங்கே இருக்கின்றோம் என்பதை சற்று நிதானித்துப் பார்க்க வேண்டியது ஆசிரியர்களாகிய நமது கடமையல்லவா? சிறந்த கருத்தாடல்கள் சிறந்த பலனைத் தரும் என்பார்கள். இதனைத்தான் இன்று அகவிழி ஆசிரியத்துவத்தை நோக்கிய கருத்தாடல்களை செய்து வருகின்றது. மாதாந்தோறும் ஒரு இதழை பெறுகின்றவர்களாக நாம் மாறுகின்றபோது அது எமது வாண்மை விருத்திக்கு தக்க துணைபுரியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்றே நாம் துணிந்து கூறலாம்.

****

## இப்படியும் ஒரு ஆசிரியரா?

அண்மையில் ஒரு பாடசாலைக்கு தரம் 5 கற்பிக்கும் ஆசிரியரையும், அவரது வகுப்பறை செயற்பாட்டையும் அறிந்து ஆலோசனை கூறுவதற்காக சென்றிருந்தேன். அதிபரை சந்தித்து வருகைக்கான விடயத்தை தெரிவித்துவிட்டு வகுப்பறைக்குச் சென்றேன். வகுப்பறை அடைக்கப்பட்டு வகுப்பறை முழுவதும் பழைமையான படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன. ஆசிரியர் வகுப்பறையின் மூலையொன்றில் அமர்ந்திருந்தவாறு "வாருங்கள் சேர்" என்று வரவேற்று உட்காரும்படி கூறினார். "பரவாயில்லை" என்று கூறிவிட்டு அவரை கற்பிக்கும்படி வேண்டினேன். நானும் இரண்டு பாடவேளைக்கு அவ்வகுப்பறையில் அவர் கற்பிக்கும் முறையை அவதானித்தேன். எச்சந்தந்தர்ப்பத்திலும் அவர் எழும்பி நின்று கற்பிக்கவே இல்லை. நீண்ட தடி(கம்பு), மேசையில் அலங்கோலமாகக் காணப்படும் பயிற்சிக் கொப்பிகள் ஒருபுறம், இன்னும் பல பயிற்சிப் புத்தகங்கள். கற்பித்தலின் இடையே மாணவர்களை அழைத்து கரும்பலகையில் எழுதுமாறு பணிக்கப்படுகின்ற முறை, நவீன கற்பித்தல் உபகரணமின்றி கரும்பலகையும், வெண்கட்டியும் கொண்ட உபகரணம். பின்நிலை மாணவர்கள் போடும் சப்தங்கள் ஒருபுறம் அவர்களை "டேய் பேசாதீங்க" என்கிற வார்த்தைப் பிரயோகம், மேலே பார்த்தால் ஒட்டறை பூத்த கருமேங்கள் தலைக்கு மேல் விழும் நிலையில் காணப்படுகின்ற வகுப்பறையின் உட்கூரை, தனித்தனியாக ஒரு மாணவனுக்கு இன்னொரு மாணவனின் தொடர்பற்ற நிலை இவ்வாறு அடிக்கிக் கொண்டே போகலாம் அவ்வகுப்பறைக் காட்சியை...

பாடம் முடிவடைந்தவுடன் ஆசிரியரை நோக்கி "உங்கள் பாடத்திட்டம், பாடக்குறிப்புக்கள், ஏனைய பதிவுகள் எங்கே காண்பியுங்கள்" என்றபோது அவர் கூறிய விடயம் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நான் எனது இருபத்தைந்து வருட சேவையில் வகுப்பறையில் கற்பித்தல் உபகரணமோ, பாடத்திட்டம், பாடக்குறிப்பு இன்றி வகுப்பறைக்குச் சென்றதே இல்லை. ஆனால் இந்த ஆசிரியர் இருந்த இடத்திலிருந்தவாறே "அதெல்லாம் எனக்குத் தேவையில்லை. இம்முறை எப்படியும் 10பேரை பாசாக்கினால் போதும் இதோ இன்னார் இன்னாரின் புத்தகங்கள் பல ஆயிரம் கொடுத்து வாங்கியுள்ளேன். இதனைவிட அதெல்லாம் எதற்கு சார்" என்றார்.

பாருங்கள்! இன்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் நிலையை? கல்வியமைச்சின் 2012/3இலக்க சுற்று நிருபத்தின்படி பாடசாலை நேரத்தில் வேறு எவரின் புத்தகங்களும் கற்பிக்கக்கூடாது, அரசினால் வழங்கப்பட்டுள்ள பாடபுத்தகங்களை கற்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டும் தனிப்பட்ட ஒருசிலரின் வழிகாட்டல்களை பணம் கொடுத்து பெற்று அதனை ஒப்புவிக்கின்ற நிலையில் ஆசிரியர் சமூகம் காணப்படுவது வெட்கக்கேடானது என்பதை உணர்ந்து கொண்டேன். இன்று வகுப்பறையில் தரப்பட்ட விடயங்கள் இருக்க வேறொரு பக்கம் மாணவர்களை அழைத்துச் சென்று அதிக சுமையை சுமக்க வைப்பதானது கல்வியின் மீது வெறுப்பை ஊட்டும் செயலாகவே உணரப்பட்டுள்ள இக்கால கட்டங்களில் நவீன முறையில் அமைந்த சிறந்த வாண்மைத்துவத்தை பின்பற்றும் ஆசிரியர்களுக்கு மத்தியில் இவ்வாறான பிற்போக்குடையவர்கள் இருக்கும் வரை எப்படி மாணவர்களை முன்னேற்றுவது. வகுப்பறையை உயிரோட்டமாக வைத்திருப்பது! ஓடிந்துபோன கற்பித்தல் முறைகளும், செயலிழந்துபோன கற்றல் உபகரணங்களும் சிறந்த ஆளுமையுள்ள மாணவர் சமூகத்தை உருவாக்கிவிடுமா என்ன? ஆலோசனை கூறினாலும் ஏற்றுக் கொள்ளும் மனோ நிலை காணப்படுமா? பழைய பல்லவிதான் பாடும். இந்நிலையைப் போக்க முன்வருகின்ற ஆசிரியர்களே கருத்தாளமிக்கவர்கள் என்று கூறலாம் அல்லவா? இவரைப்போன்ற ஆசிரியர்கள் எம்மத்தியில் இருந்தால் அவர்களை கட்டாய லீவில் அனுப்பிவைப்பதில் தவறிருக்காது என்றே நான் கூறுகின்றேன். நீங்களும் இவரைப் போன்று இருந்தால் இதனைப் வாசித்தவுடன் மாற்றமுறும் ஆசிரியராக மாறுங்கள் என்பதே என் அவா?

மீண்டும் சந்திப்போம்

இப்படிக்கு,

மாணவர்களின் மேம்பாட்டில் தன்னை உருக்கிக் கொண்ட ஒரு ஆசிரிய ஆலோசகனின் உள்ளத்திலிருந்து..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட கல்வி தேவைப்படும் சிறார்களை இனங்காணுதல்

விசேட கற்றல் குறைபாடுள்ள பிள்ளைகளுக்கான கல்வி வாய்ப்புக்கள் அரிது. உள்ளடக்கல் கல்விக் கொள்கை இருக்கின்ற போதும் சேவைகளின் தரம் மேம்படுத்தப்படல் வேண்டும். கடுமையாக வலதுகுறைந்த பிள்ளைகளுக்கு சிற்சில மாகாணங்களில் வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. எனவே விசேட கற்றல் தேவை உள்ள பிள்ளைகளுக்கு விசேட கல்வி கற்கை நெறிகளும் நிறுவனங்களும் அமைக்கப்பட வேண்டும். உள்ளடக்கல் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட போதும் பல பாடசாலைகளில் இதனை அமுல்படுத்தக் கூடிய அடிப்படை பௌதீக வசதிகள் இல்லை. எனவே பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களில் இந்த வசதிகளை ஏற்படுத்தல் உள்ளடங்க வேண்டும். சகல பாடசாலைக் கட்டுமானங்கள், புதுப்பித்தல்கள், புதிய கட்டிடங்கள், புதிய பாடசாலைகள் அமைத்தல் ஆகியவற்றில் விசேட தேவை உள்ள பிள்ளைகளுக்கான பிரவேச வசதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். தற்போது அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மாகாண சபைகளின் ஆளுகையின் கீழ் வரவில்லை. எனவே மாகாண சபைகள் தமது தேவைகள் பற்றிய கணிப்பீடுகளை செய்து சிக்கனமான நிறுவன அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும். எவ்வித புவியியல் மற்றும் நிர்வாக எல்லைகள் பற்றிய தடைகள் எதுவுமில்லாமல் சகல சமூகங்களையும் சேர்ந்த கடுமையான குறைபாடுடைய பிள்ளைகளுக்கு உதவக் கூடிய தேசிய ரீதியான நிறுவனங்கள் இருக்க வேண்டும்.

தற்போது விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கு மூன்று முறைகளில் சேவைகள் வழங்கப்படுகின்றன. அவை பின்வருமாறு

- வதிவிட விசேட பாடசாலைகள்
- பாடசாலைகளிலுள்ள ஒன்றிணைக்கப்பட்ட அலகுகள்
- பொதுவான முறைமைக்கள் உள்வாங்குதல்

சாதாரண பாடசாலைகளில் ஒன்றிணைக்கப்பட்ட அலகுகளும் பொதுவான முறைமைக்குள் உள்ளடக்குதலும் ஏக காலத்தில் நடைபெறுகின்றன. அடுத்த நடவடிக்கை விசேட தேவையுள்ள பிள்ளைகள் சாதாரண பாடசாலைகளுக்குள் உள்வாங்குதலாகும். கீழே தரப்பட்டுள்ள அட்டவணை விசேட கல்வித் தேவைகளுள்ள சாதாரண பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது.

விசேட கல்வி தொடர்பான பொருத்தமான தந்திரோபயங்களை வகுக்க தற்போது பாடசாலைகளிலும் சமூகத்திலும் உள்ள அத்தகைய சிறார்களை இனங்காணுதல் மிகவும் முக்கியமானது. சுமார் 2 வீதமான சிறார்கள் தரம் 1 இல் சேருவதில்லை என மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் அநேகமாக கடுமையான குறைபாடுகள் உள்ள பிள்ளைகளாக இருக்கலாம். இத்தகைய பிள்ளைகளுக்கு விசேட கல்வி

| மாகாணம் | ஒன்றிணைக்கப்பட்ட மற்றும் பொதுவான முறைமை | | | | விசேட பாடசாலைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | தேசிய பாடசாலைகள் | | மாகாண பாடசாலைகள் | | | |
| | பாடசாலைகள | ஆசிரியர்கள் | பாடசாலைகள | ஆசிரியர்கள் | பாடசாலைகள | ஆசிரியர்கள் |
| மேல் | 14 | 25 | 91 | 13 | 10 | 183 |
| மத்தி | 15 | 15 | 218 | 21 | 02 | 31 |
| தென் | 11 | 13 | 63 | 63 | 04 | 87 |
| வடகீழ் | 04 | 04 | 07 | 07 | 01 | 15 |
| வடமேல் | 09 | 09 | 214 | 217 | 02 | 47 |
| வடமத்தி | 06 | 06 | 72 | 76 | 01 | 15 |
| சப்பிரகமுவ | 11 | 21 | 74 | 74 | 02 | 17 |
| ஊவா | 12 | 13 | 31 | 36 | 03 | 21 |
| மொத்தம் | 82 | 106 | 770 | 507 | 25 | 416 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படவேண்டும். இப்பிரச்சினை அபிவிருத்தியடையாத தோட்டங்கள் போன்றவற்றில் கடுமையாக உள்ளது. குடும்பங்களின் பருமன் சிறிதாகிறது. கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையை கல்வி அமைச்சு, மாகாண சபைகள் மதிப்பிட வேண்டும். இதே போல பாடசாலைகளும் விசேட கல்வி தேவைப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கையை மதிப்பிட வேண்டும். அத்துடன் குறைபாட்டின் வகை, அளவு ஆகியவையையும் கணிப்பிட வேண்டும். குடும்ப மட்டங்களில் இப்பிள்ளைகளை இனங்காண கல்வி அமைச்சும், மாகாண சபைகளும் பொது சுகாதார தாதிகளுடன் சேர்ந்து செயற்பட வேண்டும். பாடசாலைகளிலும் சமூகத்திலும் இத்தகைய பிள்ளைகளை அடையாளம் காணக்கூடிய பொருத்தமான கணிப்பீட்டுக் கருவிகளை நிபுணர்களின் துணையுடன் கல்வி அமைச்சுத் தயாரிக்க வேண்டும். அத்துடன் இந்த விபரங்களைத் திரட்டும் முறைகளையும் சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபைகளின் துணையுடன் கல்வி அமைச்சானது கடுமையாகப் பாதிக்கபட்ட பிள்ளைகள் பற்றிய குடும்பரீதியான விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் விசேட கல்வி ஆசிரியர்களின் பயிற்சி தொடர்பாக சில ஏற்பாடுகள் உள்ளன. ஆனால் விரிவாக்கப்பட உள்ள விசேட கல்வி ஏற்பாடுகளுக்கு பெருந்தொகை ஆசிரியர்கள் மற்றும் வளநபர்கள் தேவையாக இருப்பதால் இவர்களைப் பயிற்றுவிப்பதற்கான விசேட ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்கள் மற்றும் தோட்டப்புறங்களுக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தற்போதைய சூழமைவில் விசேட கல்விக்கான ஒரு தேசிய நிலையமும் சகல வசதிகளும் கொண்ட வலய வளநிலையங்களும் அமைக்கப்பட வேண்டும். விசேட கற்றல் தேவைகள் உள்ள குறிப்பாக பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, நடத்தைப் பிரச்சினைகள், பல்வகைக் குறைபாடுகள், கற்றல் குறைபாடுகள், வலிப்பு முதலான குறைபாடுகளுடைய சிறார்களுக்கான விசேட கல்வி ஏற்பாடுகளுக்கு ESDFP முன்னுரிமை வழங்கும். அத்துடன் விசேட கல்வி தேவைப்படும் ஏனைய வகுதியினரையும் மீத்திறன் கொண்ட பிள்ளைகள், தெருவோரப் பிள்ளைகள், உழைக்கும் பிள்ளைகள், யுத்தத்தில் ஈடுபட்டுள்ள பிள்ளைகள் ஆகியோரும் ESDFP யினால் உள்வாங்கப்படுவர். விசேட கல்வித் தேவைகள் உள்ள சிறார்கள் பாரிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர். இவர்களை இனங்கண்டு, வகுதிப்படுத்தி பொருத்தமான கல்வி ஏற்பாடுகளை வழங்குதல் மிகப் பெரிய சவாலாகும்.

**விசேட கல்வி பிரவேச வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள தந்திரோபாயங்கள்**

- விசேட கல்வித் தேவையள்ள பிள்ளைகளுக்கு நியாயத்தன்மை கொண்ட பிரவேச வாய்ப்புக்களை வழங்குவதற்காக பின்வரும் தந்திரோபாயங்களும் கொள்கைகளும் பின்பற்றப்படும்.
- விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகளை அடையாளம் காண புதிய தந்திரோபாயங்களும் கருவிகளும் விருத்தி செய்யப்படும்.
- 2008 ஆம் ஆண்டளவில் பொது சுகாதார தாதிகள், கிராமசேவையாளர்கள் ஆகியோரின் உதவியுடன் கல்வி அமைச்சும் மாகாண சபைகளும் குறைபாடுள்ள பிள்ளைகளின் விபரங்களைத் திரட்டும்.
- விசேட கல்வித் தேவைகளை மொழி அடிப்படையில் பாடசாலை மற்றும் கோட்ட ரீதியாக தேவைகளை கணிப்பிடும் ஆய்வு மேற்கொள்ளப்படும்.
- விசேட கல்விக்கான தேசிய நிலையம் மற்றும் மாகாண நிலையங்கள் வலுப்படுத்தல் மற்றும் அல்லது புதிதாக அமைத்தல்.
- தற்போதுள்ள நிறுவனங்களின் இயலளவை பொதுத்துறை, தனியார் துறை மற்றும் தொழில்வாண்மையாளரின் உதவியுடன் மேம்படுத்தல். அத்துடன் விசேட கல்வி நிலையங்கள் இல்லாத இடங்களில் புதியவற்றை பொதுத்துறை தனியார் துறை பங்காண்மையின் உதவியுடன் மாகாண சபைகள் அமைக்க வேண்டும்.
- விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகளை இனங்காண கிரமமாக ஆய்வுகளை மேற்கொள்ளல்
- விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகளுக்கு காலத்துக்குக் காலம் முகாம்கள் நடத்தி விசேட கல்வித் தேவைகள் பற்றி பெற்றோர், பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- விசேட கல்விக் கற்கை நெறிப் பாடத்திட்டம், கலைத்திட்டம் ஆகியவற்றை உருவாக்குவதோடு அவற்றை இற்றைப்படுத்தல்.
- கொழும்பு பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கல்விப் பீடங்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் விசேட கல்வி ஆசிரியர்களின் தொழில் வாண்மை மேம்படுத்துவதோடு உள்ளடக்கல் கல்வியில் சாதாரண ஆசிரியர்கள் பயிற்றப்படவும் வேண்டும்.
- பாடசாலை அபிவிருத்தி தலையீடுகள், புதிய பாடசாலைகள், மேலதிக கட்டிடங்கள், திருத்தங்கள் ஆகியவை உள்ளடக்கல் கல்விக் கொள்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைவிலகக் கூடியவர்களுக்கான தொழில் வழிகாட்டல்

குடித்தொகையின் 92மூ மக்கள் எழுத்தறிவு கொண்டுள்ளது. 66மூ இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்துள்ளனர். எனவே மிகுதி 8மூ மக்களுக்கு எழுத்தறிவு ஊட்டுதல் மட்டும் முறைசாராக் கல்வியின் பிரதான பணியாக இருக்க முடியாது. வளர்ந்தோர் ஓரளவு எழுத்தறிவு கொண்டுள்ளனர். கட்டாயக் கல்வியை முடித்துவிட்டு அல்லது க.பொ.த (சா.்.த) மற்றும் (உ.்.த) பரீட்சை எழுதிவிட்டு இடைவிலகுவோருக்கு தொழில் வழிகாட்டுதலே மிகவும் முக்கிய தேவையாக உள்ளது. தொழில் உலகைப் பற்றி எதுவும் தெரியாமலேயே அவர்கள் பாடசாலையை விட்டு நீங்குகின்றனர். தொழிற் கல்வியும், திறன் விருத்தி வேலைத்திட்டங்களும் இன்று வேறு அமைச்சுக்களிடம் உள்ளன. முன்னர் இவை கல்வி அமைச்சரின் கீழே இருந்தன. புாடசாலையை விட்டு நீங்குபவர்களுக்கு திறன் விருத்தி வேலைத்திட்டங்களை நடத்தக் கூடியதாக இந்த அமைச்சுக்களிடையே எந்த ஒரு இணைப்பாக்கமும் இல்லை. இலங்கையின் மூன்று தேசிய மட்ட நிறுவனங்கள், 5 பிரதேச நிலையங்கள், 52 தொழில் சார் நிலையங்கள், கொண்ட பரந்த தொழிற்பயிற்சி வலையமைப்பு இருந்த போது இது சுமார் 10000 பயிலுனர்களை மட்டுமே உள்வாங்குகிறது. ஆத்துடன் போதிய பயிலுனர்கள் இல்லாத காரணத்தினால் ஓர் விரிவாக்கமும் தடைப்படுகிறது. 31 தொழில் பயிற்சி நிலையங்கள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை. புாடசாலையை விட்டு விலகுவோருக்கான வேறு பல தனியார் மற்றும் அரச திறன் அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளன. அவற்றில் பல குறுங்காலப் பயிற்சி நெறிகள். முறைசாரா கல்வி மற்றும் மாகாண சபைகள் இத்தகைய சேவை வழங்குவோரை தமது சேவைகளை விரிவாக்குமாறு கேட்டுக் கொள்ள முடியும். பாடசாலையை விட்டு நீங்கவோருக்கு கல்வி அமைச்சின் முறைசாராக் கல்விப் பிரிவு தொழில் வழிகாட்டல் மற்றும் திறன் விருத்தி வேலைத்திட்டங்களை வழங்க முடியும். 1977இல் திறந்த பொருளாதார முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அதிகரித்தன. சுதந்திர வர்த்தக வலயங்கள் விரிவாக்கம் பெற்றன. தொழில் பயிற்சிக்கான தேவை அதிகரித்தது. ஆனால் கல்வி முறைமை இவற்றுக்கு முகங்கொடுக்கக் கூடிய வேலைத் திட்டங்களை அமுல்படுத்தவில்லை. இந்த இடைவெளி பெரும்பாலும் தனியார் துறையினராலும் அரசு சாரா நிறுவனங்களாலுமே நிரப்பப்பட்டது. பல தென்னாசிய நாடுகளில் அதிகரித்த இடைநிலகல், ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்யாமை மற்றும் இடைநிலைக் கல்வியை பெரும்பாலான மாணவர்கள் கைவிடுதல் ஆகியவற்றால் மாற்றுக் கல்வி ஏற்பாடுகள் அதிகரித்துள்ளன. இலங்கையில் இடைவிலகல் குறைவு. சுமார் 83மூ மாணவர்கள் இடைநிலைக் கல்வியைத் தொடர்கின்றனர். இவ்வாறான ஆரோக்கியமான கல்வி நிலை காணப்பட்ட போதும் தொழில் சார் கல்விக்கான முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. பாடசாலையை விட்டு நீங்குவோருக்கான சிறந்த தொழில் வழிகாட்டல் சேவை இன்று இலங்கைக்கு மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. முறைசாராக் கல்வி இந்த செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். தனியார் மற்றும் பொதுத் துறையில் மனிதவள அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் இந்த செயற்பாடு ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

**அடிப்படைக் கல்விக்கான இரண்டாவது வாய்ப்பு**

பாடசாலைகளில் என்றுமே பிரவேசிக்காத அல்லது அடிப்படைக் கல்வியை பூர்த்தி செய்யாமல் இடைவிலகிய கட்டுளைஞர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள் மிகவும் வரையறுக்கப்பட்டவை. இவர்கள் மிக முக்கியமான சமூகக் குழுவினர். இவர்களுக்கான முறைசாராக் கல்வித் தேவைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். பாடசாலைகளுக்கு வெளியே உள்ள பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்புக்களை வழங்குவதற்கு தற்போது கல்வி அமைச்சு பெரிதும் முயற்சி செய்கிறது. எனினும் தொழில் உலகத்தில் சேர்வதற்கு தயாராக இருக்கும் இவர்களுக்கு தொழில் சார் திறன்களை வழங்குவதும் தொழில் முயற்சியாண்மை விருத்திக்கு வழி செய்வதும் முக்கியமானது. எனவே முறைசாராக் கல்வியின் குவிமையம் தனியார் மற்றும் பொதுத் துறை சேவை வழங்குனரூடாக தொழில் சார் முன்னெடுப்புகளுக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகவிழி" யின் தென்கிழக்கு நோக்கிய நகர்வு சிறந்த பலனைத் தந்திருக்கிறது

கடந்த 2012 ஜூன் மாதம் ஒன்பதாந்திகதி தென்கிழக்கிலுள்ள அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற விழுது மேம்பாட்டு மையத்தின் அகவிழி மாத இதழ் சஞ்சிகையினரின் வாண்மைத்துவத்தை நோக்கிய ஆசிரியர்களுக்கான மேம்பாட்டுக் கருத்தரங்கு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சிரேஷ்ட விரிவுரையாளர் வீ. தியாகராஜா, தேசிய ஆலோகசர் க. சாம்பசிவம் ஆகியோருடன் அகவிழி ஆசிரியர் வி. இந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு வாண்மைத்துவத்தின் சிறப்புக்களை எடுத்தாள்ந்தமை அங்கு வருகை தந்திருந்த ஆசிரியர்களுக்கு சிறப்பான தெளிவை ஏற்படுத்தியிருந்தன. பலர் இதனை கேள்வியுற்று வருகைதர முடியாமற் போனதை எண்ணி கவலை கொண்டதையும் பாடசாலை ஆசிரியர்கள் மத்தியில் பேச்சாடலில் உலாவின. குறிப்பாக இலங்கையின் கல்விப் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், கடந்த காலங்களில் கல்வியின் நிலை. இன்றுள்ள நிலை போன்ற பலதரப்பட்ட விளக்கங்கள் விரிவுரையாளர்களால் தரப்பட்ட விளக்கங்கள் மிகச் சிறப்பாக இருந்தன.

அதேவேளை இந்நிகழ்வின் மூலம் தென்கிழக்கு நோக்கிய நகர்வில் அகவிழி அகலக் கால்பதித்துள்ளது என்றே கூறலாம். கல்விக் கல்லூாரி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஆசிரியர் கலாசாலை, மத்திய கல்லூரிகள் என பலதரப்பட்ட கல்வி நிறுவனங்கள் அமையப்பெற்றுள்ள இப்பிராந்தியத்தில் அகவிழி சஞ்சிகையின் மீள் வருகையானது ஆசிரியர்கள் மத்தியில் வாசிக்கத் தூண்டியிருக்கின்றது. இன்று அம்பாறை மாவட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் இதன் அறிமுகம் வியாபிக்கப்பட்டுள்ளது. நிகழ்வினை விரிவான முறையில் ஏற்பாடு செய்திருந்த அம்பாறை மாவட்ட இணைப்பாளரும், எம் பிராந்தியத்தில் அகவிழி மாத இதழை எம்கைகளில் கொடுத்து உதவிக் கொண்டிருக்கின்ற, ஆசிரிய ஆலோசகருமான எஸ்.எல். மன்சூர் அவர்களின் தலைமையில் நிகழ்வுகள் சிறந்த முறையில் நடைபெற்றமை சிறப்பாக அமைந்திருந்தது. எதிர்வரும் காலங்களிலும் இதுபோன்ற வாண்மைத்துவத்தை நோக்கிய சிறந்த கருத்தாடல்களை மேற்கொள்வதன் மூலம் இப்பிராந்திய ஆசிரியர்கள் சிறந்த பயனை அடைவதுடன், மாணவர்களின் கற்றல் திறனும் மேம்படுவதற்கு அகவிழி உதவிடவேண்டும் என்றும் வேண்டுவதுடன், விழுது மேம்பாட்டு மையத்தின் நாடுதழுவிய ஆசிரியத்துவத்தினை நோக்கிய அகவிழி பயணத்தில் தென்கிழக்குப் பிரதேசமும் இணைக்கப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது.

........................

இப்படிக்கு,

ஆசிரியர் : ஐ.எல். ஜலால்டீன் (கல்விமாணி),

அக் ∴ அல் அக்ஷா வித்தியாலயம்,

பொத்துவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த 2012 ஜூன் மாதம் ஒன்பதாந்திகதி தென்கிழக்கிலுள்ள அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற விழுது மேம்பாட்டு மையத்தின் அகவிழி மாத இதழ் சஞ்சிகையினரின் வாண்மைத்துவத்தை நோக்கிய ஆசிரியர்களுக்கான மேம்பாட்டுக் கருத்தரங்கு.**



திரு.கே. சாம்பசிவம் கல்வி முகாமைத்துவ ஆலோசகர்




அகவிழி ஆசிரியர், V.S. இந்திரகுமார்



எஸ்.எல். மன்சூர் (கல்விமாணி)
ஆசிரிய ஆலோசகர்



திரு.வீ. தியாகராஜா, சிரேஷ்ட ஆலோசகர், சமூக விஞ்ஞானக் கற்கைகள் துறை, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்





கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்களும் வளவாளர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுது - கட்டுரை மற்றும் வரைதற் போட்டி

விழுது நிறுவனமானது கொழும்பு மாநகரில் 2012 செப்டெம்பர் 1ம், 2ம் தேதிகளில் முதன்முறையாக நடாத்தவுள்ள **'பொருட்காட்சியும் விற்பனையும்'** நிகழ்வுக்கு முன்னோடியாக தமிழில் கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளை நடாத்துவதற்கு எண்ணியுள்ளது.
இவற்றிற்கான தலைப்பு வருமாறு:

"பிரஜைகளினதும் தனியார் தாபனங்களினதும் சமூகவகை பொறுப்புக்கூறல் மூலம் நல்லாட்சி".
(Good Governance through Social Responsibility of the Citizen and Corporate sector)

## கட்டுரைப்போட்டிக்கான நிபந்தனைகள்

1. பொதுமக்கள் யாவரும் போட்டியில் பங்கு பற்ற முடியும்
2. ஒவ்வொரு பங்குபற்றுனரும் ஒரு கட்டுரையை இரண்டு பிரதிகளில் அனுப்ப வேண்டும்.
3. கட்டுரை தெளிவான தமிழில் 2000-2500 சொற்களுக்கு மேற்படாத வகையில் கையெழுத்துப்பிரதியாகவோ தட்டச்சுப்பிரதியாகவோ எழுதப்படல் வேண்டும்.
4. கட்டுரை ஏலவே பிரசுரிக்கப்படாததாயும் மூலப்பிரதியாகவும் இருக்க வேண்டும்.
5. கட்டுரையாளர் தமக்கான புனைபெயரொன்றினை வைத்திருக்க வேண்டும்.
6. தனியானதொரு தாளில் பங்குபற்றுனரின் ஏனைய விபரங்களை அதாவது பெயர், வயது, புனைபெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் குறிக்கப்பட்டு கட்டுரையுடன் இணைக்கப்படல் வேண்டும்.

## வரைதற் போட்டிக்கான நிபந்தனைகள்

1. பொதுமக்கள் யாவரும் போட்டியில் பங்கு பற்ற முடியும்
2. ஒவ்வொரு பங்குபற்றுனரும் ஒரு சித்திரத்தினை மட்டும் அனுப்ப வேண்டும்.
3. சித்திரம் தெளிவாக இருப்பதோடு தமிழில், தாளின் மறுபக்கத்தில் தலைப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
4. சித்திரம் மூலப்பிரதியாக இருக்க வேண்டும்.
5. தனியானதொரு வெள்ளை நிற வரைதற்தாளில் அல்லது பிறிஸ்டல் போட்டில் (கலப்பு ஊடகம்) பயன்படுத்துக.
6. பங்குபற்றுனரின் ஏனைய விபரங்களை அதாவது பெயர், வயது, புனைபெயர், விலாசம், தொலை பேசி இலக்கம் குறிக்கப்பட்டு சித்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
7. வெற்றிபெறும் சித்திரமும் தெரிவாகும் ஏனைய சிறந்த சித்திரங்களும் காட்சிக்காக வைக்கப்படும். காட்சிக்கு வைக்கப்படும் சித்திரங்கள் விற்பனை செய்யப்படின் அதன் பெறுமதியில் 50% வரைஞருக்கு சன்மானமாகக் கொடுக்கப்படும்

நடுவர்களின் தீர்ப்பு இறுதியானதாகும். போட்டிக்கு அனுப்பப்படும் சகல படைப்புகளும் விழுது நிறுவனத்திற்கு சொந்தமாவதோடு எவையும் திருப்பி அனுப்பப்படமாட்டாது. முடிவுத் திகதிக்குப்பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
விண்ணப்பங்களுக்கான முடிவுத்திகதி ஜூலை மாதம் 15ம் திகதி மாலை 5.00 மணியாகும். ஒவ்வொரு விண்ணப்பமும் மூடப்பட்ட கவரில் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

கட்டுரை அல்லது சித்திரப் போட்டி,
**விழுது**
3. டொரிங்டன் வீதி,
கொழும்பு 7.
சிறிலங்கா

**Viluthu**
3, Torrington Avenue, Colombo 07
Tel.: 011 250 6272
E-mail: ahavili.viluthu@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.இல.: 011-2422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021-2226693

**நியூ கேசவன் புக்ஸ்டோல்**
52 டன்பார் வீதி, ஹட்டன்
தொ.பே.இல.: 051-2222504,
051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை**
190 B புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா
தொ.பே.இல.: 024-4920733

**அன்பு ஸ்டோர்ஸ்**
14 பிரதான வீதி, கல்முனை
தொ.பே.இல.: 067-2229540

**புக் லாப்**
20, 22 சேர் பொன் ராமனாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290,
கை.தொ.இல.: 077-1285749

**இஸ்லாமிக் புத்தக இல்லம்**
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல.: 011-2688102

**கவிதா ஸ்ரோஸ்**
இல:05 பஸ் தரிப்பிடம், வவுனியா
தொ.பே.இல.: 024 - 2222012

**Noori Book Shop**
No. 143, Main Street, Kathankudi
Tel.: 065-2246883

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
309-A 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு
தொ.பே.இல.: 4515775, 2504266

**அபிஷா புத்தகக்கடை**
137, பிரதான வீதி, தலவாக்களை
தொ.பே.இல.: 052-2258437

**நூர் மொஹமட் நியூஸ் ஏஜண்ட்**
132, பிரதான வீதி,
கிண்ணியா-03
தொ.பே.இல.: 026-2236266

**குமரன் டிரேட் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா
தொ.பே.இல.: 052-2223416

**பிரியங்கா புத்தகக் கடை**
பிரதான வீதி,
பருத்தித்துறை
தொ.பே.இல.: 077-9303246

**கொலேஜ் நீட்ஸ் புத்தகக்கடை**
120, பிரதான வீதி,
அட்டாளைச்சேனை 14
கை.தொ.இல.: 077-3034469

**அல்குரசி புத்தக நிலையம்**
28, 1/2, புகையிரத வீதி, மாத்தளை
தொ.பே.இல.: 066-3662228

**Rajah's Book Centre**
No. 111, Main Street, Batticaloa
Tel.: 065-2222371

**United Book Centre**
No. 53, Trinco Road, Batticaloa
Tel.: 065-2222103

Printed by
Kumaran Press (Pvt) Ltd.
kumbhlk@gmail.com

ISSN 1800-1246

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/96NEWS/2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org